நிகரி
NIHARI
"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

Issue No - 06, 03th March 2002

வாரவெளியீடு
இதழ் 06 – மார்ச் 03, 2002
விலை ரூபா 12/=


**ஆர்சொன்னார் இல்லையென்று அதை?**

*இல்லையென ஆயிடுமோ ஏன் சும்மா என்றிருந்தால்*
*எல்லையிலா அதிகாரம் பலம் எல்லாம் - நல்லாய் கேள்*
*பல்லில்லை என்பாயோ பாய்ந்து கவ்வா நாயதற்கு*
*இல்லையெனில் அம்மாக்கும் இல்!*

—ஈழமோகம்

# ஒப்பந்தத்துக்குப் பங்கமா? சமாதானத்துக்கு குழிபறிப்பா?







சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யும் எத்தனங்கள் தொடங்கி விட்டன.

பிரதமர் ரணிலும் தமிழர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் "முட்டையில் மயிர் பிடுங்கும்" முயற்சியில் இப்போது ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியும் சிஹல உறுமய போன்ற பேரினவாதிகளும் ஆரம்பக் கட்டமாகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

எதிர்கட்சித் தலைவராகப் பதவியேற்றிருக்கும் மகிந்த ராஜபக்ச சமாதான முயற்சியை வரவேற்ற போதும் "ஜனாதிபதியை புறந்தள்ளி" சமாதானமா என்று கேட்கத் தவறவில்லை.

ஜனாதிபதியும் தமது அறிக்கைகளிலெல்லாம் தாமும் தமது அரசும் எடுத்த சமாதான முயற்சியின் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படும் சமாதான நடவடிக்கை என்றே இதனைக் குறிப்பிட்டுவருகிறார்.

ஆனால் நாட்டின் பாதுகாப்புக்கும், பாதுகாப்புப் யடைகளுக்கும் "பாதுகாப்பில்லாத" அம்சங்கள் ரணில் பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருப்பது பற்றியே ஜனாதிபதி அதிகம் கவலைப்படுவதாகத் தெரிகிறது. ஜனாதிபதி சமாதானத்துக்கு எதிரில்லையென்றாலும் ரணிலும் பிரபாகரனும் ஒரு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு நிரந்தர போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்து சமாதான முயற்சிக்கு வழிவகுத்து முத்திரை குத்தி விட்டார்களே என்ற ஆதங்கம் அவர் பேச்சுக்களில் தெரிகிறது.

தமக்கு இந்த ஒப்பந்தத்தைக் காண்பிப்பதற்கு முன்னரே தமிழர் சார்பில் பிரபாகரன் கையொப்பமிட்டு விட்டாரே என்பதும் ஜனாதிபதியின் ஒரு கவலையென்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்தக் கவலையை ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் இம் மாதம் நாலாம் ஐந்தாம் திகதிகளில் இந்த ஒப்பந்தம் மீதான விவாதம் நடைபெறும் போது கிளப்பப் போவதாகத் தெரிவிக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே மக்கள் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்து ஆட்சிக்குத் தெரிவு செய்தார்களென்றும் பயங்கரவாதப் புலிகளுக்கு நாட்டை விற்பதற்காக அவர்கள் வாக்களிக்கவில்லையென்றும் ஜே.வி.பி. கூறத் தொடங்கி விட்டது.

பிக்கு மாணவர்கள் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஜே.வி.பி. தனது பேரினவாதப் பிரசாரத்தை தொடங்கியிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல் பிரசாரம் இதற்கு நல்லவாய்ப்பாக அமைந்திருக்கிறது. சிஹல உறுமயவும் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்து நீதிமன்றத்தைத் தனது பிரசாரத்துக்குப் பயன்படுத்த முனைகிறது.

ஜே.வி.பி. சுவரொட்டிகளைத் தாராளமாக வெளியிட்டிருப்பதுடன் பொதுக் கூட்டங்களையும் நடத்தி வருகிறது.

சிங்களப் பொது மக்களைப் பொறுத்தவரையில் இம்முறை இந்த வகுப்புவாத, இனவாதப் பிரசாரத்தில் எடுப்டுவதாகத் தோன்றவில்லை. கடந்த காலங்களில் இப்படிச் சந்தர்ப்பத்தை பார்த்திருந்த குண்டர்களும், பிக்குகளும் இப்பொழுது பட்டறிவின் பயனாக முன்வரவில்லையோ,

1971- 1989ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியை நம்பி மோசம் போனதன் காரணமாக உண்மையான சமாதானத்தை நாடி நிற்கிறார்களோ தெரியவில்லை.

சந்திரிகா அம்மையாரும் "சமாதானத்துக்கு எதிரி" என்ற பெயர் வராமல் இந்த ஒப்பந்தத்தை அரசியலுக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பது பற்றியே சிந்திப்பதாகத் தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்கா அடிக்கடி பெளத்த பீடங்களுடன் தொடர்பு கொண்டும், அவர்களைச் சந்தித்தும் நிலைமையை எடுத்துக் கூறிவருவதும் நாட்டின் பொருளாதாரம் இனியும் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு இடமளிக்காது என்பதாலும் இந்த ஒப்பந்தத்தையோ அடுத்து வரவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளையோ குழப்புவதற்கு சிங்களப் பெரும்பான்மை மக்கள் இடமளிக்கும் நிலையில் இல்லை என்றே தெரிகிறது.


1956ஆம் ஆண்டில் சிங்களத்தை அரியணையில் ஏற்றுவதற்காக அதற்கு முன் சில வருடங்களாகவே சிங்கள மக்களுக்கு உணர்ச்சியூட்டுவதற்கு எஸ்.டபிள்யு ஆர்.டி.பண்டாரநாயக்க செய்து வந்த பிரசாரம் 1957ஆம் ஆண்டில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...

**3** பிரித்தாளும் தந்திரம் சில நுட்பங்கள்



**9** யானை புலி நாடகம்





**6** தேடி எடுத்த அடக்குமுறைச் சட்டங்கள்



**7** சந்திரிகா வால்வெள்ளியின் அஸ்தமனம்

## திருமலை:

# வேட்பாளர் பட்டியல் தயாரிப்பில் இழுபறி!!

# தமிழர் கூட்டமைப்பின் சாதனை!

தமிழர் கூட்டமைப்பு என்பது என்ன? இது பலருக்கும் புதிராகவே உள்ளது? காரணம் அவர்களின் செயற்பாடுகளேயாகும். பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தமிழ் மக்கள் மத்தியில் எந்தவித உணர்வையும் அது ஏற்படுத்தவில்லை.

இந்த நிலையில் மக்கள் மத்தியில் ஒரு ஊக்கத்தையும், விழிப்பையும் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை இருந்தது.

இச்சமயத்தில் தான் தமிழர் தேசிய கூட்டமைப்பு எனும் பாராளுமன்ற பதவிக்கான கூட்டமைப்பு தோன்றியது.

இப்படி உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் ஒரே இலட்சியம் பாராளுமன்ற பதவிகளை ஒரு அமைப்பில் கூடுதலாகக் கைப்பற்றுவதேயாகும். மற்றும் படி தமிழ் மக்கள் தேசிய பிரச்சினைகளோ, இலட்சியங்களோ, கொள்கைகளோ முதன்மையானதாக கொள்ளப்படவில்லை என்றே சொல்லலாம்.

திருகோணமலையிலும் மும்முரமாக இழுபறிகள் நடந்தன. ஒருவாறு தேர்தல் முடிந்து சம்பந்தரும் அமோக வெற்றி பெற்றதுடன் ஒரு கட்டம் நிறைவேறியது.

இந்த நிலையில் அடுத்த கட்டமாக உள்ளூராட்சி தேர்தல் வந்து தொலைத்தது. இந்த சிக்கலில் இருந்து தப்புவதற்கே உள்ளூராட்சி தேர்தல் தேவையில்லை என்ற கோஷம் எழுப்பப்பட்டது. என்றாலும் தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற நிலையில் வேட்பாளர் நியமனப் பட்டியல் தயாரிக்கும் வேலை வந்தது.

தமிழர் கூட்டணியில் நீண்ட காலமாக நகரசபைத் தலைமை பதவியில் கண் வைத்து இருந்த ஸ்ரீஸ்கந்தராசா இம்முறை தனக்கு தலைமை பதவி தர வேண்டும் என கோரிக்கை விடுத்து இருந்தார். அவரின் கோரிக்கை நியாயமாக இருந்தாலும் உள்ளுக்குள் புகைச்சல் இருந்தது.

ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு எதிரான கோஷ்டி கட்சிக்கு வெளியில் இருந்து ஒருவரை போட்டிக்கு கொண்டு வந்து நிறுத்தியது. ஒற்றுமைப் படுத்தி வழி நடந்த வேண்டிய பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தர் மெதுவாக கொழும்புக்கு நழுவிவிட்டார்! விடயத்தை பெரிதாக்கும் செயலாக ஒரு வக்கீலின் கீழ் வேட்பாளர்களை தெரிவு செய்யும் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பட்டியலில் இடம் பெற நீ, நான் என பலர் ஆசையில் போர்க் கொடி தூக்கினர். இதில் வேடிக்கை ஒரு தொகுதியில் அண்ணன், தம்பி இருவரும் இடம் பெற சண்டை பிடித்தனர். இப்படியான அடிபிடி அமளியில் இளைஞர்களை சேர்ப்பதை வசதியாக மறந்துவிட்டனர்.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாட்கள் நெருங்கின. ஆனால் கூட்டமைப்போ, அது பற்றிக் கவலைப்படாது எந்த ஆயத்தமும் பெரிதாக செய்யாது இருந்தது. இறுதியில் கடைசி நாள் முதல் இரவு ஒரு மாதிரியாக ஸ்ரீஸ்கந்தராசாவை தலைமை வேட்பாளராக போட்டு பட்டியல் தயாரித்தது. அதிலும் ஒரு சிக்கல். ஏற்கெனவே குறிப்பிட்டது போல் ஒரு குறிப்பிட்ட வீதத்திற்கு இளைஞர்களை சேர்க்காமல் விட்டது ஆகும். கடைசி நேரத்தில் ஓடித்திரிந்து சில இளைஞர்களையும் சேர்த்துக் கொண்டனர். காலையில் வேட்பு மனுக்களை தயார் செய்து தாக்கல் செய்து விடலாம் என்ற நம்பிக்கையில் பட்டியல் வேட்பாளரை தெரிவு செய்த குழு கலைந்து சென்றது.

மறுநாள் அதாவது வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இறுதி நாள் அன்று பெரிதும் ஆவலுடன் வந்தனர். என்ன அதிசயம்? தயாரித்து வைத்துவிட்டுப் போன வேட்பாளர் பட்டியல் ஆவணங்கள், கோவைகள் ஒன்றையும் காணோம்! ஸ்ரீஸ்கந்தராசாவை விடக்கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியில் யாரோ ஒரு முக்கிய புள்ளி யாவற்றையும் இரவோடு இரவாக அப்புறப்படுத்திவிட்டது! இனி என்ன செய்வது, குழம்பிய நிலையில் அமைப்புக்குழு நின்றது?

மறுபடியும் பட்டியல் தயாரிக்கும் வேலை தொடங்கியது. ஆனால் நேரமோ போய்க் கொண்டிருந்தது. பிறப்புச் சாட்சி பத்திரம் தேடுதல், இன்னும் ஆவணங்கள் பல தேடுதல் என்ற நிலையில் பட்டியல் தயாரிக்கும் வேலை மெதுவாகவே நகர்ந்தது. பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இவற்றைப் பார்த்துவிட்டு "ஏதோ தயாரித்துக் கொண்டு வாருங்கள்" என்று முன்னரே கச்சேரிக்குச் சென்று இவர்களை எதிர்பார்த்து இருந்து கொண்டார். இந்தச் சூழ்ச்சியில் இவர் நல்ல பிள்ளைக்கு நடந்து கொண்டதாகவும், தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிட்டதாகவும் பின்னர் கதை பரவியது!

நேரம் நகர்ந்து கொண்டே போனது. பட்டியல் தயாரிப்போர் தயாரித்துக் கொண்டே இருந்தனர். முடிவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு இவர்கள் சென்றதால் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டது. ஒற்றுமை இன்மையால் சூதும் காழ்ப்புணர்ச்சியும் வென்று கொண்டது.

இப்போ என்ன? தேர்தலா நடக்கப் போகிறது? தேர்தலே நடக்காது இதற்கு ஏன் கவலைப்படுவான் என்று சுடலை ஞானம் பெற்றுத் திரிகின்றனர்.

தேர்தல் நடக்குமா, நடக்காதா? என்பது இங்கு முக்கியம் அல்ல. இந்த ஒரு சின்ன தேர்தல் விடயத்தில் பொறுப்பு இல்லாமல் பதவிக்காக காழ்ப்புணர்ச்சி கொண்டு அடிபட்டுக் கொள்ளும் இவர்களா தமிழ் மக்களுக்கு பாதை காட்டப் போகின்றார்கள்? என மக்கள் வெளிப்படையாகவே பேசிக் கொள்கின்றார்கள்.

தமிழ் மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டு வாடி வதங்கிப் போய் இருக்கின்றார்கள். பொருளாதாரத்தடை, பிரயாணத்தடை, அடிப்படை உரிமைத் தடை இன்னும் ஜனநாயக செயறபாட்டுத் தடை என பல்வேறு தடைகளால் பல்வேறு அமைப்புகளாலும் துன்பப்படுகிறார்கள். இவை நீக்கியதாக பத்திரிகைகளில் வந்தாலும் ஏதோ ஒரு விதத்தில் தொடருவதாகவே மக்கள் பேசிக் கொள்கின்றார்கள். இவை பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. என்னவெல்லாமோ சொல்லிப் பாராளுமன்றம் சென்றவர்கள் எல்லாம் முடிந்த பின் ஆட்களையே காணவில்லை!

சிறைகளில் எத்தனையோ தமிழ் மக்கள் அறியாமலும் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார்கள். அதைவிட தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்ப்பார் யாரும் இன்றி வளர்ந்து கொண்டே செல்கின்றது.

அன்றாடப் பிரச்சினைகள் பற்றி பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடச் சென்றால் அவர் சொல்லும் காரணம் ஏன் வந்தோம் எனச் சலிப்படைய வைத்துவிடும். "இது எல்லாம் பார்க்க நேரம் இல்லை. இப்போ தீர்வு தான் முக்கியம். அது பற்றித் தான் நாம் இப்போ யோசிக்கின்றோம், தீர்வு வந்தால் உங்கள் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடும் போய் வாருங்கள்" என்பார் பாராளுமன்ற உறுப்பினர். தீர்வு வருவது எப்போ? எங்கள் பிரச்சினை தீர்வது எப்போ?

சூரன் பல்வேறு வேடம் பூண்டு வருவது போல் எமது பாரம்பரிய தமிழ் கட்சி தலைமைகளும் பல்வேறு வேடம் பூண்டு மக்கள் முன் வந்து ஏமாற்றிவிடுவார்கள். எல்லாம் முடிந்த பின் அவர்களின் பதவியை காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்கள் அவர்களுக்கு பொருட்டல்ல!

எதை எதையோ எல்லாம் சாதிக்கும் என உருப் பெருக்கிக் காட்டிய கூட்டமைப்பு இன்று ஒருவரை ஒருவர் காழ்ப்புணர்ச்சியால் கவிழ்க்கும் பாரம்பரிய வலைக்குள் வீழ்ந்து விட்டது ஒன்றும் தற்செயல் நிகழ்வு அல்ல!

*- சுழியன்*

# ஒப்பந்தத்துக்குப் பங்கமா...

1ம் பக்கத் தொடர்ச்சி

ஜே.ஆர். ஜெயவர்த்தனா இனத்துவேஷத்தைக் கக்கி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக இருந்தது.

இதன் தொடர்ச்சியாக 1965ஆம் ஆண்டில் டட்லி - செல்வா செய்த இரகசிய ஒப்பந்தத்தை இடதுசாரித் தலைவர் அம்பலப்படுத்திக் கிழித்தெறியச் செய்வதற்கும் வாய்ப்பாக இருந்தது.

இந்த இனவாதக் கூச்சல்களும் பிரசாரங்களும் நாட்டை உள்நாட்டுப் போருக்குத் தள்ளி நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குப் போகும் நிலையை எட்டியது. இந்த நிலையில் மீண்டும் இனவாதக் கூச்சலுக்கும் போரைத் தொடருவதற்கும் சிங்களப் பொது மக்கள் தயாராக இருப்பதாகத் தோன்றவில்லை.

ஆனாலும் ஆயுத வியாபாரிகளும், தரகர்களும் அரசியல் ஆதிக்க வல்லூறுகளும், சமாதான முயற்சிகளுக்கு இடையூறுவிளைவித்துப் பயன் பெறுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்தையும் எவரையும் பயன்படுத்தத் தயங்க மாட்டார்களென்பதையும் எதிர்பார்க்க வேண்டும்!

இந்த நிலையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும் என்று ஜனாதிபதியை வற்புறுத்துவதற்காக கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்த சிஹல உருமய தீர்மானித்து இருக்கிறது என்பது இதற்கு இன்னொரு சான்று!

## கொள்ளையிடும் ஏஜன்டுகள்!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை அனுப்ப பல முகவர்கள் இப்போது முளைத்துவிட்டார்கள்,

ஒரு கிலோ பொருளை அனுப்ப ரூபா 130 முதல் 150 வரை அறவிடும் இவர்கள், பொருட்களை விமான மூலம் நான்கு ஐந்து நாட்களுக்குள் அனுப்பி வைப்பதாக கூறுவார்கள்.

வெளிநாடுகளிலிருந்து தமது அம்மா, அப்பா, சகோதரர்களைப் பார்க்கவென வந்து குவியும் பயணிகள், அவர்களுக்காக எடுத்துவரும் பரிசுப் பொருட்களை முழுமையாக விமான மூலம் கொண்டு செல்ல முடிவதில்லை. ஒருவர் 15 கிலோவுக்கு மேல் எடுத்துச் செல்ல முடியாது என்று கட்டுப்பாடு இறுக்கமாக விதிக்கப்பட்டிருப்பதால் இரத்மலானை விமான நிலையத்திற்கு அப்பால் பொருட்களை கொண்டு செல்ல முடியாமல் போகிறது. கட்டணம் செலுத்திக் கூட சற்று அதிகமான பொருட்களை எடுத்துச் செல்ல முடிவதில்லை.

இந்த நிலை முகவர்களுக்கு மிகவும் வசதியாகிவிட்டது.

150 ரூபா என்றாலும் பரவாயில்லை என்று நம்பிப் பொருட்களை அனுப்பிவிட்டுச் செல்பவர்களுக்கு, பணமும் போய் பொருட்களும் போய்ச் சேராத நிலை ஏற்பட்டு விடுகிறது. அல்லது போய்ச் சேரும் பொருட்களில் பாதிக்கு மேல் களவாடப்பட்டு விடுகின்றன. கேட்டால் வசதியாக 'ஆமிக்காரர் எடுத்திருப்பினம்" என்று கையை விரிக்கிறார்கள் முகவர்கள்.

அண்மையில் கனடாவிலிருந்து வந்த ஒருவர் அனுப்பிய பொருட்களில், கனடாவிலிருந்து தான் கொண்டுவந்த அனைத்துப் பொருட்களுமே அபகரிக்கப்பட்டு விட்டன என்று அங்கலாய்த்தார். இதற்கு ஒன்றும் செய்ய முடியாதா என்று யாழ்ப்பாணத்தில் நின்றபடி தொலைபேசியில் விசாரித்தார் அவர்.

அங்குள்ள முகவர்கள் 'தெரியாது" என்று சமாளிக்கிறார்களாம்.

'திரும்பி வந்தபின் பேசிப் பார்க்கலாம், ஆனால் தொழிலில் ஈடுபடுபவர்கள் திருடர்களாகவும் இருப்பதை எப்படி அனுமதிப்பது" என்பது அவரது அங்கலாய்ப்பு.

இதற்கு பொறுப்பான அமைச்சும் அதிகாரிகளும் பதில் சொல்வார்களா? (தேவைப்படின் முகவரின் பெயர் விபரங்களையும் தரலாம்.)

## இரண்டாம் ரகம்!

ரணிலும் பிரபாவும் செய்த ஒப்பந்தம் கையெழுத்தானது பற்றி பாராட்டும் மகிழ்ச்சியும் தெரிவிக்காதவர்களே இல்லை எனலாம்.

நல்லது நடக்கிறதோ இல்லையோ, இது வெற்றிகரமாக முன்னேறுமோ இல்லையோ என்ற சந்தேகங்களுக்கு அப்பால், ஒரு முக்கியமான துணிச்சலான வரவேற்கத்தக்க முயற்சி என்று பலரும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனாலும் இந்த கைச்சாத்தினால் சங்கடத்திற்குள்ளானவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்களுள் முக்கியமானவர் ஜனாதிபதி சந்திரிகா.

தன்னால் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்ட நோர்வேயின் அனுசரணையுடன், தான் சாதிக்க முடியாத ஒரு உடன்படிக்கையை பிரபாகரனுடன் 'நாரிப் பலமில்லாத" ரணில் செய்து சாதித்துவிட்டதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. இதனால் அதிலே எப்படிப் பிழைபிடிக்கலாம் என்று இப்போது தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார். எப்படியாவது இந்த ஒப்பந்தம் செயலற்றுப் போய்விடாதோ என்ற அங்கலாய்ப்பில் 'என்னுடன் கலந்தாலோசிக்கவில்லை" என்றும் தான் 'அதிருப்தி"யுற்றிருப்பதாகவும் அறிவித்து வருகிறார்.

நாளுக்கு நாள் உடன்படிக்கைக்கு எதிரான அவரது கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன. இல்லாமல் ஆக்க ஏதாவது வாய்ப்பு தனது அதிகார வரம்புக்குள் கிடைக்காதா என்று அவர் பரபரத்துக் கொண்டிருப்பதாக அவரது பேச்சுக்கள் உணர்த்துகின்றன.

'யார் குற்றியாவது அரிசியாகட்டும்" என்று நினைப்பது பொது நலனை விரும்புவோர் கைக் கொள்ளும் நெறிமுறை.

அரிசிக்குப்பதில் உமிவந்தாலும் பரவாயில்லை, அது நான் குற்றியதாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் சுயப்பெருமையும், சுயநலமும் கொண்டவர்கள்.

நமது ஜனாதிபதி இரண்டாவது ரகம்.

## செய்வார்களா?

புரிந்துணர்வு உடன்படிக்கையின் முன்னுரையில், இன்றைய இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட நாட்டு மக்கள் அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்கள் மீதான விரோத மனப்பாங்கை முடிவுக்கு கொண்டு வரவும் வேண்டுமென்பதை இரு தரப்பும் உணர்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து, இந்தப் பிரச்சினையுடன் நேரடியாக சம்பந்தப்படாத குழுக்களும் இப்பிரச்சினையின் விளைவுகளை அனுபவிக்கின்றனர் என்றும் குறிப்பாக மக்களினதும் அவர்களது சொத்துக்களதும் பாதுகாப்பு தொடர்பான இவ்வொப்பந்தத்தின் பகுதிகள் முஸ்லிம் மக்களுக்குப் பொருந்தும் என்று குறிப்பிடுகிறது.

இது ஒரு முக்கியமான குறிப்பு.

தெளிவாகக் கூறப்படாவிட்டாலும் முஸ்லிம் மக்களதும் அவர்களது சொத்துக்கள் தொடர்பாகவும் உடன்படிக்கை கவனமெடுத்திருப்பதை இது காட்டுகிறது.

ஆக, இதே பத்தியில் பலதடவை கேள்வி எழுப்பிய ஒரு விடயத்தை மீண்டும் ஒரு முறை குறிப்பிட விரும்புகிறேன்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்கும் வீடுவாசல்களுக்கும் பாதுகாப்பாக திரும்ப இந்த உடன்படிக்கை வழிவகுப்பதாகக் கொள்ளலாமா?

சற்று தெளிவாக இதுபற்றி புலிகள் ஒரு அறிவிப்பை வெளியிட்டால் என்ன?

ஒரு நல்ல, தமிழ் முஸ்லிம் நல்லுறவுக்கான, ஆரம்பமாக அது அமையுமே?

செய்வார்களா?

- டி. சிவராம்

# பிரித்தாளும் தந்திரம்:
# ஆதிக்க அரசுகள் கையாளும் சில நுட்பங்கள்

மிதவாதி - தீவிரவாதி என்பது நவீன பிரித்தாளும் உத்திகளின் அடித்தளமாக விளங்கும் ஒரு கருத்தியலாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை மழுங்கடிப்பதற்கும், ஒடுக்கும் அரசுகள், ஏகாதிபத்தியங்கள் என்பவற்றை அண்டிப் பிழைக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு அறிவியல் - சமூக - அரசியல் உயர் அந்தஸ்த்தை வழங்கிடவும், அவ்வரசுகள், ஏகாதிபத்தியங்கள் என்பவற்றின் ஒடுக்குமுறை அதிகாரத்தின் அடித்தளத்தைக் கேள்விக்குள்ளாக்குபவர்களை, எதிர்ப்பவர்களை நாகரீகத்திற்கும், மனித விழுமியங்களுக்கும், பகுத்தறிவுக்கும், எதிரான கும்பல் என சித்திரிப்பதற்கும் மேற்படி மிதவாதி - தீவிரவாதி அல்லது பயங்கரவாதி என்ற 'முரண் சோடி' மிக நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது.

எதிர் கெரில்லாப் போரியலின் முக்கிய அங்கங்களான 'அமைதிப்படுத்தல்' (Pacification) மற்றும் 'ஒரு வரையறைக்குள் முடக்கி வைத்தல்' (containment) என்பவற்றிற்கு இந்த மிதவாதி - தீவிரவாதி (பயங்கரவாதி) எனும் முரண்சோடி மிக அடிப்படையானதாகும்.

நீதியும் நியாயமும் உள்ள போராட்டங்களை குருட்டுத்தனமானவையாகக் காட்டி அவற்றை 'நியாயத்தன்மை அற்றவையாக்க' (de-legitimize) இந்த மிதவாதி - தீவிரவாதி (பயங்கரவாதி) என்ற விடயம் பயன்படுத்தப்படுகிறது.

மிதவாதி - தீவிரவாதி என்ற பிளவை ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும் ஒரு தேசத்தில் அல்லது வர்க்கத்தில் உண்டாக்கி, அதை நுட்பமாகப் பேணி வளர்த்து, அந்தச் சமூகத்தின் போராடும் உளவலுவைச் சிதைப்பதை நவீன ஏகாதிபத்தியங்கள் ஒரு பெரும் அறிவியற் துறையாகவே கொண்டுள்ளன.

மிதவாதி - தீவிரவாதி என்ற 'முரண்சோடி' ஏன் தேவை? அது உண்மையில் எப்படித் தொழிற்படுகின்றது என்பதை அறிவதற்கு நாம் முதலில் அரசு எனின் என்ன எனக் காண வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட புவியியற் பரப்பில் வாழும் சமூகம் அல்லது சமூகங்களில் உள்ள சிலர் அப்பரப்பினுள் ஆயுதந் தாங்குவதற்கும், ஆயுதங்களை மொத்தமாகத் தயாரிப்பதற்கும் அல்லது வாங்குவதற்கும், வன்முறையைப் பிரயோகிப்பதற்கும், மேற்படி தேவைகளுக்கும் அவற்றை ஒட்டிய நிர்வாக அலுவல்களுக்குமென அப்புவியியற் பரப்பினுள் வரி அறவிடுவதற்கும் தனி ஏகபோகத்தை சண்டைகள் மூலமோ அல்லது ஒப்பந்த மூலமோ கைப்பற்றும் போது அல்லது பெறும் போது அதுவே அரசாகிறது. "ஒரு குறிப்பிட்ட குழுவினர் அல்லது வர்க்கத்தினர் வன்முறையை ஏகபோகமாக்கிக் கொள்ளும் போது படையும், கப்பம் வாங்குவதை ஏகபோகமாக்கிக் கொள்ளும் போது வரியும், இவையிரண்டின் அடித்தளத்தில் அரசும் உருவாகின்றன." என்பதே வரலாறு கூறும் உண்மை. இதை விடுத்து அரசுகள் தான்தோன்றிகள் என்பது போலவும், அவற்றிற்கு கேள்விக்கப்பாற்பட்ட ஒரு அடிப்படை நியாயப்பாடு உள்ளது போலவும், உச்ச மனித விழுமியங்களின் உறைவிடம் அவையெனவும், அவை என்றுமுள்ளவை போலவும் எம்மீது பாடப்புத்தகங்கள் ஊடாகவும், 'பெரியோர்' ஊடாகவும், கல்விமான்கள் ஊடாகவும் திணிக்கப்படுவது வெறும் பூச்சாண்டியே.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் (அப்போது கிழக்கிந்தியக் கம்பனி 1802இல் முதன் முதலாகத் தென் தமிழகத்தின் சிற்றரசுகளை (பாளையங்கள்) கைப்பற்றிய போது அப்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த மேஜர் பனர்மன் (Maj.Bannerman) என்பான் ஒரு பொது ஆணையை (proclamation) வெளியிட்டான். அதில் இரண்டே இரண்டு முக்கிய விடயங்கள் காணப்பட்டன.

ஒன்று கைப்பற்றப்பட்ட பாளையப்பட்டுகளின் (சிற்றரசுகள்) மக்கள் எவருமே ஆயுதந் தாங்கக் கூடாது, முடியாது. ஆயுதங்களை வைத்திருப்பது குற்றம்.

இரண்டு, பாளையங்களின் வரி அறவிடும் உரிமை கிழக்கிந்தியக் கம்பனிக்கு அதாவது பிரித்தானிய ஏஜென்டுகளுக்கு மட்டுமே உண்டு என்பதாகும்.

இதன் பின்னர் தமிழ் சமூகப் பாரம்பரியத்திற்கே உரிய ஊர்காவல் முறை கடுமையாக ஒழிக்கப்பட்டது. வளரி (Boomerang) நெடு ஈட்டி போன்ற தமிழர் போராயுதங்களும் போர்கலைகளும் வழக்கொழிந்து போயின. (இவற்றின் விரிவை 1992இல் Lanka Guardian சஞ்சிகையில் நான் எழுதிய Tamil Militarism என்ற ஆங்கிலத் தொடரிற் காண்க)

1945இல் அமெரிக்கா ஜப்பானை முறியடித்து தன் படைகளை தளபதி மக் ஆதரின் (Gen. Duglas Mc.Arthur) கீழ் அங்கு நிறுத்தியது. மக் ஆதர் ஜப்பானில் பிறப்பித்த முதல் கட்டளை அந்நாட்டின் மறவர் குழுவான சமுராய்கள் ஆயுதந் தரிக்கக் கூடாது, தமது பாரம்பரிய போர்க்கலைகளில் ஈடுபடக்கூடாது என்பதாகும்.

வரலாற்றில் இவ்வாறான உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். வன்முறையின் மீதான ஏகபோகமும் வரி மீதான ஏகபோகமும் அப்படியே இருக்கும் வரையில் தான் ஒரு அரசு அரசாக இருக்க முடியும். இந்த ஏகபோகத்தின் நியாயப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குவது தவிர்ந்த ஏனைய செயல்பாடுகளுக்கு அரசுகள் உங்களுக்குக் கொடுக்கும் சுதந்திரமே ஜனநாயகம் எனப்படுகிறது. 'எமது பாதுகாப்பை உறுதிப்படுத்திட வன்முறை மீதான ஏகபோகத்தையும் அதற்கான வரி எடுக்கும் உரிமையையும் நாமாக இன்னாருக்கு விரும்பியே கொடுக்கிறோம்' என ஒரு மக்கட் தொகுதியின் அங்கத்தினர் அனைவரும் உளமொத்துக் கொடுக்காத வரையில் மேற்படி இரு ஏகபோகங்களும் சமூகத்தின் ஒரு சாராருக்கு அநீதியானவையாகவே இருக்கும். (வரலாற்றில் மேற்படி நான் கூறியது போல நடந்ததுமில்லை)


இன்றைய உலகில் இன ஒடுக்குமுறைகளுக்கும் வர்க்க அடக்குமுறைகளுக்கும் அடித்தளமாக இருப்பது மேற்படி ஏகபோகங்களே. இவ் ஏகபோகங்களை கேள்விக்குள்ளாக்குகின்றவளோ கேள்விக்குள்ளாக்குகின்றவனோ தீவிரவாதி / பயங்கரவாதி என முத்திரை குத்தப்படுகின்றனர். அவற்றை கேள்வி கேட்காது சமரசம் செய்பவர் மிதவாதிகளென உயர்த்தப்படுகின்றனர். பேரினவாதக் குழுக்களுக்கும் ஒடுக்கும் வர்க்கங்களுக்கும் இவ்விரு ஏகபோகங்களின் மீது தாம் கொண்டுள்ள பிடியைப் பேணுவதற்கும் இந்த மிதவாதி - தீவிரவாதி / பயங்கரவாதி என்ற முரண்சோடி தேவைப்படுகின்றது. தம்மை எதிர்க்கும் வர்க்கம் / இனத்தை மிதவாதிகள் எனவும் தீவிரவாதிகள் / பயங்கரவாதிகள் எனவும் பிளவுபடுத்துவதன் மூலம் தமது இருப்பையும் நியாயப்பாட்டையும் உறுதிப்படுத்திக் கொள்ள அரசுகளும் ஏகாதிபத்தியங்களும் முயல்கின்றன.

இப்பிரித்தாளும் உத்தியை மேலும் புரிந்து கொள்வதற்கு நாம் வெகு தூரம் போகத் தேவையில்லை. ஆயுதப் போராட்டத்தின் ஊடாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை இந்திய உபகண்டத்திலிருந்து துரத்தியடிக்க வேண்டுமென 19ம் நூற்றாண்டின் பிற்கூற்றிலிருந்து பல முயற்சிகள் உருவாகலாயின. பல இந்திய சிற்றரசுகளும் பாலகங்காதர திலகர் போன்ற சிந்தனையாளர்களும் ஆயுதமேந்திய விடுதலை இயக்கமொன்றை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக தொடங்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். (தமிழகத்தில் மகாகவி பாரதியார், வ.வே.சு.ஐயர், சேதுபதி மன்னர்கள் போன்ற பலர் இந்த இயக்கத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர்)

இந்த ஆயுதப் போராட்டத்தின் துளிர்களை சரியாக இனங்கண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம் மிதவாதிகளை வளர்த்தெடுப்பதற்கான நிறுவன அடித்தளத்தையிட்டது. பிரித்தானிய அரசின் இந்திய சிவில் சேவை அதிகாரியான A.O. கியூம் (Hume) 1885ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசை நிறுவினார். இந்த நிறுவனத்தினூடாக உருவாகிய சமரசவாதிகளான / மிதவாதிகளான நேரு, மகாத்மா காந்தி, வல்லபாய் பட்டேல், போன்றோர் இந்திய விடுதலைக்கான ஆயுதப் போராட்ட இயக்கத்தை மழுங்கடிக்கவும் முறியடிக்கவும் எவ்வாறெல்லாம் உதவினர் என்பதை வரலாற்றில் கண்டு கொள்க. வெள்ளையரான கியூம் தொடங்கிய அதே கட்சியைத்தான் இன்று இத்தாலியரான சோனியாகாந்தி தலைமை தாங்குகிறார்.

சுபாஷ் சந்திரபோஸ் இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைமைத்துவத்தைப் பொறுப்பெடுக்க இருந்த வேளையிலே அவரை தடுத்து பிரித்தானியரின் நன்பரான நேருவை அப்பதவிக்குக் கொண்டுவர மகாத்மாகாந்தி பிரித்தானியருடன் இணைந்து செயல்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. நேருவும் காந்தியும் இந்திய தேசிய காங்கிரஸும் பிரித்தானியருக்கெதிரா அஹிம்சைப் போராட்டத்தை வலியுறுத்தினர். ஆங்காங்கு அவர்களின் அகிம்சை வழிப் போராட்டங்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டாலும் இந்திய தேசிய கொங்கிரஸின் தலைவர்களையே பிரித்தானிய அரசு சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்தது. அவர்களுக்கே இந்திய மக்களின் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்த்தையும் மறைமுகமான கௌரவத்தையும் வழங்கியது.





> ஒரு அரசிடமிருக்கக்கூடிய படைபலத்தைக் கொண்டு செய்யக்கூடியதை விட இந்த மிதவாதி - தீவிரவாதி ∴ பயங்கரவாதி என்ற பிரித்தாளும் உத்தியைக் கொண்டு சாதித்துவிடக் கூடியது அதிகமாகும் என்பதை வரலாற்றிலும் சம காலத்திலும் மேற்கூறியவை போன்ற பல உதாரணங்கள் மூலம் விளக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் புலிகள் களத்தில் பெற்ற பல பெரு வெற்றிகளின் பலாபலன்களை கணப்பொழுதில் இல்லாதொழிக்கக் கூடிய வல்லமை இந்த மிதவாதம்-பயங்கரவாதம் என்ற உத்திக்குண்டு.

அதேவேளை சுபாஷ் சந்திரபோஸ் போன்றோரால் தனக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்ட இயக்கத்தை பயங்கரவாதமென அது முத்திரை குத்தியது. கடுமையான ஒடுக்குமுறையையும் ஏவிவிட்டது. தமிழர்களிடையே காணப்பட்ட போர்ச் சாதிகளான கள்ளர், மறவர் என்போர் மேற்படி தனக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சியில் சம்பந்தப்படலாம் என்ற அச்சத்தில் அவர்களை குற்றப் பரம்பரையினர் (Criminal Tribes) என சட்டம் இயற்றி அவர்களை தமிழ் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்தது. (பசும் பொன் முத்துராமலிங்க தேவரின் தலைமையின் கீழ் இவர்களில் பலர் பின்னர் சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய விடுதலை இராணுவத்தில் இணைந்து கொண்டனர்) இந்திய விடுதலைக்கான ஆயுதக் கிளர்ச்சியை பயங்கரவாதம் என்ற போர்வையின் கீழ் ஒடுக்கவும் அழிக்கவும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் எடுத்த நடவடிக்கையின் விளைவாகவே மகாகவி பாரதியார் போன்றோர் பிரான்ஸ் அரசின் கீழ் இருந்த புதுவைக்கு தப்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இந்திய விடுதலை இயக்கத்தை மிதவாதிகள் - பயங்கரவாதிகள் எனப் பிளவுபடுத்தி சந்தர்ப்பவாதம் சமரசவாதம் என்பவற்றில் ஊறித் திளைத்த தலைவர்களையும் கருத்தியலையும் திட்டமிட்டு வளர்த்தெடுத்ததன் மூலம் பிரித்தானிய ஏகாதிபத்தியம்

1. ஜேர்மன் மற்றும் ஜப்பானியப் பேரரசுகளின் செல்வாக்கு தனக்கெதிராக தென் ஆசியாவில் காலூன்றாமல் பார்த்துக் கொண்டது.

2. இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின்னரும் இந்தியப் படைத்துறையும் புலனாய்வுத்துறையும் குறிப்பிட்ட காலம் வரை தன் செல்வாக்கில் இருக்கும்படியும் பார்த்துக் கொண்டது.

இன்று இதே பாணியைப் பின்பற்றி இந்திய அரசு காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தையும், நாகலாந்து விடுதலைப் போராட்டத்தையும் மிதவாதி - தீவிரவாதி / பயங்கரவாதி என்பதன் மூலம் பிளவுபடுத்தி பிரித்தாண்டு வருகிறது. அங்கு நடைபெறும் ஆயுதப் போராட்டத்தை மழுங்கடிக்கவும் குழப்பவும் திசை திருப்பவும் நியாயப்பாடற்றதாக்கவும் இந்திய மத்திய அரசு பாறூக் அப்துல்லா என்ற பழம் பெரும் "மிதவாதத்" தலைவரை எங்ஙனமெல்லாம் பயன்படுத்தி வருகின்றது என்பதை காஷ்மீர் விடுதலைப் போராட்டம் பற்றி மேலோட்டமாக வாசித்து வருபவர்களும் அறிந்திருப்பார்கள் என நினைக்கின்றேன்.

ஒரு அரசிடமிருக்கக்கூடிய படைபலத்தைக் கொண்டு செய்யக்கூடியதை விட இந்த மிதவாதி - தீவிரவாதி /பயங்கரவாதி என்ற பிரித்தாளும் உத்தியைக் கொண்டு சாதித்துவிடக் கூடியது அதிகமாகும் என்பதை வரலாற்றிலும் சம காலத்திலும் மேற்கூறியவை போன்ற பல உதாரணங்கள் மூலம் விளக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் புலிகள் களத்தில் பெற்ற பல பெரு வெற்றிகளின் பலாபலன்களை கணப்பொழுதில் இல்லாதொழிக்கக் கூடிய வல்லமை இந்த மிதவாதம் -பயங்கரவாதம் என்ற உத்திக்குண்டு. ஒரு பக்கம் 'நாங்கள் வன்முறையை வெறுக்கிறோம். ஆயுதமேந்தியவர்கள் மீது பட்ட காற்றுக்கூட எம்மீது பட்டுவிடக்கூடாது' எனக் கூறிவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை அரசியல் நாகரீகம் தெரிந்தவர்கள், பிரச்சினைகளைப் புரிந்து பேசக்கூடியவர்கள் என சிங்கள அரசும் சிங்களப் புத்திஜீவிகளும் அவர்களை ஆதரிக்கும் மேற்கத்திய அரசுகளும் அழுத்திக் கூறுகின்றன. அதேவேளை மேலைத்தேய ஊடகங்கள், ஆய்வாளர்கள், அவர்களுடைய செல்வாக்கிற்கு உட்பட்ட எமது பல்கலைக்கழகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கின்ற தமிழ் முட்டாள்கள் என்பவரும், எமது விடுதலைப் போராட்டத்தை நடத்துபவர்கள் கல்வியறிவு அற்ற சிறார்கள், அரசியல் தெரியாதவர்கள், குற்றச் செயல் புரிபவர்கள், சமூக விரோதிகள் எனப் பலவாறாகத் தொடர்ச்சியாகவும் அழுத்தமாகவும் சித்திரித்து வருகிறார்கள். ஒரு முறை கலாநிதி ராதிகா குமாரசாமி அவர்கள் லங்கா காடியன் சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

புலிகள் தாய் மொழி வழிக் கல்வி கற்றவர்களாதலால் அவர்களுக்கு

தொடர்ச்சி 9ம் பக்கம்...

## விடுபட்டுப் போய்விடக் கூடாத சில விடயங்கள்

# எந்தத் தீர்வினதும் உண்மையான எதிரிகள் யார்?

**சிங்கள மயமாக்கப்பட்டுவிட்ட உத்தியோகக் குழாத்தின் நாற்பது வருடகால இலைமறைகாய் நடவடிக்கை பற்றிய ஓர் உஷார் படுத்துகை**

- சி.சகாதேவன்

சிங்களப் பத்திரிகைகள் குறிப்பிட்டபடி இலங்கையின் 'சனவர்க்கப்' போரில், முதலாவது தடவையாக ஒழுங்கமைக்கப்பட்ட முற்று முழுதான ஒரு போர் நிறுத்தம் வந்துள்ளது.

இதன் மூலம் பின்வரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

1. போர் நிறுத்தம்
2. பேச்சுவார்த்தைகளுக்கு இடம் கொடுக்கும்.
3. அது ஒரு தீர்வுக்கு இட்டுச் செல்லும்
4. அந்தத் தீர்வு நடைமுறைப்படுத்தப்பட, சமாதானம் நிலவும்.

போரின் உக்கிரம் காரணமாகவும் நாம் பட்ட அழுத்தங்கள் காரணமாகவும் நமது மனது ஒன்றிலிருந்து நாலுக்கு 'டப்' என்று பாய்ந்து விடுகிறது.

இம்முறை இந்த தமிழருக்கு மாத்திரமல்ல, சிங்களவருக்கும் தான்.

என்னுடைய ஓட்டோச்சாரதி போர் நிறுத்தம் பற்றிய ஜே.வி.பி. விமர்சனத்தை, சமாதானத்துக்கு எதிர் "நிலைப்பட்டது" என்றார்.

இது சராசரி சிங்கள, தமிழ் எதிர்பார்ப்பு. சாதாரண முஸ்லிம்கள் இது பற்றி, என்ன கருதுகிறார்கள் என்பது அத்துணை தெளிவில்லை. ஆனால் முஸ்லிம் தலைவர்கள் இந்தப் போர் நிறுத்தத்தோடு தங்கள் நிலையும் தெளிவுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த - நியாயபூர்வமான - அக்கறை கொண்டுள்ளனர்.

ஆகவே இப்பொழுது காற்றுச் சமாதானத்தை வீசுகிறது. கடைகள் சமாதானத்தைப் பேசுகின்றன. கனடாவில் இருந்து 'பிச்சைக்காசில் பிடிச்ச மிச்சத்தை இங்கு முதலீடு செய்வது பற்றிய கதைகள் கூட இல்லாமல் இல்லை. ஆனால் ஒரு முக்கிய உண்மையை மறந்து விடக் கூடாது.

* பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவது இதுவல்ல முதல்தடவை.

* தீர்வுக்கு வருவதற்கான முயற்சி இப்பொழுது தான் நடைபெறவில்லை.

* முன்னரும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

* அந்தப் பேச்சுவார்த்தையின் காரணமாக சில தீர்வுகளும் வந்தன.

* 1960களில் மாவட்ட சபை

* 1980களில் (மீண்டும்) மாவட்ட சபை

அப்பொழுது மாவட்ட சபைத் தலைவராக வந்த நடராஜாவுக்கென யாழ். கச்சேரி உத்தியோகத்தர்களால் செய்யப்பட்ட 'சிம்மாசனக் கதிரை' யாழ். கச்சேரியில் 1990 வரை இருந்தது.

எத்தனை எதிர்பார்ப்புகள், எத்தனை தயார் நிலைகள் அதன் மேல்.

வடக்கு கிழக்கு மாகாண சபை வந்தபொழுதும்....

'எடு- பிடி -ஆள் - அம்பு ஏராளம் ஏராளம் ....

இறுதியில் நடந்தது என்ன?

மாகாண சபைகளின் தோற்றுவிப்பில் இது சிறுபான்மையினர் பிரச்சினைக்கான தீர்வு என்ற குறிப்பே இருக்கவில்லை. என்னவோ குருநாகலையும், காலியும் தங்களுக்கு அதிகாரப் பகிர்வு வேண்டும் என்று போராட்டம் நடத்தியது போல மாகாண சபை வழங்கப்பட்டத.

அதிகாரப் பகிர்விலும் பார்க்க அதிகார இறுக்கமே ஏற்பட்டது. திருமலை, வடக்கு கிழக்கின் தலைநகராக, மறுபுறத்தில் இரகசியமாக திருமலை கொழும்பின் ஒரு பகுதியாக்கப்பட்டது.

இவ்வாறாகத் தானே தீர்வு காண்கிற ஒரு வரலாறு உண்டு.

அதாவது அந்தத் தீர்வின் உள்ளடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொழுது, தமிழ் உத்தியோகத்தர்கள் ஆனந்த சுதந்திர கீதத்தை உரத்துப்பாட, சிங்கள உத்தியோகத்தர்கள் குறிப்பாக முக்கிய இடங்களிலிருந்த சிங்கள உத்தியோகத்தர்கள் அதிகாரங்களை இறுக்கிப் பிடித்தனர்.

திறைசேரி மறுக்கும்.

'ஹோம் மினிஸ்றி சறுக்கும்.

'மினிஸ்றி செக்கிறற்றறி வெறுக்கும்.

இப்படி எமக்குப் பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. உதாரணமாக

-தமிழ் உத்தியோக மொழி ஆயிற்று.

- 25வீத தமிழ் பேசுவோர் இருந்தால் அப்பிரதேசம் இருமொழிப் பிரதேசமாக வேண்டும். ஆனால், பதுளை, ஹற்றன் ஆகியன இன்னும் சிங்கள மொழிப் பிரதேசமே.

கதையை அதிகம் நீட்ட வேண்டியதில்லை.

நடந்தது இது தான்.

தீர்விலே ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதற்கு என்ன செய்ய வேண்டும்?

பேச்சுவார்த்தைகளின் பொழுதே தீர்வு எப்படி, யாரால், நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது பேசித் தீர்க்கப்பட வேண்டும். இது முக்கியம்.

இன்று இலங்கையில் தமிழ் உத்தியோக மொழிகளில் ஒன்று. வடக்கு கிழக்கிற்கு வெளியே உள்ள தமிழ்ப் பகுதிகளில் தமிழ் கிராம சேவகர்கள் இல்லை.

எனவே தான் பேச்சுவார்த்தை பற்றி சிந்திப்போருக்கு ஒரு விண்ணப்பம். தீர்வின் அமுல்படுத்துகை பற்றி விரிவான கருத்தொற்றுமை வேண்டும்.

தீர்வின் அமுல்படுத்துகை பற்றிய நடைமுறைகள், கண்காணிப்பு தீர்வின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்.

இது பற்றி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தெரியும். பிரபாகரனுக்கும் தெரியும். எனவே மிகுந்த கவனம் இருத்தல் வேண்டும்.

சிங்கள மேலாட்சிவாதத்தின் நடைமுறைப்படுத்துகையில் இன்று சிங்கள புத்திஜீவித தொழின்மையாளர் முக்கிய இடம் வகிக்கின்றனர். சிங்களத்தின் மேலாட்சியைப் பேணுவது தங்கள் கடமை என்று கருதுகின்றனர்.

சிங்கள இளைஞர்கள் கூட இந்த 'நிலதாரிவாத'த்துக்குப் பலியானவர்கள் தான். பேச்சுவார்த்தையானது தமிழ் மக்களுக்கு நாட்டைப் பிரித்து கொடுத்து விடும் என்று அவர்களுக்குச் சொல்லப்படுகிறது.

சிஹல உருமயவிலுள்ள முக்கிய அங்கத்தினர்கள் உத்தியோகத்தர்கள் மீண்டும் பேச்சுவார்த்தைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ள இவ்வேளையில், சிங்கள உத்தியோகத்தர் குழாம் இது வரை வந்த தீர்வுகளுக்கு வழங்கியுள்ள தீர்ப்பை மனதில் நிறுத்திக் கொள்வோமாக. ○

---

# வைக்கோல் பட்டடையில் "இந்து"

- பாலா



'வைக்கோல் பட்டறை நாய் மாதிரி' என்று சிலரின் செயலைப் பார்த்துச் சொல்வது வழக்கம்.

இப்பொழுது இதே பழமொழியை சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகைக்கும் சொல்லலாம்.

இந்து பத்திரிகை எந்த விஷயத்திலும் தன்னை மிஞ்சிவிட யாருமில்லை என்ற கர்வத்தை வெளிக்காட்டத் தவறுவதில்லை.

இலங்கையிலுள்ள சிலருக்கு அது ஒரு வேதப் புத்தகம் மாதிரி. இலங்கையில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இந்து அதற்கு சாமரம் வீசும். தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரினால் 'இந்து'வுக்குப் பிடிக்காது.

இலங்கை வானொலியில் இந்து சொல்வதைச் சொல்லாத நாளில்லாத காலமும் இருந்தது.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்று இந்தியா உட்பட உலக நாடுகள் பலவும் நீண்ட நாட்களாகவே குரல் கொடுத்து வந்தது உலகறியும்.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பது எல்லோருமே நீண்ட காலமாகச் சொல்லிவரும் யோசனையுமாகும்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தான் பேச்சு நடைபெற வேண்டுமென்பதே பிரச்சினையை அறிந்தவர்கள் கூறிவரும் யோசனை.

இருதரப்பும் நேரில் பேச்சு நடத்தி ஒரு தீர்வு காண்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென்பது கடந்த கால அனுபவம்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை விடுத்து செல்லையா குமாரசூரியர் மூலமோ, தியாகராஜா அருளம்பலம் மூலமோ சிறிமாவால் தீர்வு காண முடிந்ததில்லை.

விடுதலைப் புலிகளை விடுத்து ஈழத்துக்காக ஆயுதம் ஏந்தியவர்களால் தீர்வு காணமுடியுமென்பது பேச்சுக்களைக் குழப்ப உதவியதே தவிர பிரயோசனமெதுவும் ஏற்பட்டதில்லை.

இந்தியாவும் இலங்கையும் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று ராஜீவும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தம் தான் செய்ய முடிந்தது.

மாகாண சபையில் விடுதலைப் புலிகள் தவிர மற்றைய ஈழப் போராளிகள் ஆட்சியைப் பங்கு போட்டனர் எதுவும் உருப்படியாகவில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தித்தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமுகமான தீர்வு காணமுடியுமென்பது உறுதியாகி விட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெற்று இன்னமும் வைத்திய பரிசோதனையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் தங்கியிருக்க அனுமதித்தால் தலைவர் பிரபாகரனுடன் உடனுக்குடன் கலந்தாலோசிக்க வசதியாக இருக்குமென்று யோசனை தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் நாட்டில் தங்குவதா, இந்தியாவில் அவர் தங்குவதற்கு இடம் கொடுப்பதா? குடியே முழுகிப் போய் விடுமே!

இப்படி அவலக்குரல் கொடுத்தது தமிழ் நாட்டின் சென்னையிலிருந்து வெளிவரும் இதே இந்து!

பயங்கரவாதிகளுக்கு இடம் கொடுக்கவே கூடாது என்று இந்து குரல் எழுப்ப அங்குள்ள அய்யர்கள், ஐயங்கார்களின் அரசியல் அமைப்புகள் இதை ஒலிபெருக்கி ஊதி திராவிடர் தளபதியாக இருந்த தி.மு.க. கலைஞர் கருணாநிதி வழமையான நழுவலில் அறிக்கை விட ஜெயலலிதாவும் துள்ளிக் குதிக்க நெடுமாறன் மற்றும் சில தமிழர்களின் கருத்துக்கள் அமுங்கிப் போயின.

தமிழ் நாட்டில் அன்ரன் பாலசிங்கத்தைச் சில தினங்களுக்குக் கூட தங்க வைக்கக் கூடாது என்றும் இனிப் புலிகள் தமிழ் நாட்டில் காலூன்றுவதற்கு சிறிதும் இடமளிக்கக் கூடாதென்றும் கூறிய இந்துவும் அதன் ஊது குழல்களும் ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையில் இனிப்பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

இவர்கள் கருத்தை யார் கேட்டது? முதுகெலும்பில்லாத, வெட்கங்கெட்டதுகள் இலங்கையில் தன்மானத்துடன் தமிழர் வாழ்வதற்கு எது, எதை, எப்படி, எப்போது செய்ய வேண்டுமென்பதைத் தெரிந்து செய்பவர்களுக்கு அறிவுரை கூற முற்படுவது அறிவீனம் என்பதை எப்போது புரிந்து கொள்ளப் போகின்றன.

தானும் உண்ணாது உண்ணவரும் பசுவையும் உண்ணவிடாது குரைத்துக் கலைக்கும் வைக்கற் பட்டடை நாயைப் போன்ற இந்துவும், சுவாமி, வாழப்பாடி, ஜெயலலிதா போன்றதுகளும் இலங்கை அரசுக்கும் இவர்கள் ஏவி விடுபவர்களுக்கும் அறிவுரை கூற முற்படுகிறார்கள்.

"உன்னால் எதுவும் உருப்படியாகச் செய்ய முடியாது விட்டால் வாயை மூடிக் கொண்டு பேசாமல் கிடக்க வேண்டியது தானே!" இப்படி முன்பு தமிழ் நாட்டில் யாரோ யாருக்கோ சொன்ன ஞாபகம். அதையே இப்பொழுது இந்துவுக்கும் அதன் ஊதுகுழல் அரசியல்வாதிகளுக்கும் சொல்ல வேண்டும் போல இருக்கிறது.

இந்த புதிய முயற்சியின் வெற்றியோ தோல்வியோ இலங்கை அரசும், புலிகளும் தமக்கிடையேயான அடிப்படை வேறுபாடுகளைக் கைவிட்டு நம்பிக்கையான சூழ்நிலையை ஏற்படுத்துவதிலேயே தங்கியுள்ளது என்பது நிதர்சனமான விடயமாகும். புலிகள் தமது தனிநாடென்ற நிபந்தனையைக் கைவிடுவதற்கு தயாராக இருப்பதற்கான எந்தவொரு அறிகுறியும் இதுவரையில்லை என்று இந்து தனது தலையங்கத்தில் குறிப்பிட்டு ஏற்கெனவே இங்கு தீமூட்டியிருப்பவர்களுக்கு பெட்ரோல் எடுத்துக் கொடுக்கும் வேலையைச் செய்திருக்கிறது.

இதேவேளை இந்தப் புதிய உடன்படிக்கையானது இலங்கையின் கட்டமைப்பிற்குள் உடனடியான அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றை இந்து தலையங்கம் சுட்டிக் காட்டுகிறது.

இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் பிளவு ஏற்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று இந்து ஆலோசனையும் கூறுகிறது.

இந்துவின் யோசனைக்காக எவரும் இங்கு காத்திருக்கவில்லை. தமிழ் நாட்டில் தன்மானமில்லாத தமிழர்களை உருவாக்கியது போதும் ஈழத்தின் பக்கம் வாலாட்டாதே என்று சொல்வதைத் தவிர வேறுவழியில்லை என்றாலும் இங்கும் சிலர் உன்னையும் உன் போன்றவர்களையும் வெற்றிலை வைத்து அழைக்கக் காத்திருக்கிறார்கள்! ○

# சுயநிர்ணய உரிமை யாருக்கு பொருந்தும்?

- வி.ரி.தமிழ்மாறன்

நாம் என்ற அடையாளம் நிலையானது அல்ல என்பதும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மாறுபடும் தன்மையது என்பதும் சமூகவியலாளர் கருத்தாகும். இந்த அடையாளத்தை ஏன் கொள்கின்றோம் என்றால் அது முற்றிலும் சுயநலத்தின்பாற்பட்டதே என்பதிலும் தப்பில்லை. ஏனெனில் மனிதர்கள் ஒரு வகையில் அரசியல் விலங்கு என்பதால் அவர்களது சுயநலம் அரசியல் சம்பந்தப்படாததாக இருக்க முடியாது என்பதும் பெறப்படும்.. ஆனால் அடையாளம் கற்பனையானது என்னும் போது கற்பனையின் அடிப்படையில் சுயலாபத்தை எடைபோடுகின்றனரா என்ற வினா எழக்கூடும். எது கற்பனை? எது நிஜம்? என்பது கூட விவாதத்துக்குரியது தானே! ஆனால் மேற்கு நாட்டு அரசியலாளர்களும் முதலாளித்துவ அரசியலில் ஊறியவர்களும் இனத்துவ, மொழி, மத, கலாசார அடிப்படையிலான அடையாளங்கள் நிஜமானவை என்ற நம்பிக்கையிலிருக்க, மார்க்ஸிஸ்டுகள் அப்படியல்ல, பொருளாதார அடிப்படையில் வர்க்கம் சார்ந்த அடையாளந் தவிர ஏனையவை யாவும் பொய்யானவை அல்லது கற்பனையானவை என்று வாதிடுகின்றனர்.

இன, மத, மொழி, கலாசார, பிரதேச ரீதியில் கூட இந்த அடையாளங்கள் வரித்துக் கொள்ளப்படுகின்றன. அவ்வப்போது ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கமையவே இவை வரித்துக் கொள்ளப்படுவதாகவும் கொள்ளலாம். அச்சுறுத்தல் நிஜமானதா என்பதை வைத்தே அடையாளமும் நிஜமானதா அல்லது கற்பனையானதா என்பதை எடை போடலாம். இதற்கு வரலாற்றுப் பின்புலம் மிக அவசியமாகின்றது. அடக்குமுறைச் சம்பவங்களின் பின்னணி கவனமாக ஆராயப்பட வேண்டியதாகின்றது. போராட்டத்தை முன்னெடுப்போர் யார்? அதனை ஆதரிப்போர் யார்? ஆதரித்திருக்க வேண்டியவர்கள் ஆதரிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதெல்லாம் வரலாற்றுக் கண்ணோக்கில் ஆராயப்பட வேண்டும். ஆக, அடையாளம் என்பது முதலில் வலுப்பெறாமல் சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்துக்கான விருப்பு வெளிப்படுத்தப்பட முடியாததாகின்றது. ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட பிரெஞ்சு அறிஞரின் கருத்தும் இதே விருப்பையே சுட்டி நிற்கின்றதெனலாம்.

### லெனினும் வூட்ரோ வில்சனும்

உண்மையில் லெனின் கொண்டிருந்தளவுக்கு வரலாற்றின் முக்கியத்துவத்தை வேறெந்த சிந்தனையாளர்களும் ஆய்வாளர்களும் கொண்டிருக்கவில்லை எனலாம்.. ஆனாலும் அதற்கு முன்பாகவே ஸ்டாலின் சுயநிர்ணய உரிமை பற்றி எழுதியுள்ளார் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். அச்சம் என்பதும் விருப்பு என்பதும் உளவியல் சார்ந்தது. அது பற்றிய விவரிப்பைச் செய்யவோ தகவு பற்றிக் குறிப்பிடவோ அந்தச் சூழ்நிலையிலுள்ள மக்களைத் தவிர புறத்தேயுள்ளவர்களால் முடியாது என்பது விளங்கிக் கொள்ளப்படக்கூடியதே. ஆகவே யாரால் இந்த உரிமைக் கோரிக்கை முன்வைக்கப்படலாம் என்பதில் கருத்தியல் வேறுபாடு நிலவியது என்பது உண்மையேயாகும்.

இந்தக் கருத்துவேறுபாடு 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சர்வதேச அரசியலில் பலமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. 1917 இல் சோவியத்தில் புரட்சி வெற்றி பெற்று சோசலிஸ அரசாங்கம் அமைந்த கையுடன் லெனின் உலகின் மற்றைய பாகங்களிலும் அதேவிதமான ஆட்சியை எப்படிக் கொண்டு வரலாம் என்பதில் அக்கறை காட்டினார். மேற்குலகு இதனை எப்படித் தடுத்து நிறுத்தலாம் என்பதிலும் சோவியத்தைச் சீர்குலைப்பதற்கான வழிவகைகளிலும் கவனத்தைச் செலுத்தியது. இந்தப் போட்டியின் போது சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்து மோதல்களும் நிறையவே பங்களிப்புச் செய்திருந்தன.



லெனின்

சுயநிர்ணய உரிமை பற்றி 1913 இல் ஸ்டாலின் மிக விரிவான பிரசுரம் ஒன்றைத் தயாரித்திருந்தார். ஆனால் இந்தப் பிரசுரத்தைச் சோசலிஸ எழுத்தாளர்கள் பலரும் நீண்ட காலம் இருட்டடிப்புச் செய்திருந்தமை அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தேசம் என்பதுக்கு ஒரேயொரு தனித்த இயல்பு என்று எதனையும் வரைவிலக்கணமாகக் கூறி விட முடியாது. ஆனால் வேறு சில தனித்தன்மைகளின் ஒட்டுமொத்தமான கூட்டாக இயல்பொன்றைக் கூறி அதனுடன் ஏனைய தேசங்களின் சிறப்பம்சங்கள் எங்ஙனம் வேறுபடுகின்றன என்பதைக் காட்டுவதன் மூலம் தேசத்தின் தனித்தன்மை வெளிப்படுத்தப்படும். இந்தக் கூட்டில் உள்ளடங்கும் சிறப்பம்சங்கள் பற்றியே ஸ்டாலின் குறிப்பிட்டிருந்தார். தேசியம், மொழி, ஆள்புலம் அல்லது பொருளாதார நிலைமைகள் என்பவற்றை அவர் குறிப்பிடுகையில் பொருளாதாரம் என்பதைத் தனியான ஒன்றாகக் குறிப்பிடாமல் ஆள்புலம் அல்லது பொருளாதாரம் என்று குறிப்பிடுவதன் மூலம் ஒரே ஆள்புலத்துக்குள் இருக்கும் தேசம் என்றால் பொருளாதாரம் முக்கியத்துவம் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார் எனலாம்.

ஸ்டாலின் கூறியிருப்பதைப் பார்ப்போம்:

"A nation has the right to arrange its life on autonomous line. It even has the right to secede. But this doesn't mean that it should do so under all circumstances, that autonomy, or separation, will everywhere and always be advantageous for a nation, i.e., for the majority of its population, i.e., foe the toiling strata - - -.

But what solution would be most compatible with the interests of the toiling masses?

Autonomy, federation or separation?

All these are problems the solution to which will depend on the concrete historical conditions in which the given nation finds itself.

Nay, more. Conditions, like everything else, change, and a decision which is correct at one particular time may prove to be entirely unsuitable at another.

"தேசமொன்று தனது வாழ்வினை சுயாட்சி வழிகளில் அமைத்துக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. பிரிந்து போவதற்கான உரிமைகூட அதற்கு உள்ளது. ஆனாலும் சுயாட்சி அல்லது பிரிவினை என்பது எல்லாவிடங்களிலும் எப்போதுமே தேசமொன்றின் மக்கள் கூட்டத்தில் பெரும்பான்மையானவர்களுக்கு அதாவது உழைக்கும் மக்களுக்கு நன்மை பயப்பது என்பதால் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே அது அங்ஙனம் செய்ய வேண்டுமென்பதுமில்லை.

ஆனால் உழைக்கும் மக்களுடைய நலன்களுடன் முற்றிலும் ஒத்துப் போகக் கூடியதான தீர்வாக எது இருக்கும்?

சுயாட்சி, கூட்டாட்சி, அல்லது பிரிவினை?

இவை யாவுமே, குறிப்பிட்ட அத்தேசமானது தான் இருக்கின்றதான அந்த திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளில் தங்கியிருப்பதன் தீர்வினைத் தேவைப்படுத்தி நிற்கும் பிரச்சினைகளாகும்.

அத்துடன் நிறுத்தி விடவும் முடியாது. சூழ்நிலைகள் என்பன, ஏனைய ஒவ்வொன்றையும் போலவே, மாறுகின்றன என்பதுடன் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் சரியாக இருக்கும் ஒரு முடிவானது இன்னொரு சந்தர்ப்பத்தில் முற்றிலுமே பொருத்தமற்றதாகியும் விடலாம்."

> "தேசமொன்று தனது வாழ்வினை சுயாட்சி வழிகளில் அமைத்துக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. பிரிந்து போவதற்கான உரிமைகூட அதற்கு உள்ளது.

பின்னதாக லெனின் 1915-16க்கு இடைப்பட்ட காலத்தில் ஏகாதிபத்தியம் பற்றி எழுதுகையிலேயே சுயநிர்ணய உரிமை பற்றியும் கவனஞ் செலுத்தத் தொடங்கினார். இது தொடர்பில் அவர் 1916 மார்ச்சில் வெளியிட்ட பிரசுரங்கள் பின்னர் தொகுக்கப்பட்டன. இதில் முக்கியமானது 1917 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட Decree on Peace என்பதாகும். இதில் அவர் கூறியவற்றைப் பின்னால் பார்ப்போம்.

எப்படிப் பார்ப்பினும் ஆட்சி மாற்றத்தை வேண்டி நின்றவர்கள் யாவருமே ஏதோவொரு விதத்தில் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தைத் துணைக்கழைக்க வேண்டியிருந்தது. இந்த வகையில் தான் லெனினும் அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சனும் சுயநிர்ணய உரிமை பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இருவருமே இது பற்றி மிக விரிவாகக் கூறியிருப்பினும் தேவைப்படு வனவற்றைச் சுருக்கமாகத் தருவதற்கு முயற்சிக்கின்றேன். முதலில் லெனின் பலாத்கார இணைப்புப் பற்றி எழுதியுள்ளவற்றைப் பார்ப்போம்:

" - - - any incorporation of a small or weak **nation** into a large or powerful **State** without the precisely, clearly and voluntarily expressed consent and wish of that nation, irrespective of the time when such forcible incorporation took place, irrespective also of the degree of development or backwardness of the nation forcibly annexed to the given State, or forcibly retained within its **borders**, and irrespective, finally, of whether this nation is in **Europe** or in **distant overseas countries**."

[V.I. Lenin, Selected Works, (1977), Vol. II, p.475}

அதாவது, ---- "சிறிய அல்லது பலவீனமான தேசமொன்று அதனது திட்டவட்டமானதும் தெளிவானதும் தன்விருப்பிலானதுமாக வெளிப்படுத்தப்பட்ட சம்மதத்துடனும் அத்தேசத்தின் விருப்புடனும், அல்லாமல் பெரியதும் சக்திமிக்கதுமான அரசொன்றுடன் ஒன்றிணைத்தல். இது அத்தகைய பலாத்கார ஒன்றிணைப்பு எக்காலப் பகுதியில் நடைபெற்றது, அங்ஙனம் பலாத்காரமாக மேற்கூறப்பட்ட அரசுடன் ஒன்றிணைக்கப்பட்ட அல்லது பலாத்காரமாக அதன் எல்லைகளுக்குள் வலிந்து வைக்கப்பட்டிருக்கும் அத்தேசத்தின் வளர்ச்சியடைந்த தன்மை அல்லது பின்தங்கிய தன்மையின் அளவு எந்தளவு, அத்துடன் இறுதியாக அத்தேசமானது ஐரோப்பாவுக்குள் உள்ளதா அல்லது தூரத்தேயுள்ள வேறுநாடுகளில் உள்ளதா என்பது முக்கியமானதல்ல" --- என்று இதனைத் தமிழ்ப் படுத்தலாம்.

மேலே ஆங்கிலத்திலும் தமிழிலும் அடிக்கோடிடப்பட்ட சொற்களைக் கவனிக்கவும். லெனின் கையாண்டிருக்கும் பதங்கள் மிகக் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தேசம், அரசு, எல்லைகள், ஐரோப்பா, வேறு நாடுகள் என்ற பதங்கள் எமக்கு இங்கு மிகவும் உபயோகமாகின்றன. இச்சொற்கள் மிகவும் பொருள் பொதிந்த அரசியற் பிரயோகங்களாக உள்ளன என்பதையும் அவதானிக்க வேண்டும்.

தேசம் என்பதும் அரசு என்பதும் வேறு வேறு என்பதை நாமறிவோம். அரசுக்குள் தேசங்கள் பலாத்காரமாக ஒன்றிணைக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடும் அவர் இந்த உள்ளடக்கல் குறிப்பிட்ட தேசத்தின் சொந்த விருப்பிலமையாத போதிலெல்லாம் அங்கே சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்துக்கு இடமிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். சொந்த விருப்பு என்பதுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தகவுகளைத் தந்து இதில் ஏற்படக்கூடிய எத்தகைய தெளிவின்மைகளையும் அவர் நீக்கி விடுகின்றார். அங்ஙனமே எல்லைகள், ஐரோப்பா, தூரத்து நாடுகள் என்று பேசுவதன் மூலமும் உலகளாவிய தனது அரசியல் நிலைப்பாட்டை லெனின் பகிரங்கப்படுத்தி நிற்பதையும் காணலாம்.

இங்கே மூன்று விடயங்கள் எமது உடனடிக் கவனத்துக்குரியவை. அவையாவன: பலாத்காரத்தின் மூலம் ஒன்றிணைக்கப்பட்ட தேசத்தின் விடுதலை பெறுவதற்கான சுயநிர்ணய உரிமைப் பிரயோகம் அது விடுதலை பெறும் வரை தொடர்ந்து பாவிக்கப்படக் கூடியதாக இருக்கும் என்பதும் அத்தேசத்தின் பொருளாதார வளர்ச்சி நிலைமை கவனிக்கப்படத் தேவையில்லை என்பதும் அத்தகைய தேசமென்பது இறைமையுள்ள ஐரோப்பிய நாடொன்றுக்குள்கூட இருக்கலாம் என்பதுமாகும்.. இவை ஒவ்வொன்றுக்கும் விசேட தாற்பரியங்கள் உள்ளன.

தேசம் என்பதை வரையறுக்கும் போது மார்க்ஸிஸ்டுகள் அது பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த அல்லது சுதந்திரமானதாக முதிர்ச்சியடைந்ததாக இருக்க வேண்டும் என்று வாதிடுவதுண்டு. ஆனால் மேலுள்ள மேற் கோளில் லெனின் அதுபற்றி மறுதலையாகக் கூறியிருப்பதனை அவதானிக்கலாம். அங்ஙனமே, ஒருமுறை விடுதலை பெற்ற நாட்டுக்குள் மறுமுறை சுயநிர்ணய உரிமையைப் பிரயோகஞ் செய்ய முடியாது என்று வளர்முக நாடுகளில் வாதிடப்படுவதுண்டு. லெனின் அதற்கும் மாறாக, அத்தகைய இணைப்புத் தொடரும் வரை உரிமையும் தொடரும் என்கின்றார். மேலும், இறைமைமிக்க ஒரு நாட்டிலிருந்து இந்த உரிமைப் பிரயோகத்தின் மூலம் பிரிந்து போக முடியாது என்று இந்தியா போன்ற நாடுகள் உலக அரங்கினில் பலமாக வலியுறுத்தி வருகின்றன. ஆனால் லெனின் ஐரோப்பாவுக்குள்ளோ அல்லது தூரத்திலுள்ள நாடுகளிலோ என்று கூறியிருப்பதன் மூலம் குடியேற்றத்துக்கு உட்பட்ட நாடுகளுக்கு மட்டுமன்றி இறைமையுள்ள நாடுகளுக்கும் இதுபொருந்தும் என்றே கூறுகின்றார். ஏனெனில் அவர் அங்ஙனம் கூறும்போது ஐரோப்பாவுக்குள் எத்தகைய குடியேற்ற நாடும் இருந்திருக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

எனவே அடக்கப்பட்ட, ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றியே லெனின் பேசியிருப்பதைக் காணமுடிகின்றது. வேண்டுமானால் இங்கே இன்னொரு மட்டுப்பாட்டை நாங்கள் சேர்த்துக் கொள்ளலாம். "சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஒன்று நடைபெற்றால் அதில் அந்தத் தேசத்தின் பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களும் அப் போராட்டத்தைத் தீவிரமாக ஆதரிப்பார்களாயின் அதற்கு ஆதரவளிக்கும் கடப்பாடு சர்வதேச ரீதியில் உழைக்கும் வர்க்கத்தினருக்கு உண்டு" என்கிறார் லெனின்.

(தொடரும்)

# பயங்கரவாதத் தடைச்சட்டம்

# தேடி எடுக்கப்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள்!

-சிசைரோ

1977 பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் அடிப்படையில் வாக்கு வேட்டையாடியது. இத்தேர்தல் முடிவுகள் தமிழ்ஈழம் அமைப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பாகப் பயன்படுத்தப்படும் என்று கூட்டணியினர் கூறி வந்தனர்.

ஏற்கனவே ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொண்டு வந்திருந்த அரசியலமைப்பும் அதன் பின்னரான அரசியல், பொருளாதார நடவடிக்கைகளும் ஏற்படுத்தியிருந்த விரக்தியினால் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை அமோக வெற்றி பெறச் செய்தனர்.

குடியரசு உருவாகியமை மட்டுமன்றி தரப்படுத்தல், தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவங்கள், தங்கள் மீதான பாரபட்சமான கெடுபிடிகள் காரணமாகவும் இளைஞர்கள் மிகவும் கோபமுற்றிருந்த காலகட்டமிது. இதுவும் கூட்டணியின் வெற்றிக்கு நன்கு பயன்பட்டது. ஆளுங்கட்சி அத்தேர்தலில் அடைந்த படுதோல்வியினால் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பும் கிட்டியது.

கூட்டணித் தலைவர்கள் தேர்தல் மேடைகளில் கூறியவற்றுக்கும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்த அவர்களது செயற்பாட்டுக்கும் இடையிலிருந்த இடைவெளியானது இளைஞர்களை மேலும் விரக்தியின் விளிம்பிற்கே தள்ளிற்று எனலாம். அப்போது தமிழ்ஈழம் பற்றிய தீர்மானம் மட்டுமே வட்டுக்கோட்டை வழிவந்து இளைஞர்கள் கைவசமிருந்தது.

புதிய அரசியலமைப்பு ஆக்கப்பட்ட போது அதில் தமிழ் மக்களின் பங்குபற்றல் என்பது ஜனநாயக ரீதியில் மறுக்கப்பட்டு 1972 போலவே தேசியக் கட்சிகளிலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று காட்டும் வழக்கமான நாடகமும் அரங்கேற்றப்பட்டது. இது இளைஞர்கள் ஆயுதமேந்துவதைத் துரிதப்படுத்திற்று. அரசியல் அரங்கில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிக் கூட்டணியினர் அறிவிக்க அதற்கான பதிலளிப்பை இளைஞர்கள் ஆயுதமேந்திக் காட்ட முற்பட்டனர். இவ்வகையில் தான் அவர்களது கவனம் அரசாங்கத்தை ஆதரிப்போர் பக்கம் முதலில் திரும்பிற்று.



இதன் அடுத்த கட்டமாக, தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்கள், குறிப்பாக உளவுத்துறை சம்பந்தப்பட்டவாகள் மீது குறிவைக்கப்பட்டது.

பல்வேறு ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்று தனித்தனியான பெயர்களையும் பல்வகைத் தத்துவ விளக்கங்களையும் முன்வைத்துச் செயற்பட ஆரம்பித்தன. இவற்றின் செயற்பாடுகள் பற்றி நான் அறிந்திரப்பதைவிடக் கூடுதலான நிகழ்வுகள் அறிந்த எத்தனையோ பேர் எம்மத்தியில் இருக்கின்றார்கள். எனவே அது பற்றி நீண்டதாக நான் எழுதுவது பொருத்தமாக இருக்காது.

ஆனால் இச்செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே பொலிஸ் அலுவலர்கள் குறிவைக்கப்பட்டார்கள் என்னும் போது இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவருடன் சென்ற புலன்விசாரணை அதிகாரிகளும் கொல்லப்பட்டமை அரசாங்கத்தின் பாரதூரமான எதிர்வினையைக் கொண்டு வந்தது. அதனை உடன் அடுத்தே தமிழ்ஈழ விடுதலைப் புலிகளையும் அதையொத்த ஏனைய அமைப்புக்களையும் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1978 இல் கொண்டு வரப்பட்ட இச்சட்டத்திலேயே விடுதலைப் புலிகளுக்கு பிரத்தியேக இடம் வழங்கப் பட்டுள்ளமையைக் காணலாம்.

ஒருபுறத்தில் தமிழ் ஈழக்கோரிக்கை வலுப் பெற்றுவர மறுபுறத்தில் ஆயுதப் போராட்டமும் சூடுபிடிக்கத் தொடங்கிற்று. அமைப்புக்கள் தடை செய்யப்பட்ட போதிலும் வன்முறைகள் குறையவில்லை. அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களதும் தமிழ் பொலிஸ் அதிகாரிகளதும் பாதுகாப்பே அப்போது அரசாங்கத்துக்குப் பெரும் கவலையளிக்கும் விடயமாக இருந்தது.

உண்மையில் தமிழ் ஈழம் என்பது சாத்தியப்படுமா என்பது பற்றிக் கவனஞ் செலுத்துவதற்குக்கூட அந்நேரம் அரசாங்கம் தயாராக இருந்திருக்கவில்லை. அதனுடைய ஒரே கவலை வடக்கில் மட்டும் வன்முறையை எப்படித் தடுப்பது என்பது தான். அதாவது எப்பாடுபட்டாவது இளைஞர்களது ஆயுதப்போராட்டம் வளராமல் தடுத்துவிட்டால் ஏனைய விடயங்களைப் பின்னர் சமாளிப்பது என்பது சாத்தியமானதே என்று ஆட்சியாளர் நம்பினர். இந்த நம்பிக்கை தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் இருந்திருக்கலாம் என்பதை மறுப்பது கடினமானது. இங்கே நான் வலியுறுத்த விரும்புவது ஏற்பட்டுள்ள அரசியற் சூழ்நிலை என்பது வெறுமனே சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகப் பார்க்கப்பட்டதே தவிர அதன் பின்னாலுள்ள அரசியற் காரணிகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையே. ஏன் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்? தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான மாற்று வழிகள் என்ன என்பதில் அக்கறை காட்டப்படாமல் அதன் விளைவான ஆயுதமேந்தலை வெறுமனே வன்செயலாகப் பார்த்தமையே நிலைமையை இன்னும் மோசமாக்கிற்று எனலாம்.

கனடா போன்ற நாடுகளில் அரசியலமைப்புச் சிக்கல் ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சீர்திருத்த ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு சர்வன வாக்கெடுப்பு மூலம் மக்கள் கலந்தாலோசிக்கப்படுவர். இலங்கையில் குறிப்பிட்ட ஒரு பிரிவு மக்களது சம்மதமில்லாமல் அரசியலமைப்பு ஆக்கப்பட்டபோது அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதும் தடைச் சட்டங்களும் இராணுவமும் உதவிக்கழைக்கப்பட்டன. தனிப்பட்ட ரீதியில் தனக்கிருக்கும் அச்சுறுத்தலை உணர்ந்த அப்போதைய நீதியமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகமும் பேரினவாதத்தின் மிகவும் நுண்மான் நுழைபுலப் புத்திஜீவியும் அவ்விதச் செயற்பாட்டாளருமான அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் வடக்கை அடக்குவது எப்படி என்பதில் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டனர்.

'இயக்கங்களைத் தடைசெய்வதனால் எவ்வித பிரயோசனமுமில்லை. தண்டனை என்ன என்பதை வைத்தே மக்கள் சட்டத்துக்குப் பணிவதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கின்றனர். எனவே ஒவ்வொருவரையும் அச்சுறுத்தும் வகையிலான கைதுகள், தடுத்து வைப்புக்கள், தண்டனைகள் என்பவற்றைக் கொண்டு வந்தால் தான் மக்கள் முதலில் ஒதுங்கியிருக்கத் தொடங்குவர். அதன் பின்னர் கெரில்லாக்களைக் கையாளுவது சுலபமானது' என்று லலித்தின் மூளையில் அபார சிந்தனை தோன்றியது. சட்டத்துக்கு மக்கள் ஏன் பணிகின்றனர் என்பது பற்றிச் சட்டவியலில் விரிவாக ஆராயப்படும். அதிலுள்ள ஒரு கோட்பாடு தான் தண்டனைக்குப் பயந்தே மக்கள் சட்டத்துக்குப் பணிகின்றனர் என்பது. ஆனால் விடுதலைப் போராட்டங்களைப் பொறுத்தவரையில் இக்கோட்பாடு பொய்ப்பிக்கப்பட்டிருந்தாலும் லலித்தின் இன, வர்க்கச் சார்பும் அவரது இஸ்ரேலிய அனுபவமும் அவரை மேற்கண்டவாறு சிந்திக்கத் தூண்டிற்று. சில நாடுகளில் ஏற்கனவே பரீட்சிக்கப்பட்டதான அடக்குமுறைச் சட்டங்கள் தேடியெடுத்துப் படிக்கப்பட்டன. எந்தெந்த நாட்டுச் சட்டங்கள் அவை?

(தொடரும்)

## பயங்கரவாதம் எது? பயங்கரவாதிகள் யார்?

- பாலரட்ணம்

# தமிழ் இளைஞர்களுக்கு ஜே.வி.பி காட்டிய வழி!

தரப்படுத்தலால் தமிழ் இளைஞர்கள் உயர்கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு உயர்கல்வி கற்று வந்த மாணவர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்துத் துள்ளி எழுந்த போது இது வடக்கு மாகாணத்தவர்களைத் தான் பாதிக்கும் கிழக்கு மாகாணத் தமிழ் இளைஞர்களைப் பாதிக்காது. இதனால் அவர்களுக்கு நன்மையே என்றும் ஒரு குரல் எழுந்தது. தமிழ் இளைஞர்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த எழுந்த இக்குரல் அவர்களின் ஒற்றுமையால் அமுங்கிப் போனது!

தரப்படுத்தலுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் இரகசியமாகத் திரட்டிப் பட்டியல் தயாரித்தனர். இந்த மாணவர்களுக்குப் பின்னணியில் எந்த அரசியல் கட்சியைச் சாந்தவர்கள் நிற்கிறார்கள் என்பதையும் புலனாய்வுத் துறையினர் ஆராய்ந்து வந்தனர்.

இந்தச் சமயத்தில் இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தும் பொருட்டு புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாக மாறி அரசியல் அமைப்பில் சேர்ப்பதற்கு அரசியல் கட்சிகள் சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகளை விவாதித்துக் கொண்டிருந்தனர். தமிழ் மக்களின் சார்பாக நாடாளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக அங்கம் வகித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகள் அரசியலமைப்புச் சட்டத்துக்கு அடிப்படைப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தனர். தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கக் கோரும் இப்பிரேரணைகள் தமிழ் மக்களின் மொழி உரிமை, தமிழர் தாயகம் முதலியவற்றை உறுதிப்படுத்தும் அம்சங்களையும் தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆட்சி செய்யும் உரிமையுள்ள சமஷ்டி ஆட்சி அமைப்பை நிலைநாட்டுவதுமான பிரேரணைகளாக இவை இருந்தன.



திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை பிரதமராகக் கொண்ட ஐக்கிய முன்னணி அரசில் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டொக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா அரசியலமைப்பு விவகார அமைச்சராக இருந்தார். தமிழ் மக்களின் சார்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி எம்.பிக்களின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைப் பிரேரணைகள் ஒவ்வொன்றையும் சபையில் எடுத்துக் கொண்ட அமைச்சர் கொல்வின் ஒவ்வொரு பிரேரணையையும் வாசித்துக் காட்டி அதற்கு அவரே வியாக்கியானமும் தெரிவித்த பின் அதை விவாதத்துக்கு விடாமல் நிராகரித்தார்.

தமிழ் மக்களின் சார்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகள் அனைத்தும் விவாதிக்கப்படாமலே நிராகரிக்கப்பட்ட பின் இனியும் இந்த அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிப்பதில் பயனில்லை என்று தமிழ் அரசுக் கட்சியினர் முடிவு செய்தனர். இதன்படி மறுநாள் அரசியல் நிர்ணய சபை கூடிய போது தமிழரசுக் கட்சிக் குழுவின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சுருக்கமாக ஒரு அறிக்கையை தலைவரின் அனுமதியுடன் சபையில் விடுத்தார். அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் இனியும் தாங்கள் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என்பதால் இன்றைய சபைக் கூட்டம் முடிவடைந்து நாங்களும் மற்ற உறுப்பினர்களுடன் வெளியே செல்வோம். இதன் பின் இச்சபையின் கூட்டங்களின் கலந்து கொள்ள மாட்டோம். என்று அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அதாவது அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளி நடப்புச் செய்யவில்லை என்பதை செல்வநாயத்தின் அறிக்கை எடுத்துக் காட்டியது. தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் தமிழ் மக்கள் சார்பில் கட்சி பேதமின்றிச் சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகள் யாவும் விவாதிக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டபடியால் தமிழரசுக் கட்சியினர் அதன் பின் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதை வரலாற்றில் பதிவு செய்தனர்.

வட்டுக்கோட்டை எம்.பி. ஆ.தியாகராஜாவும் நல்லூர் எம்.பி அ.அருளம்பலமும் தமிழ் மக்களின் சார்பில் கலந்து கொண்டு புதிய குடியரசு அரசியலமைப்பில் கைச்சாத்திட்டனர். பௌத்த மதத்துக்கு முதலிடம் அளிக்கும் புதிய குடியரசு அரசியலமைப்பில் சிறுபான்மை மக்களுக்குப் பழைய அரசியலமைப்பில் பாதுகாப்பாக இருந்த 29வது சரத்தும் இல்லாமல் நீக்கப்பட்டிருந்தது.

இலங்கையைக் குடியரசாகப் பிரகடனம் செய்த மே மாதம் 22 ஆம் திகதியன்று கொழும்பில் முதலாவது குடியரசின் ஜனாதிபதியான வில்லியம் கோபல்லாவ நவரங்ககலா மண்டபத்துக்கு வெளியே மைதானத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். கோலாகலமாகக் கொண்டாட்டம் நடைபெற்றது.

இதேசமயம் இத்தினம் யாழ்ப்பாணத்திலும் மற்றும் வடக்கு கிழக்கிலும் துக்கதினமாகவும் எதிர்ப்புத் தினமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. புதிய குடியரசு அரசியலமைப்பின் பிரதிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. யாழ். இந்துக் கல்லூரி மைதானமும் கடைத் தெருவெங்கும் ஒரே எதிப்பு ஆர்ப்பாட்டங்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.

தொடர்ச்சி 9ம் பக்கம்...

# சந்திரிகா என்ற வால் வெள்ளியின் அஸ்தமனம்!

– நாசமறுப்பான்



தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனம் பிழையாக இருந்தால் சரி" என்று நினைக்கிற சிலர் நம்மத்தியில் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் தம்மை விடவும், தாம் செய்பவற்றை விடவும் எதிரணியைப் பற்றியும் எதிரணி என்ன செய்கிறது என்பதைப் பற்றியும் தான் அதிகம் அக்கறை காட்டுவார்கள். எல்லாப் பெருமையும் புகழும் தமக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் இவர்கள், எதிரணியின் ஒவ்வொரு செயலின் மீதும், அதனது வெற்றியின் மீதும் பொறாமை கொண்டு செயற்படுவார்கள். இவர்களது பேராசைக்கு அளவே இருக்காது. இந்தப் பேராசையும் பொறாமையும் ஒருவகை மனநோயாக மாறி, இவர்களைப் பிடித்து ஆட்டுவதன் காரணமாக அவர்கள் முன்பின் பார்க்காமல் எதையும் செய்யத் துணிந்து விடுவார்கள். வெறிபிடித்த ஒரு ஓநாயின் ஆக்ரோஷத்துடன் இவர்கள் அகப்பட்ட எல்லாவற்றின் மீதும் பாய்ந்து கொண்டிருப்பார்கள்.

நமது ஜனாதிபதி அவர்களும் இந்த நபர்களின் வரிசையில் ஒருவர்.

ஜனாதிபதி அதிகாரத்தை வைத்துக் கொண்டு செய்ய எவ்வளவோ நல்ல காரியங்கள் இருந்தன. அவற்றைச் செய்வதற்கு அவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் செய்ததெல்லாம், பாராளுமன்றத்தைக் கலைத்தது, தனக்குப் பிடித்தவர்களை அவர்கள் பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பதவி கொடுத்து கௌரவப் பிரஜைகளாக்க் கௌரவித்தது, யுத்தத்தை நடாத்தியது போன்றவை தான். நாட்டில் நிலவும் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய நேரடியான வழிகளில் இறங்குவதற்குப் பதில், அதை மேலும் சிக்கலாக்கி விடுகிற செயல்களிலேயே அவர் ஈடுபட்டார்.

நாட்டின் அரசுத் தலைவராகவும், முப்படைகளதும் பிரதம தலைவராகவும் இருந்த போதும் நாட்டின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கோ, சமாதானத்திற்கோ ஏற்ற விதத்தில் எந்த உருப்படியான செயல்களிலும் அவர் இறங்கியதில்லை. அனுமாரின் வால் போல அல்லது பீரிஸ்இன் பேச்சுப் போல முடிவுறாது நீளும் அவரது முடிவே இல்லாத செயல்கள் எல்லாம் வெறும் பயனற்ற செயல்களாகவே போய் முடிந்தன. எடுத்த எந்தக் காரியத்தையும், சொன்ன காலக் கெடுவுக்குள் அவர் நடாத்தி முடித்ததாக வரலாறே இல்லை. முதன் முதலாக ஜனாதிபதி பதவி ஏற்ற அன்று அவர் ஒரு வருடத்துள் ஜனாதிபதி பதவியை முடிவுக்குக் கொண்டு வருவதாகச் சொன்னார். இன்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியை ஏற்றது மட்டுமல்லாமல், அந்தப் பதவியின் அதிகாரங்களைப் பற்றியும், அதைத் தான் பயன்படுத்தவில்லை என்றும் பெருமிதத்துடன் வெட்கமற்றுப் பேசிக் கொண்டிருக்கிறார்.

கடந்தவாரம் பிரபாகரனும் ரணில் விக்கிரமசிங்கவும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை 'நான் நினைத்தால் ரத்துச் செய்ய முடியும்" என்று மிரட்டல் தொனியில் பேசியிருக்கிறார் அவர். ஜனாதிபதிக்கு என்னென்ன அதிகாரங்கள் எல்லாம் இருக்கின்றன, அவற்றால் எப்படிப்பட்ட அழிவுக் காரியங்களையெல்லாம் செய்ய முடியும் என்பதைப் பற்றி யாரும் சொல்லத் தேவையில்லை. அது ஒரு ஆபத்தான, தனிநபரிடம் மட்டுமீறிய அதிகாரங்களைக் குவித்துள்ள ஒரு பதவி என்பது வெளிப்படை. இதனால் தான் அதை இல்லாமல் ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. அந்தக் கோரிக்கையின்படி செயற்படப் போவதாக அறிவித்த சந்திரிகாவுக்கு வேண்டியளவு மக்கள் ஆதரவும் கிடைத்தது.

ஆனால் அவர் அதைச் செய்யாமல் விட்டு விட்டு, ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்.

இத்தகைய மிரட்டல்கள் எல்லாம் தன்னை நேர்மையான, அதிகார வெறிபிடித்த ஒருவர் அல்ல என்று நிரூபிக்க அம்மையாரால் வெளியிடப்படும் கருத்துக்களே. . இப்படியான கருத்துக்களை அவர் வெளியிடுவது இது முதல் தடவையும் அல்ல. முன்பு ஒரு தடவை இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த போது, தாம் 'பிரேமதாச போல நடந்து கொள்ள தெரியாமல் இருக்கவில்லை" என்று மிரட்டியிருந்தார்.

> எரி நெருப்பில் வீழ்ந்து சாவதையா அல்லது நீரில் மூழ்கிச் சாவதையா நீ விரும்புகிறாய் என்று என்னிடம் கேட்டால் நான் நெருப்பில் வீழ்ந்து சாவதையே விரும்புவேன். ஏனென்றால் அதில் ஒருவகைக் கம்பீரம் இருக்கும் என்று மாக்சிம் கார்க்கி ஒரு முறை எழுதினார்.
>
> ஜனாதிபதிக்கு முன்னால் இன்றுள்ள தெரிவு அப்படிப்பட்ட ஒன்று தான்.
>
> அவர் ஒப்பந்தத்தை அமுலுக்கு வரவிடாமல் தடுத்து விடுவது கம்பீரமானது என்று நினைக்கிறார். ஆனால் பாவம். அவருக்கு அதைச் செய்வதற்கான துணிவு இல்லை, இனியும் வரப் போவதில்லை. தவிரவும் வழமை போல அதையும் அவர் சரியாகச் செய்யப் போவதில்லை.

உண்மையில் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இப்படித் திரும்பத் திரும்ப மிரட்டுவது தன்னை நல்லவராகக் காட்டிக்கொள்வதற்கே ஒழிய வேறெதையும் செய்வதற்கில்லை. நுணுக்கமாக அவதானித்தால், அவரால் அவர் மிரட்டுவது போலச் செய்ய முடியாது என்பது தெரிய வரும். செய்ய முடியாதபடியால் தான் அவர், தான் 'செய்ய முடியும், ஆனால் செய்யவில்லை" என்ற பாணியில் அறிவித்துக் கொண்டிருக்கிறார். ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இல்லாமல் ஆக்க விரும்பாமல் அவர் இதைச் சொல்லவில்லை. அவருக்கு மனது நிறைய அதைச் செய்ய ஆசை தான். ஆனால் செய்கிற துணிவோ திராணியோ அவருக்குக் கிடையாது. சட்டபூர்வமாகவும் அது சாத்தியமான ஒன்றல்ல என்று சட்டவல்லுனர்கள் கூறுகிறார்கள். சட்டத்தைத்தான் ஒதுக்கி விட்டாலும், இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது என்று உள்நாட்டு அளவிலும் சர்வதேச அளவிலும் அரசியல் ரீதியான நெருக்கடிகளைக் கொடுக்கக் கூடிய ஒன்று என்பதை அவர் அறிவார். இவற்றையும் எதிர்த்து தான் நினைத்ததைச் செய்யும் வல்லமையை அவர் ஒரு போதும் கொண்டிருக்கவில்லை.

உண்மையில் பொ.ஜ.மு. அரசியல் ரீதியாக இந்த உடன்படிக்கை தொடர்பாக எந்தவொரு எதிர் அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை. ஜனாதிபதி கூட தமக்கு சந்தேகத்துக்கிடமான பல விடயங்கள் அதில் அடங்கியிருப்பதாக மட்டுமே கூறியிருந்தார். ஆனால் அந்தச் சந்தேகத்துக்கிடமான விடயங்கள் எவை என்று அவர் இன்று வரை தெரிவிக்கவில்லை. சரியாகச் சொல்லப் போனால், ரணில் செய்த இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது, அதை எப்படியாவது இல்லாமலாக்கி ரணிலின் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என்பதற்காக இனிமேல் தான் அவர் அதில் சந்தேகத்திற்குரிய விடயங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

ஏற்கெனவே ஜே.வி.பி. சந்திரிகாவின் பங்காளிக் கட்சி. இந்த ஒப்பந்தம் தொடர்பாக தனது சந்தேகங்களை வெளியிட்டு விட்டது. பொ.ஜ.முவுக்கோ சந்திரிகாவுக்கோ, அதைவிட வேறு காரணங்களைக் கண்டு பிடிக்க முடியாது. தாமே விரும்புவதாகக் கூறிவந்த சமாதானத்திற்கு இந்த ஒப்பந்தம் எவ்விதத்திலும் குந்தகமானது என்று நிரூபிக்க அவருக்கு கையில் எந்தச் 'சரக்கும்" இல்லை. அதனால் தான் ரணில் தன்னிடம் முன்பே சொல்லவில்லை, ஜனநாயக மரபுகளைக் காக்கவில்லை என்பது போன்ற குற்றச் சாட்டுகளை அடுக்கிக் கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதிக்கு நாட்டில் சமாதானம் வருவதோ அரசியல் ரீதியாக பிரச்சினை தீர்க்கப்படுவதோ முக்கியம் அல்ல. ஒரு வகையில் அது அவருடைய தேவையும் இல்லை. ஆனால் ரணிலையும் அவரது கூட்டுக் கட்சிகளையும் மக்களையும் மிரட்டிப் பூச்சாண்டி காட்டுவதன் மூலமாக இந்த ஒப்பந்தத்தை அவர்களாகவே கைவிடும் நிலைக்குத் தள்ள வேண்டும் என்பதே அவர் விருப்பம். அதற்காகவே அவர் இவ்வாறு கதைத்துத் திரிகின்றார்.

எஸ்.பி.. திசாநாயக்கா போன்ற 'குள்ளனைக்" கொல்வதற்கு குண்டில்லை, குண்டின் ஒரு துண்டே போதும் என்று அவர் தெரிவித்திருப்பது எப்படி வெறும் அற்பமான, சிறுபிள்ளைத்தனமான பேச்சோ. அவ்வாறே, நான் நினைத்தால் இந்த உடன்படிக்கையை என்னால் ரத்துச் செய்ய முடியும் என்பதுவும் (இந்தப் பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது தான் அப்படிச் சொல்லவில்லை என்று அவர் அறிவித்ததாகத் தெரிய வருகிறது. இதுவும் அவரது வழமையான உத்திகளில் ஒன்று தான் என்பதுவும் எல்லோருக்கும் தெரிந்ததே) இந்த ரகப் பேச்சுக்களை ஒரு நாட்டின் அரசுத் தலைவர் ஒருவரின் வாயிலிருந்து கேட்க வேண்டியிருப்பது நமது நாட்டு மக்களின் தலைவிதியாக உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் செயற்பாட்டுப் பண்பை நோக்குபவர்கள் ஒரு விடயத்தைத் தெளிவாகக் காணலாம். அவர் எந்தச் செயலையும் ஒரு நோக்கை அல்லது இலக்கை அடிப்படையாகக் கொண்டு செய்பவர் அல்ல. பல நன் நோக்கங்களை அவர் வெளிப்படுத்தி இருந்த போதும், அவற்றைச் செயற்படுத்த அவர் எந்த விதத்திலும் முயற்சி எடுத்ததில்லை பதிலாக, அந்த நோக்கத்திற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கையில், அவை தோல்வியைத் தழுவ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருப்பவர் போல அவர் இயங்கிக் கொண்டிருப்பார். முடிந்தால் அதற்கான தனது 'பங்களிப்பை"யும் அவர் வழங்குவார். அது நிச்சயமாக தோல்வியில் முடிந்து விடும் என்ற நிலை வந்தபின், அது அவ்வாறான நிலைக்குப் போனதற்கான பொறுப்பை தன்னைத் தவிர்ந்த மற்றெல்லார் மீதும் சுமத்தி விடுவார். ஜனாதிபதி பதவியை இல்லாமல் செய்தல் முதல், தீர்வுப் பொதியை கொண்டு வந்ததுவரை முடிவுறாத தோல்வியை நோக்கி அவை செல்வதற்கேற்ற விதத்திலேயே தனது செயலைச் செய்து வந்தார். தான் தொடங்கிய யுத்தத்திலும் கூட இதே நடைமுறையையே அவர் கடைப்பிடித்தார். பிரேமதாச அரசாங்கத்தைப் பழித்து அதற்கு மாற்றான ஒரு அரசாங்கத்தைக் கொண்டு வருவதாக அறிவித்த அவரது கட்சியின் அரசாங்கம், தன் பதவிக் காலத்துள் பிரேமதாச அரசை விட மோசமான விதத்தில் குண்டர் ஆட்சியையும் படுகொலை அரசியல் கலாசாரத்தையும் கட்டி எழுப்பியிருந்தது பழைய கதை.

இப்போது ரணிலின் முயற்சியில் கைச்சாத்தான ஒப்பந்தம் செயற்படாமல் போவதற்கான விதத்தில் அவரது சகல நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன. ஆனால் அவரது துரதிஷ்டம் இம்முறை அதைத் தோல்வியுறச் செய்வதற்கான விதத்தில் செயற்பட அனுமதிக்க முடியாமல் புதிய அரசாங்கம் வந்திருக்கிறது.

வழமையான எல்லாத் தோல்விகளுக்கும் பிறரைக் காரணம் காட்டி தான் எப்போதுமே சரியாக நடந்து வந்ததான பிரமையை உருவாக்க முயன்று அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருந்தார் அவர்.

ஆனால் இம்முறை புதிய உடன்படிக்கை தோற்றாலும் சரி, வென்றாலும் சரி அவருக்கு அரசியல் நெருக்கடியை தோற்றுவிக்கப் போகிறது, வழமையான வெற்றியை தன்னால் பெற முடியாது என்று அவர் தெரிந்து வைத்திருக்கிறார்.

எரி நெருப்பில் வீழ்ந்து சாவதையா அல்லது நீரில் மூழ்கிச் சாவதையா நீ விரும்புகிறாய் என்று என்னிடம் கேட்டால் நான் நெருப்பில் வீழ்ந்து சாவதையே விரும்புவேன். ஏனென்றால் அதில் ஒருவகைக் கம்பீரம் இருக்கும் என்று மாக்சிம் கார்க்கி ஒரு முறை எழுதினார்.

ஜனாதிபதிக்கு முன்னால் இன்றுள்ள தெரிவு அப்படிப்பட்ட ஒன்று தான்.

அவர் ஒப்பந்தத்தை அமுலுக்கு வரவிடாமல் தடுத்து விடுவது கம்பீரமானது என்று நினைக்கிறார். ஆனால் பாவம். அவருக்கு அதைச் செய்வதற்கான துணிவு இல்லை, இனியும் வரப் போவதில்லை. தவிரவும் வழமை போல அதையும் அவர் சரியாகச் செய்யப் போவதில்லை. தனது கட்சிக்காரர்களையும் இதர சகாக்களையும் பற்றி அக்கறைப்படாமல், ஒப்பந்தத்தை ஆதரிக்கவும் அவருக்கு முடியாது. அது தனது அரசியல் இருப்புக்கு ஆபத்து என்று அவர் நினைக்கிறார். எதிர்ப்பதுவும் கூட அரசியல் ரீதியான பின்னடைவையே கொடுக்கும் என்பதையும் அவர் அறிவார்.

ஆயினும் அவர் தெரிவு இரண்டாவதாகவே இருக்கிறது. ஆக இம்முறையும் வழமைபோல அவர் தோற்கப் போகிறார்.

ஆனால் ஒரு வித்தியாசம். முன்னைய சந்தர்ப்பங்களைப் போல அவரால் தான் சரியாக நடந்ததாக மெய்ப்பிக்க அவருக்கு முடியப் போவதில்லை.

ஆம். சந்திரிகா என்ற வால் வெள்ளியின் அஸ்தமனத்தின் ஆரம்பம் இவ்விடத்தில் தொடங்குகிறது!

# ஜனாதிபதியின் தடங்கல்கள் தாக்குப்பிடிப்பது எப்படி?

-விக்டர்ஐவன்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உறுதியான போர்நிறுத்தமொன்றிற்காக வேண்டி விடுதலைப்புலிகளோடு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக ஜனாதிபதியும் மக்கள் விடுதலை முன்னணியினரும் கூட்டாகக் கிளர்ந்தெள ஆயத்தமாவது போல் தெரிய வருகின்றது.

ஜா-எலயில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் போது ஜனாதிபதி, இராணுவத்திற்கு அனுப்பி வைக்கும் ஒரு அறிவித்தலின் மூலம் மட்டும் இந்த ஒப்பந்தத்தைப் பலமிழக்கச் செய்ய என்னால் முடியுமெனக் கூறியுள்ளார். (இப்படி ஜனாதிபதி கூறவில்லை என்று ஜனாதிபதி அலுவலகம் பின்னர் மறுத்துள்ளது.) உடன்பாட்டு ஒப்பந்தத்தினுள் அடங்கியுள்ள விடயங்கள் சம்பந்தமாக தன்னால் ஏற்படுத்தப்பட்ட விஷேட ஆய்வாளர்களின் மூலம் தான் ஆராய்ந்து வருவதாகவும், அதன் பின்னர் அது சம்பந்தமாகத் தானெடுக்கும் முடிவுகள் பற்றி அறிவிப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியினரின் கருத்து இந்த ஒப்பந்தம் ரணில் விக்ரமசிங்கவினால் எமது தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காக வேண்டி பிரபாகரனுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒரு துரோகத்தனமான ஒப்பந்தமென்பதாகும். அதனைப் பலமிழக்கச் செய்ய மக்கள் விடுதலை முன்னணியின் முழுச் சக்தியையும் செலுத்துவது அவர்களது முக்கிய குறிக்கோளாக உள்ளது போல் தெரிய வருகின்றது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க எதிர்நோக்கி வரும் சவால்கள் மிகவும் சிக்கலானவைகளாகும். அவை எதிர்மாறான தன்மைகளுடன் கூடியதாகும். சமாதானச் செயற்பாட்டின் போது பிரதமரால் அல்லது எதிர்த் தரப்பினரால் ஏற்படும் எந்தவொரு பாரதூரமான தவறும் ஜனாதிபதியினதும் மக்கள் விடுதலை முன்னணியினதும் நிலைகளை பலம்பெறச் செய்யக் காரணமாக அமைந்து சமாதானச் செயற்பாடுகள் முழுமையாகவே சிக்கலான நிலைக்குத் தள்ளப்படலாம். மறுபுறத்தில் ஜனாதிபதியினதும், மக்கள் விடுதலை முன்னணியினரதும் எதிர்ச்செயற்பாடுகளும் சமாதான முயற்சிகளுக்கு தடங்கலாக அமையக் கூடும். ஒரு புறத்தில் சமாதானச் செயற்பாடுகளின் போது தம்மால் மாத்திரமல்ல, எதிர்த்தரப்பினராலும் பாரதூரமான தவறுகள் ஏற்படச் சந்தர்ப்பம் கிடைக்காத வகையில் கட்டுப்பாட்டு முறையொன்றை முன்னெடுத்துச் செல்லல் வேண்டும். மறுபுறத்தால் ஜனாதிபதிக்கும், மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் எதிர்ப்பதற்காக உள்ள உரிமைக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியதோடு அவர்களது எதிர்ச் செயற்பாடுகள் சமாதான நடவடிக்கைகளுக்குத் தடங்கலாகாத வகையில் வைத்துக் கொள்வதும் மிக முக்கியமாகும். இதனை வெற்றி கொள்ள முடிவது சமாதானச் செயற்பாடுகளை நல்ல முறையில் கட்டுப்படுத்துவதினாலும், தமக்குச் சாதகமான பொதுமக்கள் அபிப்பிராயங்களை (தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே) ஏற்படுத்திக் கொள்ள முடிவதாலும் மாத்திரமேயாகும்.

### ஜனாதிபதி பற்றி ரணிலின் ஆரம்பகால மதிப்பீடு

எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் தமது சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி தடங்கலாக இருக்க மாட்டார் என்பது ரணிலின் ஆரம்பகால மதிப்பீடாக இருந்தது. தனது வெற்றியின் பின்னர் அவர் ஜனாதிபதியோடு மோதும் நிலையில் இருந்தும் விலகி நின்று அந்நியோன்னியமாகச் செயற்படும் நிலையைச் செயற்படுத்தி வந்தது அந்த நம்பிக்கையின் காரணத்தினாலேயே.


இருந்தாலும் பிரதமரின் ஆரம்பகால மதிப்பீடு பிழையாகவே இருந்தது. ஜனாதிபதி சம்பந்தமாக அவ்வாறான மதிப்பீட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் அவரது சுபாவம் சம்பந்தமாகவும், நாட்டின் கட்டுப்பாட்டு வடிவத்தின் விஷேட விஸ்வரூபம் பற்றியும் பிரதமர் சரியான மதிப்பீட்டைச் செய்திருத்தல் வேண்டும்.

ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் முக்கியமாக பொதுத்தேர்தல் காலத்தில் அவரது செயற்பாடுகள் ஒரு தலைவருக்கு ஏற்ற நடவடிக்கைகளாக இருக்கவில்லை. பாராளுமன்ற அதிகாரத்தைத் தொடர்ந்தும் தனது கைகளில் வைத்துக் கொள்வதற்காக வேண்டி நாகரீகமற்ற காரியங்களை அவர் மேற்கொண்டார். அது போன்ற கீழ்த்தரமான போக்குடைய ஒரு தலைவருடன் அன்னியோன்னியமான உறவை வைத்திருக்க முடியுமா என்பது பற்றி பிரதமர் ஆழமாகச் சிந்தித்திருக்க வேண்டும். மறுபுறத்தில் அரசியலமைப்புச் சட்டத்தின் விஷேட பிரிவினால் ஏற்படவுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும் சரியான மதிப்பீட்டைச் செய்திருத்தல் வேண்டும்.

### ஒரே கட்சிக்கு அதிகாரம் கிடைத்த அரசியலமைப்பு

1978ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் பாராளுமன்ற அதிகாரமும் ஜனாதிபதி அதிகாரமும் ஒரே கட்சிக்குக் கிடைக்கக் கூடிய வகையில் ஏற்படுத்திக் கொண்ட அரசியலமைப்புச் சட்டமேயொழிய, பிரான்ஸ் அரசியலமைப்புச் சட்டம் போன்று, பாராளுமன்ற அதிகாரம் ஒரு கட்சிக்கும், ஜனாதிபதி அதிகாரம் இன்னொரு கட்சிக்கும் செல்லும் நிலையில் கூட இரு தரப்பினரும் அன்னியோன்னியமாகச் செயற்படக் கூடிய வகையில் தயார் செய்யப்பட்ட ஒரு அரசியலமைப்புச் சட்டமாக இருக்கவில்லை. பாராளுமன்ற அதிகாரம் ஒரு கட்சிக்கும், ஜனாதிபதி அதிகாரம் இன்னொரு கட்சிக்கும் செல்லல் இலங்கைக்கு ஒரு புதிய அனுபவமாக இருப்பதோடு, இந்த இரண்டு எதிர் கட்சிகளும் அன்னியோன்னியமாகச் செயற்படக் கூடியவாறு, அதற்கு ஏற்ற மறுசீரமைப்புகளை செய்து கொள்வது அத்தியாவசிய நிபந்தனையொன்றாகவும் உள்ளது. பிரான்ஸ் அரசியலமைப்புச் சட்டம் அதிக அளவில் எமது அரசியலமைப்புச் சட்டத்துக்கு சமமானதாகவே இருந்தது. இருந்தாலும் 1986ம் ஆண்டு ஒரு கட்சிக்கு ஜனாதிபதி அதிகாரம் இருக்கையில், பாராளுமன்ற அதிகாரம் எதிர்கட்சியின் கைகளுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் அதற்கு ஏற்றவாறு கட்டுப்பாட்டு முறையில் மாற்றங்களையேற்படுத்திக் கொள்ள ஜனாதிபதி உடன்பட்டார். 2001ம் ஆண்டு பாராளுமன்ற பொதுத் தேர்தல் பெறுபேறுகளின் பின்னர் இலங்கையில் ஏற்படவேண்டியிருந்ததும் அது போன்றதொரு மாற்றமேயாகும். அதாவது ஜனாதிபதி அதிகாரம் ஒரு கட்சியிடமும், பாராளுமன்ற அதிகாரம் எதிர்க்கட்சிக்கும் கிடைத்திருக்கும் நிலையில், ஜனாதிபதியிடமிருந்து தடங்கல்கள் ஏற்படாதவாறு உள்ளார்ந்த கட்டுப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதியின் உடன்பாட்டைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அங்கு ஜனாதிபதியின் பொறுப்பாக இருந்திருக்க வேண்டியதும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்திருந்த பாராளுமன்ற அதிகாரம் மாத்திரமன்றி, தனக்குக் கிடைத்துள்ள பொது மக்கள் ஆதரவும் 2001ம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகளால் பலமிழக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு அரசியலமைப்புச் சிக்கல்கள் ஏற்படாதவாறு பதவியிலிருந்தும் விலகிக் கொள்வதோ அல்லது பிரான்ஸில் போன்று தடங்கல்கள் எதுவுமின்றி உள்ளார்ந்த கட்டுப்பாட்டு அதிகாரத்தை எதிர்கட்சிக்குப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களையேற்படுத்திக் கொள்வதற்காக வேண்டி ஒத்துழைப்பை வழங்குவதாகும். இருந்தாலும் ஜனாதிபதி மேற்கொண்டது அதற்குப் பதிலாக தற்காலிகமாக படத்தைச் சுருட்டிக் கொள்ளும் கொள்கையைக் கடைப் பிடிப்பதே.




தொடர்ந்து 18 வருடங்களாக நாங்கள் ஒருவருக்கொருவர் எதிராக போர் செய்தோம். அதற்காக வேண்டிச் செய்த செலவு ஐம்பதாயிரம் கோடி ரூபாக்களுக்கும் மேலாகும். கொலை செய்யப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கினர். பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அனாதைகளாயினர். பொருளாதார ரீதியில் நாடு பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. நீண்ட காலங்கள் நாங்கள் போர் செய்தாலும் பகைவர்களான விடுதலைப் புலிகளை எம்மால் தோற்கடிக்க முடியாது போயுள்ளதோடு அவர்களால் எம்மைத் தோற்கடிக்க முடியாது போயுள்ளது. அவர்களை நாங்கள் காண்பது மிகவும் பொல்லாத மனிதர்கள் என்பதைப் போன்றே, அவர்களும் எம்மைக் காண்பது அவ்வாறே என்பதை நாங்கள் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள நிலையில் இந்த இரண்டு அதிகார ஸ்தாபனங்களிடையே மோதல் நிலையொன்று ஏற்பட்டது தவிர்க்க முடியாததொன்றாகியுள்ளது. தனது பாதுகாப்பிற்காக வேண்டி ஐக்கிய தேசிய முன்னணியின் கைகளில் உள்ள அதிகாரத்தைத் தோற்கடிப்பது அத்தியாவசியமானதென ஜனாதிபதி நினைப்பதோடு, சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் ஜனாதிபதியை அவ்விடத்திலிருந்தும் நீக்க வேண்டுமென ஐ.தே.முன்னணி நினைக்கின்றது. இரு சாராரிடையேயும் நிலவும் இந்தத் தீர்க்கமான மோதல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவோடு ஆரம்பிக்கவுள்ளது. இருந்தாலும் ஏற்படவுள்ள இந்த மோதல் சமாதானச் செயற்பாடுகள் மீதும் பொதுவாக நாட்டின் மீதும் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவையென்பது பற்றி எதுவும் கூற முடியாதுள்ளது.

### அன்னியோன்யத்துக்கு அரசியலமைப்பு சீர்திருத்தம்

இதற்காகவுள்ள சிறந்த வழி மோதல்கள் ஏற்படச் சந்தர்ப்பம் வழங்குவதற்குப் பதிலாக இரு சாராருக்கும் அன்னியோன்யமான முறையில் செயற்பட முடியுமானவாறு அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை நோக்கிச் செல்வதே. பிரான்ஸில் போன்று அமைச்சரவையைத் தேர்ந்தெடுப்பது தொடக்கம் அனைத்து உள்ளார்ந்த கட்டுப்பாட்டு அதிகாரங்களும் பாராளுமன்றத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதம மந்திரிக்கு உரித்தாகும் வகையிலும், பாராளுமன்றத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாத உண்மையான சந்தர்ப்பங்களில் தவிர பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதியிடமிருந்து நீங்கும் வகையிலான, பாராளுமன்ற மூன்றில் இரண்டு பங்கு அதிகாரம் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை பதவியிலிருந்தும் நீக்குவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்துக்குக் கிடைக்கும் வகையில் அரசியலமைப்பச் சீர்திருத்தங்களைச் செய்து கொள்ள முடியும். தன்னை பதவியிலிருந்து எடுத்தெறியப்படும் செயற்பாட்டிற்கு சந்தர்ப்பம் வழங்குவதை விட அது போன்ற அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது ஜனாதிபதிக்கு இலாபகரமானதாகும். இது போன்ற மறுசீரமைப்புக்கள் மீண்டும் சர்வாதிகாரங்களைக் கொண்ட இன்னொரு ஜனாதிபதி அதிகாரத்திற்கு வரவுள்ள சந்தர்ப்பங்களுக்கு தடையாகவும் அமைந்து விடும். இது இரண்டு சார்பினருக்கும் அன்னியோன்னியமாகச் செயற்பட முடிந்த புதிய சூழலொன்று ஏற்படக் காரணமாக அமைவதோடு, ஜனாதிபதியை பதவியிலிருந்தும் நீக்கும் செயற்பாடு நியாயப்படுத்தப்படுவது, மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அவர் உடன்படாவிடில் மாத்திரமேயாகும்.

### கிடைத்த சந்தர்ப்பத்தை வென்றெடுக்க வேண்டும்!

தற்போதுள்ள நிலையில் சமாதானத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதைத் தவிர வேறு எந்தவிதமான மார்க்கங்களும் இல்லையென்றே கூற வேண்டும். தொடர்ந்து 18 வருடங்களாக நாங்கள் ஒருவருக்கொருவர் எதிராக போர் செய்தோம். அதற்காக வேண்டிச் செய்த செலவு ஐம்பதாயிரம் கோடி ரூபாக்களுக்கும் மேலாகும். கொலை செய்யப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கினர். பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அனாதைகளாயினர். பொருளாதார ரீதியில் நாடு பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. நீண்ட காலங்கள் நாங்கள் போர் செய்தாலும் பகைவர்களான விடுதலைப் புலியினரை எம்மால் தோற்கடிக்க முடியாது போயுள்ளதோடு அவர்களால் எம்மைத் தோற்கடிக்க முடியாது போயுள்ளது. அவர்களை நாங்கள் காண்பது மிகவும் பொல்லாத மனிதர்கள் என்பதைப் போன்றே, அவர்களும் எம்மைக் காண்பது அவ்வாறே என்பதை நாங்கள் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். போரிலிருந்தும் விடுபட்டு சமாதானத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அதனை வென்றெடுக்காவிட்டால் பயங்கரமான முடிவுகளையே அனுபவிக்க வேண்டிவரும். ஒரு நாடு என்ற முறையில் இந்தக் கஷ்டமான நிலையில் இருந்தும் எம்மால் மீள முடிவது அந்தக் கஷ்டமான நோக்கத்தை வெற்றி கொண்டால் மாத்திரமேயாகும்.

# மீண்டும் மேடைக்கு வரும் யானை - புலி நாடகம்

-சுனந்த தேசப்பிரிய

உள்ளூராட்சி சபை தேர்தல் சட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்திக் கொள்வதற்காக வேண்டி அரசாங்கத்தால் முன்கொண்டு வரப்பட்டிருக்கும் சட்ட வரைபு புலிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் முன்கொண்டு வரப்பட்டதொன்றென மக்கள் விடுதலை முன்னணியின் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார். முன்னால் பாதுகாப்பு அமைச்சர். அனுருத்த ரத்வத்தையைக் கைது செய்ததும் புலிகளின் தேவைக்கேயென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிரிசேன பத்திரிகை அறிக்கையொன்றின் மூலம் கூறியுள்ளார்.

சென்ற வார இறுதியில் மங்கள சமரவீரவின் ஆதரவாளர்கள் பத்திரிகையொன்றுடன் வீதியில் இறங்கினர். அதில் விமல் வீரவன்சவின் நீண்ட செவ்வியொன்றும் பிரசுரமாயிருந்தது. யானை புலி ஒப்பந்தம் மீண்டும் உயிர் பெற்றுள்ளதாக அதில் தலையங்கமிடப்பட்டிருந்தது. 20ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார நடவடிக்கைகள் அரசாங்கத்தின் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு எதிராகவே முன்கொண்டு வரப்பட்டு வருகின்றன. அனுருத்த ரத்வத்தையைக் கைது செய்ததுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் மீண்டும் தொடங்கப் போவது யானை புலி ஒப்பந்தம் என்ற குற்றச்சாட்டின் மீதா என்ற சந்தேகம் திரும்பவும் எழ ஆரம்பித்துள்ளது.

### நாட்டுக்கெதிரான துரோகச் செயல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரசார நடவடிக்கையை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஜனாதிபதி சந்திரிகாவும் அது போன்ற கருத்தையே கூறியுள்ளார். ரணில் விக்ரமசிங்கவின் சமாதான முயற்சிகள் தோல்வியுறும் என்ற கருத்துப்படவே அங்கு அவர் உரையாற்றியுள்ளார். நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் ஐக்கிய தேசிய முன்னணியைத் தோற்கடிக்க வேண்டுமென்பது அவரது செய்தியாக இருந்தது. எதிர் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் அநுராதபுரத்தில் தனது கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு தனது கட்சி ஒத்துழைப்பை வழங்குவது நிபந்தனைகளுடனேயே எனக் கூறியுள்ளார். சென்ற 19ம் திகதி பாராளுமன்றத்தில் விஷேட உரையொன்றையாற்றிய விமல் வீரவன்ச அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படவுள்ள இந்த உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கு எதிரான முதல் வேட்டைத் தொடுத்தார்.

அவர் இதுபோன்ற உடன்பாட்டு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்ளல் முழுமையாகவே நாட்டுக்கு எதிராகச் செய்யும் துரோகத்தனமான செயலொன்றெனக் கூறியுள்ளார். உண்மையாகவே கூறின் இந்த ஒப்பந்தத்தின் முதலாவது சொந்தக்காரர் லக்ஷ்மன் கதிர்காமரேயாவார். முதலில் இதுபோன்ற யுத்த நிறுத்த வரைவொன்றை அன்றைய அரசாங்கமும் விடுதலைப் புலியினரும் நோர்வேஜிய ஒத்துழைப்புடன் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். தமக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்காவிடில் நிரந்தரமான யுத்த நிறுத்தமொன்றிற்கு தம்மால் உடன்பட முடியாதென விடுதலைப் புலிகள் கூறியதன் பின்பு இந்த ஒப்பந்தம் பகிரங்கத்திற்கு வரவில்லை. இன்றும் அது ஒரு இராஜதந்திர ரகசியமாகவே உள்ளது. அதுபோன்ற இன்னுமொரு இராஜதந்திர ரகசியமும் உண்டு. 2001ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் விடுதலைப்



புலிகளுக்குமிடையே நிலவிய உத்தியோகபூர்வமில்லாத யுத்த நிறுத்தமே அது. கடந்த ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் மூலம் தெரிவிக்கும் வரை அந்த உத்தியோகபூர்வமற்ற யுத்த நிறுத்தம் சம்பந்தமாக எவரும் தெரிந்திருக்கவில்லை.

இப்போதும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு இடையேயும் அதுபோன்ற ராஜதந்திர ரீதியான இரகசிய ஒப்பந்தங்கள் இல்லாமலிருக்கக் காரணங்களில்லை. இருந்தாலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் அதுபோன்ற இரகசியமான ஒப்பந்தங்கள் இருப்பதாக வெளிப்படவில்லை. கடந்த இரண்டு மூன்று வாரங்களாக விடுதலைப் புலிகள் ஐக்கிய தேசிய முன்னணியைச் சிக்கலுக்குள்ளாக்கும் வகையிலான பல செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். தற்போது அதிக அளவில் பகிரங்கமாகியுள்ள இளம் வயதுச் சிறுவர்களை தமது படையோடு இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை அவற்றில் முக்கியமானதாகும். இது சம்பந்தமாக தேவைக்கு அதிகமான ஆதாரங்கள் உள்ளன. கிழக்கிலங்கை முஸ்லிம்களை கப்பம் பெற்றுக் கொள்வதற்காகக் கடத்திச் செல்லல் இரண்டாவது சம்பவமாகும். அரசாங்கம் பொருள்களுக்கான தடையை நீக்கியதன் பின்னரும் பொருள்களின் விலையேற்றத்தைத் தடுக்காத விடுதலைப் புலியினர் வரியும் அறவிட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு வட பிரதேசத்திற்குச் செல்லத் தேவையாயின் விஷேட அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென விடுதலைப் புலியினரால் விதிக்கப்பட்டுள்ள சட்டமும் இன்னும் அதுபோன்ற சில நடவடிக்கைகளும் நான்காவது சம்பவங்களாகும்.

### விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள்

கடந்த இரண்டு மாத போர் நிறுத்த கால எல்லையினுள் பல உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கைகள் பற்றித் தொடர்ந்தும் பகிரங்கப்படுத்தி வந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் சம்பந்தமான கமிஷன் சபையும், சர்வதேச சமாதான அமைப்பும் இளம் வயதுச் சிறுவர்களை (பலாத்காரமாக) போரோடு தொடர்பு படுத்திக் கொள்வது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது நேரடியாகவே குற்றம் சுமத்தின. பிரித்தானியாவிலிருந்து வெளியாகும் பல பத்திரிகைகளுக்கு இந்த பலாத்கார

**அனுருத்த ரத்வத்தை கைது செய்யப்படுவாரென தமிழ் நெற் இணையத்தளத்தில் கூறப்பட்டதால் அது புலிகளுடன் கூட்டாக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சியொன்றென குறிப்பிட்ட மைத்திரிபால சிரிசேனாவின் கூற்றும் அது போன்ற இரட்டை வேஷக் கருத்தேயாகும். அனுருத்த ரத்வத்தையைக் கைது செய்தல் விடுதலைப் புலிகளின் தேவைக்கே எனக் குறிப்பிடுவது இனவாதத்தைக் கிளப்புவதேயாகும். அனுருத்த ரத்வத்தை கைதுசெய்யப்படுவாரென இரண்டு வாரங்களுக்கு முன் ராவய பத்திரிகை குறிப்பிட்டது. மேற்கூறப்பட்ட தமிழ் நெட் இணையத்தளம் அந்தச் செய்தியையே மேற்கோள் காட்டியிருந்தது.**

கடத்தல் சம்பந்தமான செய்திகள் மட்டக்களப்பில் இருந்தும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் மடு தேவாலயத்தின் அருட்தந்தை ஒரு பகிரங்கமான செய்தியின் மூலம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் அதிக அளவிலான வரி அறவீட்டையும், விஷேட போக்குவரத்து அனுமதிப்பத்திர முறையையும் கடுமையாக விமர்சித்துள்ளார். இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் கத்தோலிக்க மதத் தலைவர்கள் விடுதலைப் புலிகளின் சில நடவடிக்கைகளை விமர்சித்துள்ளனர்.

### விமர்சனங்களிலும் நிறைய வித்தியாசம்

இவை மூலம் தெரிவது தென்னிலங்கையில் மட்டுமல்ல, வடக்கு கிழக்கிலும் கூட விடுதலைப் புலிகள் விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றனர் என்பதேயாகும். இருந்தாலும் இந்த விமர்சனங்களில் நிறைய வித்தியாசங்களும் உள்ளன. தென்னிலங்கையில் இந்த விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யும் தீவிரவாத சக்திகள் கூறுவது சமாதான நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு யுத்தத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென்பதே. வட கிழக்கு விமர்சனங்கள் அவ்வாறானவையல்ல. அங்குள்ள விமர்சனங்கள் சமாதானச் செயற்பாடுகளின் பெறுபேறுகள் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப் படுபவையாகும்.

உண்மையாகவே தென்னிலங்கையில் சமாதானத்திற்காக வேண்டிச் செயற்படும், ஜனநாயகத்திற்காக வேண்டிச் செயற்படும் சக்திகளினதும் அடிப்படை நிலை அவ்வாறானதாகவே இருத்தல் வேண்டும். சமாதானச் செயற்பாடுகளின் பெறுபேறுகளை தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் அனைவரும் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டுமென்பது எமது விமர்சனங்களின் அடிப்படைக் காரணங்களாக அமைதல் வேண்டும். சென்ற காலங்களில் கிழக்கிலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கப்பம் வாங்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து முஸ்லிம் மக்கள் அரசாங்கத்திடம் வேண்டிக் கொண்டதும் போர் நிறுத்தத்தை இடைநிறுத்தி விட்டு மீண்டும் போரை ஆரம்பிக்கும்படியல்ல. சமாதானச் செயற்பாடுகளை பொறுப்பு வாய்ந்ததாகவும் தெளிவான முறையிலும் முன்னெடுத்துச் செல்லும்படியே அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

### போர் நிறுத்தமும் சமாதானச் செயற்பாடும்

சென்ற வாரம் இலங்கை அரசாங்கத்திடம் கடிதமொன்றை ஒப்படைத்த அவுஸ்திரேலிய உதவிக் குழு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு பற்றிய சரத்துக்களையும் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டியுள்ளது. இது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் நிறுத்தக் கால எல்லையின் போது மனித உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி வற்புறுத்தும் தாக்கங்களின் ஒரு சந்தர்ப்பம் மட்டுமேயாகும். இருபது வருடங்கள் தொடர்ந்து போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இரண்டு சாராருக்கும் ஒரேயடியாக முழுமையான போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வர முடியுமென நினைப்பது முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாததாகும். அதேபோன்று இந்த ஒப்பந்தம் பூரணமான ஒப்பந்தமொன்றாகாததால் அதனைக் கிழித்தெறிந்து விட்டுத் திரும்பவும் போரை நோக்கிச் செல்ல வேண்டுமென

தொடர்ச்சி 11ம் பக்கம்...

## பிரித்தாளும்...

3ம் பக்கத் தொடர்ச்சி

ஆங்கில மொழி அறிவு காரணமாக கிடைக்கும் மேலைத்தேய ஜனநாயகம் பற்றிய பரிச்சயமில்லை. எனவேதான் அவர்களிடம் பாசிசத் தன்மை தோன்றுகிறது என அவர் அக்கட்டுரையில் எழுதியிருந்தார். இது போன்ற வேலைகளின் ஒட்டுமொத்த நோக்கமும், விளைவும் மிதவாதி - பயங்கரவாதி என்ற பிளவை விடுதலை வேண்டி நிற்கும் சமுகத்தினுள் மேலும் ஆழப்படுத்துவதே ஆகும்.

மேற்படி விடயங்களைப் பாலஸ்தீனப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால் பல தெளிவுகள் உங்களுக்கு ஏற்படும்.

சுருக்கமாகக் கூறினால் ஒரு அடக்குமுறை அரசின் வன்முறை மற்றும் வரி மீதான ஏகபோகங்களை கேள்வி கேட்பவன் அல்லது கேட்பவள் தீவிரவாதி / பயங்கரவாதி ஆக்கப்படுகின்றான் / படுகின்றாள். அவர்கள் குற்றம் தோய்ந்தவர்களாக, அறிவிலிகளாக, மனிதத் தன்மையற்றவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். (Criminalize and de - humanize)

மறவரை குற்றப் பரம்பரையினர் என ஏகாதிபத்திய சார்பு ஆய்வறிஞர்களும், மானுடவியலாளரும், பத்திரிகையாளர்களும் அன்று எழுதியதில் இருந்து கலாநிதி ராதிகா குமாரசாமியின் மேற்படி கட்டுரை வரை யாவும் இந்தப் பிரித்தாளும் உத்தியின் வெளிப்பாடுகளே. 1977ம் ஆண்டிலே தனித்தமிழ் ஈழம் தான் ஒரே தீர்வு என மக்கள் ஆணையைக் கேட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதன் பின் இன்றுவரை தாங்கள் மிதவாதிகள், ஒரு நியாயமான தீர்வைப் பற்றி பேசிப் பேசியே மேலும் நூறு ஆண்டுகளை ஓட்டுவதற்குத் தயாராக இருப்பவர்கள். ஆனால் "பையன்கள்தான்" தீவிரவாதிகள், தமிழீழம் என்று விடாப்பிடியாக இருக்கிறார்கள் எனத் தொடர்ந்து சுத்துமாத்து விட்டு வருவதற்கும் மேற்படி பிரித்தாளும் உத்தியே அடித்தளமாகின்றது. மிதவாதி - தீவிரவாதி, என்ற பிரித்தாளும் உத்திக்குச் சாவு மணி அடிக்கும் நோக்குடனேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதைப் புரிந்து கொண்டதாலேயே அதை உடைப்பதற்கு கூட்டணியினரும், சிறிலங்கா அரசும் சில அந்நிய சக்திகளும் மிகநுட்பமான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

## தமிழ் ...

7ம் பக்கத் தொடர்ச்சி

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் அரசியலமைப்புப் பிரதிகளுக்குத் தீ வைத்துக் கொளுத்துவதிலும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி எம்.பிக்கள் பலரும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

பல்வேறு வகையாலும் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் உற்சாகமாகக் கலந்து கொண்டதுடன் காவல்துறையினருக்கெதிராகச் சில சந்தர்ப்பங்களில் ஆக்ரோஷமாகவும் நடந்து கொள்ள முற்பட்டனர். இவற்றை எல்லாம் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் கூர்மையாகக் கவனித்து வந்தனர்.

1972ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பு அமுலுக்கு வந்த சமயம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆயுதக் கிளர்ச்சிக்குத் தயாராகும் சிந்தனையும் முயற்சியும் தொடங்கியது. ஜே.வி.பி காட்டிய வழியில் ஆயுதம் ஏந்துவதற்கு அவர்கள் தயாரானார்கள். கொழும்பில் கிடைத்த நல்ல சமிக்ஞையைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுவதை இந்திய அரசு வரவேற்று இந்தியா ஆயுதப் பயிற்சியும் அளிக்க முன்வந்தது.

# மலையகத்தை சீரழிக்கும் கோயில் கலாசாரம்!

- சிவேரா

மலையக மக்கள் வாழ்வில் இன்று ஆழ்ந்த மறுபரிசீலனைக்குரிய காலகட்டம் உருவெடுத்துள்ளது. வாழ்க்கையின் நெருக்கடிகளுக்குள் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கும் சமூகமாக மாற்றுருப்பெற்று அடிமைத்தன வாழ்க்கைக்குத் தளமமைத்து தனது முகவரியை இழக்கும் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இதன் ஆரம்பம் நூற்றி அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு, அந்த ஆரம்பத்தின் தொடுப்போடு மருவி, வளர்ச்சிபெற்று இன்று மிகப்பெரிய மிலேச்சத்தன ஈடுபாடுகளின் இடுக்குகளுக்குள் இறுக்கப்பட்டு நசுக்கப்படுகிறது.

வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சியின் நிர்ப்பந்த நடைமுறை ஒப்பந்தங்களால் கட்டுண்டிருந்து கங்காணிகளின் கர்ணகொடூர பயங்கர நடவடிக்கைகளுக்குப் பலியாகி, தொழிற்சங்க துரோகத்தனத்திற்கு வாழ்க்கையை அர்ப்பணித்து போலித்தனமிக்க வங்குரோத்து அரசியல் கெடுபிடிகளின் குரூரத் தன்மையில் சிக்கி, திக்குத் திசை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் ஓர் சமூகத்தின் சோகக்கதையோடு, இன்னுமொரு துன்பவியல் தொடர்காவியம் மூடநம்பிக்கைகளின் முகவுரையோடு ஆரம்பித்திருக்கிறது.

இந்த மலையக மக்களின் வாழ்க்கையோடு ஒன்றி மறைமுக, சீரகேட்டு இன அழிப்பு சதித் திட்டங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள வாழ்க்கை முறையானது மனித தர்மத்திற்கப்பாற்பட்ட நாசிச நடைமுறைகளே இவர்களை அடித்து, துவைத்து, கிழித்து, பஞ்சாக்கி, படுபாதக நிலைக்குதள்ளியுள்ளது. மலையக மக்கள் நம்பியிருந்த தலைமைகளும், தொழிற்சங்கங்களும் அவை சார்ந்த அரசியல் பின்னணி முற்று முழுதாய் மக்களை அநாதரவாக்கப்பட்ட நிலையில் மனித வர்க்கத்தின் தத்துவார்த்த சிந்தனைகட்கு அப்பாற்பட்ட, பலவீனப்பட்ட, ஒதுக்கப்பட்ட ஓர் இனமாக கணிக்கப்பட்ட நிலையில் இன்று எந்தவித அடையாளமோ அல்லது தனித்துவ முகவரி முக்கியத்துவமோ இல்லாது வாழ்கின்றனர்.

புரட்சிகர சித்தாந்தங்களைப் போதிக்க வந்தவர்களும் வர்க்க ரீதியான வரலாற்று உண்மைகளைச் சொல்ல முயன்றவர்களும், இன ரீதியாகவும் மொழி, வழி ரீதியாகவும் இம்மக்களை இணைத்து செயல்பட முனைந்தவர்களும் சுயநல வேட்கையால் சுகபோகத்தை தேடிச் சென்று விட்டனர்.

மலையகத்திலுள்ள அனைத்து அமைப்புகளும் அவற்றின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மூலமாக வர்க்கப்போராட்ட முற்போக்கு அணிகளின் வாரிசுகள் என்று தோற்றமளித்த போதும், முற்று முழுதாக பிற்போக்கு சக்திகளின் சுவாசக் குழாய்களாகவே செயற்பட்டன, செயற்படுகின்றன.

மலையகத்தில் தொழிற்சங்க நடைமுறைகள் செயலிழந்து விட்டன. தொழிற்சங்க கோட்பாடுகளிலிருந்து விலகி வியாபாரக் கம்பனிகளாக செயற்படுகின்றன. சில இயக்கங்கள் குட்டிக் கடைகளாகவும், பெட்டிக்கடைகளாகவும், விளம்பர பதாகைகளுடன் இயங்குவதைக் காணலாம். அரசியல் சித்தாந்தம் பேசும் தலைமைகள் மலையகத்து மாபியாக்களாகவும், சுல்தான்களாகவும் பட்டாபிஷேகம் செய்து கொண்டுள்ளனர். இங்கே அரசியலுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் வித்தியாசமே இல்லாது போய்விட்டன.

தொழிற்சங்க ரீதியாக கூட்டுகள் சேர்ந்தும் பயனளிக்கவில்லை. திருடர்கள் சாம்ராஜ்யத்தில் எந்தவிதக் கூட்டும் ஒத்துப் போக முடியாதென்பதற்கு இவையே உதாரணமாகும்.

வன்செயல்கட்கும், இன ஒழிப்புக்கும் காரணமாயிருந்த அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்படும் அநாகரிகம் கேலிக்கிடமானதாகும். மலையக மக்களின் விமோசனத்திற்காக புரட்சிகரமான வாக்குறுதிகளை வெளியிட்டவர்கள் கூட பிற்போக்கு அரசியல் சக்திகளின் அடிவருடிகளாகி விட்டனர். சகலதுறைகளிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையில் மலையக சமுதாயம் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இவற்றை விட மிகப் பெரிய வில்லங்கம் மலையகத்தில் ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்க, அரசியல் கட்சிகளினால் பாதிக்கப்பட்டுள்ள சமூகம் மத ரீதியாகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது. மதங்களும், அவை சார்ந்த கொள்கைகளும், விளக்கங்களும், போலித்தனமான பிரச்சாரங்களும் நடைமுறைச் செயற்பாடுகளும் மலையகத்தை முற்று முழுதாக கபளீகரம் செய்து கொண்டுள்ளது. மதத்தின் பேரால் நடக்கும் போலித்தனமான சம்பிரதாய சடங்குகள், திருவிழாக்கள், பூஜைகள், கும்பாபிஷேகங்கள், அதையொட்டிய அனைத்து முயற்சிகளும் முழு மூச்சாக மக்களை திசை திருப்பும் பணியிலீடுபடுத்தப்பட்டு வருகின்றன.

கோவில் கட்டுவதிலும், கும்பாபிஷேகம் செய்வதிலும் தேரிழுப்பதிலும், தெய்வ வழிபாட்டு முறைகளிலும் பெரும் வியாபார கண்ணோட்டத்துடன் செயல்பட்டு வருவது இந்த சமூகத்திற்கு ஆரோக்கியமாகாது.

இந்த மத அனுட்டானங்களும், வைபவங்களும் மனிதரின் உணர்வுகளை, சிந்தனைகளை மழுங்கடிக்கக் கூடியன. மனித வரலாற்று உண்மைகளின்படி மதம் மனிதர்களுக்கெதிராக செய்துள்ள செயற்பாடுகளே அதிகமாகும். மதமே மக்களுக்கு அபினாகவும், போதைப் பொருளாகவுமிருந்து சீரழிந்துள்ளது. இத்தகைய சீரழிவுகளுக்கு தளமமைத்துக் கொண்டு செயல்படும் கோவில் கலாசாரம் மலையகத்தில் தலை தூக்கியிருப்பதானது அழிவின் ஆரம்பத்திற்கு ஒப்பானதாகும்.

மலையகத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களின் செலவளிப்பில் திருவிழாக்களும் கும்பாபிஷேகங்களும் நடைபெறுகின்றன. கிட்டதட்ட ஆறாயிரம் கோவில்கள் இருக்கின்றன. இவற்றின் வருடாந்த திருவிழாக்களுக்கு அளிக்கப்படும் தொகைகளில் வருடத்துக்கு ஒரு பல்கலைக்கழகத்தை கட்டியெழுப்பிவிடலாம்.

தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் கல்லூரிகளுக்கும் ஏனையவற்றிற்கும் செலவளிப்பதை விட கோவில்களுக்கு செலவு செய்கிறார்கள். தொழிலாளர்கள் உழைக்கும் ஊதியத்திலிருந்து லட்சக்கணக்கான ரூபாய்களை கோவில் கும்பாபிஷேகத்துக்கு தருகிறார்கள். போலித்தனமான கௌரவங்களுக்கும் பிரச்சாரத்திற்கும் கோவில் திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன. மலையகம் பூராவும் கோவில்கட்டி எழுப்பியிருப்பதைப் பார்த்தால் அந்த மக்கள் மத ரீதியாக எவ்வளவு பாதிப்படைந்துள்ளார்கள் என்பதை அறியலாம். மதக் காய்ச்சல் மலையகத்தில் பரவுகிறது. இந்த கோவில்களால் யாருக்கென்ன நன்மை என்பதையும் பார்க்க வேண்டும். திருவிழாக்கள் நடத்துவதன் மூலம் நமது மக்கள் இதுவரைக்கும் கண்ட பலன்தான் என்ன? ஏழை மக்களுக்கோ அல்லது அவர்களது குழந்தைகளுக்கோ ஏதாவது பலனளித்துள்ளதா? ஒருசாராரின் வாழ்வுக்குத்தான் கோயில் மையமாக இருக்கிறது. கோவில்கள் பெயராலும், திருவிழாக்கள் பெயராலும், கும்பாபிஷேகங்கள் பெயராலும் சேர்க்கப்படும் பணத்திற்கான செலவுகள் பொதுவாக காண்பிக்கப்படுகிறதா? இவ்வளவும் செய்து அர்ச்சனைக்கும், பூஜைக்கும் பணம் கொடுத்துதானே செய்ய வேண்டியுள்ளது. காசு கொடுத்துதானே கடவுளுக்கு கையெடுக்க வேண்டியுள்ளது. இன்றைய நிலையில் கோவில்களும் பணம் பறிக்கும் கூடாரங்களாக மாறிவிடவில்லையென்று கூறுவார்களா? கூற முடியுமா?

நாட்டில் நடைபெறும் நானாவித பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை விட ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும், வானொலி, சின்னத்திரைகளிலும் நாளும் பொழுதும் கோவில் திருவிழா, கும்பாபிஷேகம், விஷேச பூசைகள் என்ற விளம்பரங்கள் நாளுக்கு நாள் பீதியடையும் வண்ணம் செய்யப்படுகிறது.



உள்ளூர்காரர்கள் மட்டுமல்ல வெளியூர் காரர்களும் பல்வேறு கடவுள் சிலைகளை, உருவங்களை இங்கு கொண்டுவந்து கடவுள்கள் மயம், சிலைகள் மயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். என்றுமில்லாத வகையில் கடவுள்களின் இறக்குமதிகள் பெருவாரியாக நடக்கிறது.

இதில் வெட்கக் கேடு என்னவென்றால் குரங்குகளை ஆஞ்சநேயர் என்ற பெயரிலும், பல்லி, பாம்பு, எலி, குதிரை, கழுதை என்றெல்லாம் சிலைகளை வைத்து மக்களை ஏமாற்றி வரும் கலாசாரம் ஏதோ ஓர் பின்னணியின் ஆதிக்கத்தில் நடக்கிறதா என்பதை அறிந்து செயற்பட வேண்டியுள்ளது. கோடிக்கணக்கில் பணத்தை கொண்டுவந்து கொட்டி மக்களை மடையர்களாக்கும் பணியில் ஈடுபட்டிருப்போரை பற்றிய தொடர்புகளை நாம் அறிய வேண்டும். வளர்ந்து வரும் மாணவ, மாணவிகள் கூட மதம் பிடித்து அலையும் நிலைக்கு ஆளாகிவிடப்பட்டுள்ளனர்.

உள்ள கடவுள்களை வைத்து கும்பிடவே வழியில்லாதபோது வெவ்வேறு ஆண்டவர்களை பல்வேறு பெயர்களில் இறக்குமதி செய்து வியாபாரம் செய்யும் நடைமுறை இந்த சமூகத்தை அழித்துவிட எடுக்கும் முயற்சியாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரது ஒதுக்கீட்டுப் பணத்தில் கோயில்களின் செலவுக்காக பெருமளவு பணம் செலவளித்திருப்பதை கடந்த காலங்களின் கணக்குகளில் இருந்து நாம் அறியலாம். கோவில்களுக்கு மணி, தகரம், படிகட்ட சீமெந்து, திருப்பணிக்கு, தீப அலங்காரத்துக்கு உபயம் என்ற பெயரில் கொடுத்து கோவில் கொள்ளைகளில் தங்களையும் இணைத்துக் கொள்ளும் நிலைமையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இதை விட வெட்கக்கேடு பாலாபிஷேகத்துக்கு ஆயிரக்கணக்கில் செலவழித்திருப்பதாக கூறப்படும் கணக்கு விபரங்களே.

ஏற்கெனவே தோட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள கடவுள்களின் எண்ணிக்கை அதிகமானது. சாதி அடிப்படையில் சாமிகளும் ஆக்கப்பட்டுள்ள கேவலம் இங்குதான் உண்டு. கீழ்சாதிகளுக்கு ஒரு கோஷ்டி சாமிகளும் மேல்சாதிகளுக்கு ஒரு கோஷ்டி சாமிகளும் உண்டு. மதுரை வீரன், கல்லுமுனி, ரோதைமுனி, வைரவர், பத்திரகாளி, மலைமுனியன், இவை கீழ்சாதி சாமிகள். சிவபெருமான், பார்வதி, முருகன், விநாயகர், லட்சுமி, சரஸ்வதி இவையெல்லாம் மேல்சாதி சாமிகள். கிருஷ்ண பரமாத்மா, வெங்கடேஸ்வரர், பெருமாள் சாமி எல்லாம் பிஸிநெஸ் சாமிகளாம்.

*ஏற்கெனவே தோட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள கடவுள்களின் எண்ணிக்கை அதிகமானது. சாதி அடிப்படையில் சாமிகளும் ஆக்கப்பட்டுள்ள கேவலம் இங்குதான் உண்டு. கீழ்சாதிகளுக்கு ஒரு கோஷ்டி சாமிகளும் மேல்சாதிகளுக்கு ஒரு கோஷ்டி சாமிகளும் உண்டு. மதுரை வீரன், கல்லுமுனி, ரோதைமுனி, வைரவர், பத்திரகாளி, மலைமுனியன், இவை கீழ்சாதி சாமிகள். சிவபெருமான், பார்வதி, முருகன், விநாயகர், லட்சுமி, சரஸ்வதி இவையெல்லாம் மேல்சாதி சாமிகள். கிருஷ்ண பரமாத்மா, வெங்கடேஸ்வரர், பெருமாள் சாமி எல்லாம் பிஸிநெஸ் சாமிகளாம்.*

சாதியையும் பிரித்து, சாமிகளையும் பிரித்து சங்கங்களையும் பிரித்து, மக்களையும் மத அடிப்படையில் பிரித்து வைக்கும் திட்டமானது நமது அழிவிற்கே வழிவகுக்கும். மலையகம் விழித்தெழ வேண்டும். கண்களைத் திறந்து உண்மைகளைக் கண்டறிய வேண்டும். நடத்தப்படும் போலி நாடகங்களின் முகமூடிகளைக் கிழித்தெறிய வேண்டும்.

ஏனென்றால் இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து ஐம்பத்து மூன்று ஆண்டுகளாகி விட்டன. உலகம் முன்வைக்கும் வளர்ச்சியின் வரைபடத்தில் எந்தப் புள்ளியில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்? நமது வாழ்வின் கோலங்கள் எவற்றை நமக்கு உணர்த்துகின்றன. இங்கு ஏற்றத்தாழ்வுகள் அகன்று விட்டனவா? பொருள் சார்ந்த வாழ்வு நமக்கு எந்தளவு கூடியிருக்கிறது. வறுமை ஒழிந்து விட்டதா? தாகத்திற்கு தூய்மையான நீரருந்தும் சுதந்திரமாவது உண்டா? அரசியல்வாதிகளும் தொழிற்சங்கத் தலைமைகளும் செய்கின்ற அடாவடித்தனங்கள் குறைந்தா இருக்கிறது? உரிமைகளைப் பெற்றுவிட்டோமா? இந்த நிலையில் மதவாதிகளினதும் பிற்போக்கு சிந்தனைகளிலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகிறோமா?

மதவாதிகளினதும், காட்டுமிராண்டித்தன வழிபாடுகளினதும் நடைமுறைகளைப் பின்பற்றப் போகிறோமா? வளர்ந்து வரும் உலகத்தின் வளர்ச்சியில் நாம் அமுக்கப்பட்டு விடுவோம் என்ற பயங்கர நிலை இன்று உருவாகி வருகிறது. இதிலிருந்து நாம் எப்படி விடுபடப் போகிறோம் என்ற அங்கலாய்ப்பு ஏற்பட்டு வருகிறது. நமது பின்னடைவின் விளிம்பில் அமுக்கத்தின் சாயல் தென்படுகிறது. அந்த அமுக்கத்தின் தாக்கத்தில் ஏற்படப் போகும் பாதிப்புக்கள் பற்றி நமது தலைமைகளோ மதவாதிகளோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இனி நாம் நாமாக எழும்ப வேண்டும். நாம் நம்மை உணர்ந்து செயல்படத் தயாராக வேண்டும். அதுவே இன்றைய முக்கிய தேவையாகும்.

கோவில்களுக்குச் செலவழிக்கும் பணத்தில் எத்தனை தொழில்நுட்பக் கல்லூரிகளை கட்டியிருக்கலாம்? எத்தனை பாடசாலைகளை விருத்தி செய்திருக்கலாம்? எத்தனை நூலகங்களை அமைத்திருக்கலாம்? ஏன் அவற்றை எம்மால் செய்ய முடியவில்லை?

மலையக சமூகத்தை அழிக்க முனையும் சக்திகள் மலையக மக்களுக்கு கோவில்களை கட்டிக் கொடுத்து விட்டு அறிவை அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொள்கின்றன. இவற்றை நாம் அனுமதிக்கப் போகின்றோமா?

# நமக்கும் போராடத் தெரியும்!

## - கமலாதாஸ் -

**'நான் மூன்று மொழிகளைப் பேசி, இரண்டில் எழுதி, ஒன்றில் கனவு காண்பவள். 'ஆங்கிலத்தில் எழுதாதே - அது என் தாய்மொழி அல்ல' என்று கூறும் விமர்சகர்களே, நண்பர்களே, உறவினர்களே - நான் விரும்பும் மொழியில் பேசவும் என் போக்கில் செல்லவும் விட்டு விடுங்களேன்... நான் பேசும் மொழி எனதல்லவா? அது பாதி ஆங்கிலம், பாதி இந்திய மொழியாக, வேடிக்கையாக இருக்கலாம்.... இருப்பினும் அது நேர்மையானது - நான் மனுஷி என்பது எவ்வளவு நிஜமானதோ அவ்வளவு மனித நேயம் கொண்டது' - என்றும்,**

**'என்னுடைய நிர்வாணத்தை இரண்டு பரிமாணங்களாக வாராந்திர, மாதாந்திர, காலாண்டுப் பத்திரிகைகளின் பக்கங்களில் நான் நிரப்பியது ஒரு வருந்தத்தக்க தியாகம். என் ஆத்மாவின் குரலை ஒதுக்கிவிட்டு, தட்டெழுத்து இயந்திரத்தின் ஓசைகளை என் ஒரே பேச்சாகத் தத்து எடுத்துக் கொண்டிருக்கிறேன்...' என்றும் கூறும் கமலாதாஸ் என்ற புனைபெயர் கொண்ட மாதவிக்குட்டி 1934ம் ஆண்டு மலபாரில் பிறந்து, ஆங்கிலத்தில் கவிதைகளும், மலையாளத்தில் கதைகளும் எழுதி உலகளவில் புகழ் பெற்றவர். இவர் பெற்ற பூ ச்செண்டுகளும் அனேகம், பட்ட கல்லடிகளும் ஏராளம்!**

---



*உங்கள் இளம் வயது அனுபவங்கள் எந்த மாதிரியாக அமைந்தன? இன்றைய கமலாதாஸ், மாதவிக் குட்டியின் ஜனனத்திற்கு அவை அடி உரமாக இருந்ததென்று சொல்வீர்களா?*

குழந்தைப் பிராயத்தில் நான் அதிகமாகத் தனிமையில்' தான் வாழ்ந்திருக்கிறேன். ஆனால் அந்தத் தனிமைக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். என்னை, என் உணர்வுகளைப் புண்படுத்தி அழச் செய்த ஒவ்வொருவருக்கும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். ஏனென்றால் மனம் விட்டுப் பேச அதிக நண்பர்கள் இல்லாத நிலையில், புத்தகங்கள் படிப்பதில் ஈடுபாடு கொண்டிருந்த என்னை அந்தக் காயங்கள், வருத்தங்கள் தான் எழுத்தை நாடிப் போக வைத்தன. தவிர, வீட்டுக்கு வீடு 'மணி பிளாண்ட்' வளர்ப்பதைப் போல பெரும்பாலான குடும்பங்களில் தாங்கள் பரிசுத்தமானவர்கள் என்ற ஒரு வேஷம் இருந்ததும் என்னைப் பாதித்திருக்கிறது.

*நீங்கள் முதலில் எழுதியது கவிதையா, கதையா?*

ஆறு, ஏழு வயசிலிருந்தே கவிதை எழுதத் தொடங்கி விட்டேன். தலைகள் இழந்த பொம்மைகள் ஆயுசுக்கும் முண்டங்களாக இருக்க வேண்டியதைப் பற்றி எழுதியது ஞாபகம் இருக்கிறது. எட்டு வயதில் அண்ணாவோடு சேர்ந்து கொண்டு கையெழுத்துப் பத்திரிகைகளை எடிட் செய்திருக்கிறேன். 'பி.இ.என். இந்தியா'வில் (P.E.N. India) என் கவிதை முதன் முதலில் பிரசுரமானபோது பதினாலு வயசிருக்கலாம். சிறுகதை என்றால், ஒன்பதாவது வயதில் 'குஷ்டரோகி' என்ற தலைப்பில் எழுதியது 'மாத்ருபூமி'யில் பிரசுரமானது.

*இலக்கிய ரீதியாய்ப் புகழ் வாய்ந்தது உங்கள் 'நாலப்பாட்டு'க் குடும்பம். மாமா நாராயண மேனன், அம்மா பாலாமணி அம்மா — இருவருமே மிகவும் பிரபலமானவர்கள். அவர்களை, முக்கியமாய் அம்மாவை, ஆசானாகக் கொண்டதால் தான் அந்தச் சின்ன வயசிலேயே எழுதுவது உங்களுக்குச் சாத்தியமானதா?*

எனக்கு 'குரு' நிச்சயம் என் தாயார் அல்ல, என்னுடைய உள்ளுணர்வு தான் என்று சொல்வேன். அம்மாவும் நானும் ரொம்பவும் மாறுபட்டவர்கள். அம்மா சமுதாயத்தை விமர்சிக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டவர். தான் வாழ்ந்த சமுதாயக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு (according to the prescription) தாயன்பு, குழந்தைகளை மையமாக வைத்து எழுதினார். தன் கவிதைகளில் கணவனை எஜமானர் என்று குறிப்பிட்டார். மெத்தப் படித்தவர். ஆன்மிக உணர்வுடன் எழுதினார் என்பதால் மிகவும் மதிக்கப்பட்டவர். அம்மாவுக்கு உண்மையைப் போட்டு உடைப்பதில் நம்பிக்கையில்லை என்பதாலேயே எங்கள் இருவரின் சிந்தனை ஓட்டங்களும் மாறுபட்டன என்றே நான் நினைக்கிறேன். பெண்மை, பெண்ணின் ஏக்கங்கள் ஆசாபாசங்கள் பற்றியெல்லாம் அம்மா எழுதியதேயில்லை. ஆனால் பாருங்கள், 49 வருஷ தாம்பத்தியத்திற்குப்பின் அப்பா இறந்த போது, அம்மா அப்பாவின் தோலின் வழவழப்பைப் பற்றி நாலு வரிக் கவிதையை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதியிருந்ததை எதேச்சையாய் படிக்க நேர்ந்த போது அசந்து, நெகிழ்ந்து போனேன். அம்மா எழுதினதிலேயே அது தான் சிறந்தது. ஒரு பெண்ணிடமிருந்து பிறந்த நிஜமான கவிதை...

*கவிதை, இலக்கியம் பற்றி உங்கள் கண்ணோட்டத்தைக் கூறுங்கள்?*

நாம் படைக்கும் இலக்கியம் வாசகருக்கு இரண்டாவது தோல் போல அவ்வளவு நெருங்கினதாக இருக்க வேண்டும். என்னுடைய அனுபவம் எவ்வளவு சிறியதாக இருப்பினும் அதை என் எழுத்தில் முழுமையாக வெளியிட முயற்சிக்கிறேன். உடம்பின் பெருமையை, தன்மையைப் பலர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது என் கருத்து. ஆன்மிக அனுபவத்தைக் கூட உடம்பில் தோன்றும் மயிர்க்கூச்சல் மூலம் தானே உணருகிறோம்? ஆக, உடம்பும், ஐம்புலன்களும் இல்லாவிடில் எந்த வழிகாட்டுதலையும் பெறுவது சாத்தியமில்லை. இலக்கியமும் இப்படித்தான் எதையுமே நெருக்கமாக உணர வைப்பதாக இருக்க வேண்டும்.

*உங்களுக்கு எந்த இலக்கிய ரீதியான எழுத்துக்கள் மிகவும் பிடித்தமானவை?*

எஸ்.கே.பொற்றேகாட், மலையாளம் படிக்கக்கற்ற நாளிலிருந்து நான் வெகுவாக ரசிக்கும் எழுத்தாளர். பொற்றேகாடின் தரத்தை இன்றுவரை வேறு யாருமே எட்டிப் பிடிக்கவில்லை. பொற்றேகாட் போன்றவர்கள் எழுதிய காலத்தில் இலக்கியம் வெகுவாக அன்றைய வாழ்க்கையைப் பிரதிபலித்தது. இன்று நிலை மாறிவிட்டதாகவே, இலக்கியத்தை சமுதாயம் பின்பற்ற துவங்கிவிட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது.

*கேரள மாநிலத்தில் பெண்கள் ஜனத்தொகையில் பாதி இருந்தும், படிப்பறிவு பெற்றும் கூட இன்னமும் எழுத்துலகில் ஆணாதிக்கம் தான் அதிகம் இருக்கிறது என்றால் ஒப்புக் கொள்வீர்களா? இந்த நிலைக்குக் காரணம் என்ன?*

பாரம்பரியம் என்று பார்த்தால் இந்தியாவில் பேச்சுவழி இலக்கியம் தான் பரவலாக வழக்கத்தில் இருந்தது. இதில் பெண்களின் பங்கு குறைவு, பக்த மீரா, கர்நாடகத்தில் மஹாதேவி அக்கா, தமிழில் ஒளவையார் என்று பாடல்கள் மூலம் இலக்கியத்தைப் பரப்பியவர்கள் ஒருசிலர் தான். ஆனால் அவையெல்லாம் கூட பக்தி அடிப்படையில் அமைந்திருந்தன. சமீபகாலமாகத்தான் இந்த நிலை மாறி வருகிறது. தங்களைப் பற்றி, தங்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதும், எழுதுவதும் சாத்தியம் என்பதைப் பெண்கள் உணர முற்பட்டு விட்டார்கள். இனிமேல் பெண்கள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை என்று தான் நான் சொல்வேன்.

*நீங்கள் இருபது வருஷங்களுக்கும் மேலாக தைரியமாக எழுதி வந்திருக்கிறீர்கள். இருந்தாலும் உங்கள் பின்னால் வந்த பெண் எழுத்தாளர்களிடம் அந்தத் துணிச்சல் இருப்பதாகத் தெரியவில்லையே?*

கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். முதலில் கற்றுக் கொடுக்கப்பட்ட பல விவரங்களை அவர்கள் துறக்க முனைய வேண்டும். பல தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். சீதையும் சதிலீலாவதியும் தான் தங்களின் முன்மாதிரிகள் என்று நம்பியதை மாற்றி, புதிய கலாசாரத்தை நம்மைப் போன்ற சிலர் உருவாக்க முனைவது நிச்சயம் நடக்கும். அது உண்மையைப் பேசும் ஒரு கலாசாரமாக இருக்கும். அதற்காக நாம் வசவுக்கு உள்ளாகலாம். புண்படுத்தலுக்கு ஆளாக்கப்படலாம். பரவாயில்லை. நமக்கும் போராடத் தெரியும், கவலையில்லை...

*உங்களுடைய தீவிரமான எழுத்துப்பணியில் உங்களுக்குப் பிடிக்காத எழுத்தை நீங்கள் எழுதும் கட்டாயம் இருந்திருக்கிறதா?*

என் கணவரின் வற்புறுத்தலுக்காக அப்படிச் சில கதைகளை நான் எழுதியது பிற்காலத்தில் எனக்கு வருத்தத்தைத் தந்திருக்கிறது. என்றாலும் அவரை சந்தோஷப்படுத்த முனைந்தது, எனக்குத் திருப்தியைத் தந்ததும் நிஜம்.

*நீங்கள் முதலில் சொன்ன கருத்தும், இப்போது சொல்வதும் முரண்படுகிறதே! ஒரு எழுத்தாளர் இந்த மாதிரி கட்டாயங்களுக்கு உடன்படலாமா?*

அந்த மாதிரிக் கதைகளை எழுதியபோது என் கணவர் சந்தோஷப்பட்டாரே! எனக்கு வேறு விதமான நபரோடு திருமணம் ஆகியிருந்தால் ஒருவேளை நான் அந்த மாதிரியான எழுத்துக்களை எழுதியிருக்க மாட்டேனா என்னவோ! ஒரு கவிஞராக இருக்கும் நிறைவு எனக்குப் போதுமானதாய் இருந்திருக்கும், உரைநடையில் ஒரு வரிகூட எழுதியிருக்க மாட்டேன் நிச்சயம்.

*எந்தவிதக் கவிதைகளை எழுதும் போது நீங்கள் வாசகர்களோடு முழுமையாகத் தொடர்பு கொள்ள முடிகிறது என்று நினைக்கிறீர்கள்?*

காதல் கவிதைகளை... புனிதமான அன்பு, காதல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆண், பெண், முதியோர், இளைஞர், பிராணிகள். அனைவரையும் நேசிக்கிறேன். ஒரு குழந்தையைப் போல நான் எல்லாவற்றையும் காதலிக்கிறேன். வளர்ந்த பிறகு கூட என்னுடைய அந்தக் குணம் மாறவேயில்லை.

*பிடிக்காத ஒரு காரியத்தைச் செய்யும்படி யாராவது, ஏன் உங்கள் கணவர் கூடத்தான், வற்புறுத்தியபோது 'எனக்குப் பிடிக்கவில்லை' என்று வாதிட்டிருக்கக் கூடாதா?*

வாதம் செய்வது எனக்குப் பிடிக்காது. யாராவது தர்க்கம் செய்ய முனைந்தால் மாடிக்குப் போய் தனியாக அமர்ந்து புத்தகம் படிக்கத் துவங்கி விடுவேன்.

*இது 'நெருப்புக்கோழித்தனம்' அல்லவா? நிஜத்தை எதிர்நோக்கப் பயந்து கொண்டு ஓடும் கோழைத்தனம் அல்லவா?*

வாதம் பண்ணுவது மட்டும் யதார்த்தமா? என் நிஜம் எது என்று எனக்கே புரியவில்லையே! தேடல் இருப்பது புரிகிறது. ஆனால் எதை நாடி என்பது புரிபடவில்லை. ஒருவேளை எனக்கு சாமர்த்தியம் போதாதோ என்னவோ?

*உங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன?*

என்னை 'எழுது' என்று வற்புறுத்திய கணவர் இப்போது இல்லை. இருந்தாலும் இன்னும் ஒரு வருஷத்திற்கு எதுவும் எழுத மாட்டேன் என்று நினைக்கிறேன். நான் இயந்திரம் இல்லை. தற்சமயம் என் நேரம் கண்ணீருக்கு மட்டும் தான்.

*இளைய தலைமுறை எழுத்தாளர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?*

சரியாகச் சொல்லத் தெரியவில்லை. சிலர் தென் அமெரிக்க எழுத்தாளர்களைப் பின்பற்றுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் இது தவறு. காரணம் பொருளாதாரம், பழக்க வழக்கங்கள் என்று அனைத்திலும் மாறுபடும் இன்னொரு நாட்டினரின் அனுபவங்கள், சிந்தனைகளைக் கடன் வாங்குவது நமக்கு எந்த விதத்திலும் உதவாது.

*இந்த நிலை தொடரும் என்று நினைக்கிறீர்களா?*

இது அவ்வப்போது வந்துபோகும் உடை நாகரீகம் போன்றது.

*சில வருடங்களுக்கு முன் அரசியலில் புகுந்து தேர்தலில் கூட நின்றீர்கள். சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வுக்காகத் தீவிரமாய் பாடுபட்டீர்கள். இதெல்லாம் எழுத்திலிருந்து பிரியும் கிளை நடவடிக்கைகள் என்று நினைக்கிறீர்களா?*

இல்லை. என் குழந்தைகள் கட்டாயப்படுத்தினார்கள் என்று சில காரியங்களைச் செய்ய முனைந்தேன். ஆனால், இங்கே உள்ள உள்ளூர்வாசிகளுக்கும், கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் நான் துணிச்சலான பெண் என்பதும், என் நேர்மையான உழைப்பும் பிடிக்காமல் போயிற்று...

*அரசியலில் ஏன் நுழைந்தோம் என்று வருத்தப்பட்டதுண்டா?*

உண்டு. இங்கு பெண் என்ற அணுகுமுறையில் ஒரு பாரபட்சம், கண்ணைக் கட்டிவிட்டதனம் இருக்கிறது. பெண்கள் படித்திருந்தாலும் இன்னமும் அவர்களுக்கு உரிய உயர்வு, சுதந்திரம் கிட்டவில்லை. குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியின் அமைப்பு சரியாக இல்லை என்றே நான் நினைக்கிறேன். பள்ளிகளில் கூட அரசியல்வாதிகள் பாதிப்பு, வேண்டாத தலையீடு நிறைய இருக்கிறது. பத்தாவது படிக்கும் பையனுக்கும் உருப்படியாய் மலையாளத்திலோ, ஆங்கிலத்திலோ எழுதக்கூட வருவதில்லை. ஆனால் தேவையற்ற அரசியல் அறிவு, அடாவடித்தனம், அவனை அதற்குள் பாதித்து விடுகிறது.

*இந்த நிலை பரவலாக எல்லா மாநிலங்களிலும் உள்ளது தானே?*

இதெல்லாம் மாற வேண்டும். முக்கியமாய் மதம் பற்றின உணர்வு கூட. முன்பு நான் இந்து மதத்தைக் கடைபிடிப்பவளாகத்தான் இருந்தேன். ஆனால் பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு, மதத்தைச் சார்ந்து நிற்பதை விட்டுவிட்டேன். இது என்னை நிறையவே அமைதிப்படுத்தியிருக்கிறது. மதத்தை விட்டுவிட்டது கடவுளை என்னை இன்னும் நெருங்க வைத்திருக்கிறது. கலாசாரம், பண்பாடு என்ற பெயரில் விஷத்தை உமிழ்வதும், பரப்புவதும் நிறுத்தப்பட வேண்டும். கலாசாரம் என்பது அவரவர்க்குள்ளேயே தெளிந்து உணரப்பட வேண்டிய விஷயம். அரசியலால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதிக்கலாம்.

*கடைசியாக ஒரு கேள்வி — இன்றைய மலையாள இலக்கியத்தின் நிலை எப்படி உள்ளது?*

நிறையப் பாசாங்கு கொண்டதாக இருக்கிறது. புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டது போன்ற இந்த நிலை மாற்றப்படவில்லை என்றால் இலக்கியத்துக்கு எதிர்காலமே இல்லை.

*'பாசாங்கு' என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?*

நான் உயர்ந்தவன் என்கிற எண்ணத்தோடு ஒரு கவிஞன் எழுதுவதால் ஒரு பயனும் இல்லை. அவநம்பிக்கைகள், மனித வாழ்வின் துன்பங்கள் என்று உண்மை அனுபவத்தைக் கொண்டு எழுதினால் அதில் அழுத்தம் நிச்சயம் இருக்கும். ஏனென்றால், மீளமுடியாத ஒரு தவிப்பைப் பற்றியதாக அது அமையும். மனித சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டு கவிதை எழுதினால், அது தான் தலைசிறந்த படைப்பாகும். அதுவே காலத்தை வென்று நிற்கும். ஆனால், அதோடு பொய்யையும், பசப்பையும் சேர்த்து நகாசு வேலை செய்தால், அது வெறும் திடீர் நாகரிகமாகத்தான் இருக்குமே தவிர நிரந்தரமானது அல்ல. பாருங்கள், திருவனந்தபுரத்தில் ஐயப்பன் என்ற ஒரு அற்புதமான கவிஞர் திரிந்து கொண்டிருக்கிறார். அவரைக் கவிஞர் என்று யாரும் ஏற்பதில்லை. ஏனென்றால் அவர் ஒரு குடிகாரர். இது பாசாங்கு இல்லையா? கதைகளில் மிகைப்படுத்துதல் இருக்கலாம். ஆனால் கவிதையில்? மேலோட்டமான அலங்கார வேலை எதுவும் அதற்கு வேண்டாம் அது மந்திரம். அவ்வளவு தான் நான் சொல்வேன்.

நன்றி - இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு

# 'யுத்தத் துயரங்களின் விசும்பல் கவிதையாக்கப்பட்டது'

~ சமில லியனகே ~

*திலீனா வீரசிங்க*


மக்கள் தொடர்பாடல் பட்டதாரியான சமில லியனகே, மானுடவியலில் முதுகலைப் பட்டத்திற்காக தயாராகிக் கொண்டிருக்கிறார். ஆலோசகராக தொழிற்புரியும் அவர், சுதந்திர எழுத்துத் துறையில் நாட்டமிக்க மென்னுணர்வாளர். அண்மையில் சமில தனது முதற் கவிதைத் தொகுப்பான 'அழாதே அரசே' எனும் தொகுப்பை வெளியிட்டுள்ளார். தனது இப்புதிய படைப்பின் மூலமாக சமில எம்மை நெருங்கினார்.

'இக்கவிதைத் தொகுப்பின் கடைசிக் கவிதை அன்புள்ள பிரபாகரன். . . எனத் தொடங்கி தமிழில் எழுதப்பட்டுள்ளது. அது உடனடியாகவே சிங்கள சமூகத்தை கலவரத்திற்குள்ளாக்கக் கூடிய, விமர்சனத்திற்குள்ளாகக் கூடியதொன்றாகும். அதனாலேயே அக்கவிதையின் உள்ளடக்கம் என்னவென்பதை கண்டறிய சிங்களவர்கள் ஆர்வம் கொள்கின்றனர். எனது நூல் வெளியீட்டு தினத்தன்றே நான் இவற்றை எதிர்கொள்ள நேர்ந்தது. வேண்டுமென்றேதான் நான் இக்கவிதையின் சிங்கள வடிவத்தை இந்நூலில் உள்ளடக்கவில்லை. அதன் அர்த்தம் என்னவென அவர்கள் என்னிடம் கேட்டபோது அது பற்றி தமிழ் சகோதரர்களிடம் சென்று கேட்டுத் தெரிந்துகொள்ளுமாறு கூறினேன். எனது நோக்கமெல்லாம் சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையே தகர்ந்து போயுள்ள மானுட உரையாடலை மீள நம்தேசத்தில் கட்டியெழுப்பிட வேண்டுமென்பதாகும். எமக்கிடையே உரையாடல் நடைபெறுமாயின் நமக்கிடையே நட்புறவு வளர்ந்திடும். நம்பிக்கை கட்டியெழுப்பப்படும். அது தற்போது நடைபெறும் யுத்தத்தை முற்றுக்குக் கொண்டு வருவதற்கான அத்தியாவசிய அடிப்படை நடவடிக்கையாகும்.'

சமிலவின் 'அன்புள்ள பிரபாகரன்' கவிதையின் உள்ளடக்கம் என்னவென்றால், சிங்கள காதலன் ஒருவர் தனது தமிழ் காதலியை சந்திப்பதற்கு ஒருதடவையாவது அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுப்பதாகும். காதல் நமது வாழ்வின் மானுட குண நலன்களை தூண்டிவிடும் செயலாகும். தமிழ் மனிதர்களின் பால் காதல் கொள்ளுமளவிற்கான சமிலவின் மென்னுணர்வுத் தூண்டலின் பின்புலமென்ன?

'எந்த உயிரின் மீதும் நான் மென்னுணர்வு கொண்டுள்ளேன். சிறுவயது முதலே எனது சூழலில் வாழ்ந்த மனிதர்களுடன் உறவு கொள்வதற்கு எனக்கு வாய்ப்பிருந்தது. எனது தகப்பனார் தெற்கில் தமிழர்கள் வாழும் இறப்பர் தோட்டமொன்றில் கள உத்தியோகத்தராயிருந்தார். அதனால் சிறுவயது முதலிருந்தே தமிழ் மனிதர்களின் அடக்குமுறைக்குள்ளாகும் வாழ்வை இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கவும், அவர்களை மனித நேயத்துடன் அணுகவும் என்னால் முடிந்தது. வடக்கே நடைபெறும் யுத்தத்திற்கு புறம்பாக மௌன யுத்தம் ஒன்று தோட்டப்பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அம்மௌன யுத்தத்தினால் அத்தோட்டப்பகுதி மக்கள் பெரும் அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள். எனது கவிதை நூலில் நான் அவ்வடக்குமுறைகளை எளிமையாகத் தானும் வெளிப்படுத்த எத்தனித்திருக்கிறேன். இன்றைய அரசியலில் இத்தோட்டப்பகுதி மக்களின் பிரச்சினைகள் பேசப்படுவதில்லை. எனக்கு வாய்ப்புக் கிடைத்தால் நான் வடக்கில் அரசியல் செய்பவர்களிடம் கேட்பேன் ஏன் அவர்கள் தோட்டப்புற மக்கள் பற்றி மௌனமாயிருக்கிறார்கள் என.'

சமில தவாக்கலையிலுள்ள ஸ்ரீபாலி தேசிய கல்விக் கலாசாலையில் கல்விப் பட்டதாரிக்கான பயிற்சியும் பெற்றார். அங்கிருந்த போது, தனக்கு தமிழில் உரையாட முடிவதால் அங்குள்ள தமிழர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு அவர்களது வாழ்வுடன் ஒன்று கலந்திட தம்மால் முடிந்ததாகக் கூறினார். அங்கு தமிழ் சிங்கள கல்விப்பீட மாணவர்கள் இணைந்து தமது உரிமைகளுக்காக பெரும் போராட்டம் நடாத்தியதை சமில நினைவு கூர்கிறார். பிற்காலத்தில் சமில அரச சார்பற்ற நிறுவனமொன்றில் ஆலோசகராக பணிபுரிகையில் தலாவக்கலை லிபகலே தோட்டத்தில் உயிர்வாயு உற்பத்தி செய்யும் ஆய்விலும் ஈடுபட்டார். அவ்வாறு தோட்ட பகுதியில் வாழ்ந்த அனுபவங்களை 'தேவி' எனும் தலைப்பில் கவிதைத் தொகுப்பாக்கி வெளியீடு செய்யும் முயற்சிகளில் உள்ளார். மலைநாட்டு தோட்டப்பகுதியில் வாழும் இளம்பெண்ணும் கரையோர இளம் ஆணும் திருமணம் செய்கின்றனர். கலப்புத் திருமணத்தினால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இக்கவிதைக்குப் பின்புலமாய் அமைந்துள்ளன. இன முரண்பாட்டை பின்புலமாய்க் கொண்ட சிறுகதைத் தொகுதியொன்றையும் அவர் தற்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.



தமது தொழில் சார்ந்து வடக்கில் பல பிரதேசங்களுக்கும் பயணம் செய்துள்ள சமில தமது அனுபவங்களை இவ்வாறு கூறுகிறார்.

'யுத்தம் மிகவும் உக்கிரமாயிருந்த காலங்களில் நான் அப்பகுதிகளில் பயணம் செய்துள்ளேன். அச்சந்தர்ப்பத்தில் நான் யுத்தத்தில் மனிதர்கள் அனுபவிக்கும் துயரத்தை அவதானித்தேன். குறிப்பாக, திருகோணமலை பிரதேசத்தில் அனைத்து இனங்களை சார்ந்த மனிதர்களும் யுத்தத்தினால் அனுபவிக்கும் துயரக்கதைகளை நான் கேட்டறிந்தேன். பெரும்பாலானவர்கள் யுத்தத்தை காக்கி உடை, துப்பாக்கி, வெடியோசை என்பதில் தான் காண்கின்றனர். யுத்த பூமியில் பௌதீக சண்டை மாத்திரமே நடைபெறுகிறது. யுத்த பூமிக்கு அப்பால் பற்றிப் பரவிடும் யுத்த பாதிப்புகள் ஒட்டுமொத்த இலங்கையினதும் கலாசார மானுட ஆன்மாவை சிதைப்பதை ஒவ்வொருவரிடமும் காண முடிகிறது. இதில் வித்தியாசம் என்னவென்றால், யுத்த பிரதேச மக்களிடம் இப்பாதிப்பை அதிகமாகக் காணமுடிவது தான்.'

சமில தனது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் யுத்த அடக்குமுறைகளையும் பொருளாதார கலாசார அடக்குமுறைகளையும் எழுத்தினூடாகத்தான் வெளிப்படுத்துகிறார். இந்த அடக்குமுறைகளிலிருந்து மீள்வதற்காக நடைபெறும் போராட்டத்தின் போது சிறந்த தொடர்பூடக முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்பது அவரது கருத்தாகும்.

'நாம் இந்த அடக்குமுறைகளில் இருந்து விடுபட வேண்டுமாயின் அதை இலக்காகக் கொண்ட உரையாடலை கட்டியெழுப்பிட வேண்டும். சம்பிரதாயத்திலிருந்து விடுபட்ட பெறுபேறு தரக்கூடிய உரையாடலுக்காக நாம் ஒன்றுகூட வேண்டும். எனது அரசியலையும் உரையாடலையும் நான் எழுத்தின் ஊடாக மேற்கொள்கின்றேன். மேலும் சிறந்த உரையாடலை ஏற்படுத்துவதற்காக சமாதானத்திற்கும் சமத்துவத்திற்குமான உரையாடல் எனும் பெயரிலான குழுவொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளேன். பால்நிலை சமத்துவம் மற்றும் இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான உரையாடல் ஒன்றை ஆரம்பிப்பதும் இதில் அடங்கும். இதில் தமிழ் சகோதர சகோதரிகளையும் நமது முயற்சியில் இணைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறேன்.' என்கிறார் சமில. ❍

---

# சின்ன புஷ்ஷின் வீரர்களும் நவீன ஆயுதங்களும்

\- எம்.கே.எம்.ஷகீப்

மீண்டும் இம்முறை, தன் மாற்று எழுத்துக்களாலும், நிதானமான மற்றும் நியாயமான அணுகல்களாலும் புகழ்பெற்ற ஒரு பத்தி எழுத்தாளரின் சமகால விடயங்கள் பற்றிய எழுத்துக்களோடு வருகிறேன். இவர் 'John Pilger- லண்டனின் மிரர் பத்திரிகையில் எழுதி வருபவர். அண்மைய உலக நிகழ்வுகள் தொடர்பான இவரின் சில நல்ல எழுத்துக்களை வாசிக்க முடிந்தது. நமது அலட்டல்களையும், குண்டுச்சட்டிக் குதிரையோட்டல்களையும் விட இவ்வாறான வாசிப்பின் பகிர்தல்கள் பெறுமதியானதாக இருக்கிறது எனக்கு. இது சற்று நீண்ட கட்டுரை. இது முதற்பகுதி.. இறுதிப்பகுதி அடுத்தவாரம்..

முன்னெப்போதுமில்லாதவாறு பெரும் யுத்த ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அமெரிக்க அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது. அதனது இராணுவச் செலவுகள் 379 பில்லியனாக உயர்கிறது. இதில் 50 பில்லியன் அதன் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.!

பெரும் அழிவைத் தரும் புதிய இராணுவத் தளபாடங்களுக்காக இம்முறை அதிக நிதி ஒதுக்கப்படலாம்.. அதுபோலவே இராணுவ நடவடிக்கைகளுக்காகவும்.. அதாவது அடுத்த நாடுகள் மீதான படையெடுப்புக்களுக்காகவும்!

செப்டம்பர் 11க்குப் பின்னான அசாதாரண செய்திகளில், மிக எச்சரிக்கை தருகிற செய்தி இதுவாகும். ஆக இது எம் மௌனத்தை நாம் கலைப்பதற்கான நேரம்.

அதாவது ஏனைய நாட்டு அரசாங்கங்கள் மௌனத்தை கலைப்பதற்கான நேரம் இது என்றுதான் சொல்ல வருகிறேன். அதிலும் குறிப்பாக ஆப்கானிஸ்தான் விடயத்தில் அமெரிக்காவோடு சேர்ந்து முதலைக் கண்ணீர் வடித்த டொனி பிளேயரின் அரசாங்கத்தைக் கலைக்க வேண்டும். அதற்கு புஷ் நிர்வாகத்தின் உண்மையான திட்டங்கள், இலக்குகள் எல்லாம் நன்றாகவே தெரியும். இது விடயத்தில் அது எந்த மறுப்புக்களையும் இதுவரை விடுத்ததில்லை.

அண்மையில் பிரிட்டிஷ் மந்திரிகள் பலர் ஆப்கானிஸ்தானில் கிடைத்த 'குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதான' வெற்றிகள் தொடர்பான ஆதாரங்களையிட்டு அறிக்கைகள் விடுத்திருந்தார்கள். ஒசாமா பின் லாடனையோ, முக்கிய காஇதா உறுப்பினர்களையோ பிடிக்காமல், 5000 திற்கும் அதிகமான அப்பாவி ஆப்கானியர்களைக் கொன்ற இந்த வெற்றிக்காக இந்த அறிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. (இப்படியாவது நடந்திராவிட்டால் பிறகு எப்படித்தான் அவர்கள் அறிக்கை விடுவது!?)

அமெரிக்காவின் தோல்வியை மறைத்து அமெரிக்க மக்களை ஆற்றுப்படுத்துவதற்கான ஒரு கைங்கரியமாகவே பென்டகனும் எக்ஸ்ரே முகாம் கைதிகளின் படங்களை வெளியிட்டிருந்தது. அமெரிக்க மக்களும்தான் ஏனைய மக்களும் தான் முன்னர் நடந்த குளிர்யுத்தம் மாதிரியான நீண்டதும் பயங்கரமானதுமான யுத்தத்தை போன்று நடத்துவதென்றுதான் உத்தரவாதம் தரப்பட்டிருந்தார்கள்.

சிலதே உண்மையானதும், பெரும்பாலும் சோடிக்கப்பட்டு உருவாக்கப்பட்டதுமான 'பயங்கரவாத' அச்சுறுத்தல் என்பது இப்போது இன்னொரு 'புதிய சிவப்பு அச்சுறுத்தலே'!

ஒரே மாதிரியானவை தான் இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

1950ல் அமெரிக்கா தன் யுத்த நிறுவனங்களின் வளர்ச்சியை நியாயப்படுத்துவதற்காகவும், ஏனையவர்களின் ஜனநாயக உரிமைகளைத் தடுப்பதற்காகவும், புரட்சியாளர்களை ஒடுக்குவதற்காகவும் என சிவப்பு அச்சுறுத்தல் என்ற ஒரு கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தியது. அது மாதிரியான ஒன்றே இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது.

மக்களின் பணத்தை விழுங்கி ஏப்பம் விடுவதற்கான நியாயப்படுத்தல்களைச் செய்ய அமெரிக்க நிறுவனங்களுக்கு இப்போது புதிய எதிரி கிடைத்திருக்கிறது. உண்மையிலேயே புதிய இராணுவ நிதி ஒதுக்கல்கள் உலகின் வறுமையை இல்லாமலாக்க தாராளமாகப் போதியதாகும் என்பது இன்னொரு விடயம்.

சிந்திக்க முடியாதவை பற்றி சிந்திக்குமாறு தான் பென்டகனுக்கு கூறியுள்ளதாக பாதுகாப்புச் செயலர் டொனால்ட்ஸ் ரம்ஸ்பீல்ட் தெரிவித்திருக்கிறார்.

புஷ்ஷின் குரலாக ஒலிக்கும் உப ஜனாதிபதி டிக் செனாய், '40 அல்லது 50 நாடுகளுக்கு எதிரான இராணுவ ரீதியானதும் வேறு மாதிரியானதுமான நடவடிக்கைகளுக்கான முஸ்தீபுகளில் அமெரிக்கா யெற்பட்டுவருவதாகத்' தெரிவித்திருக்கிறார். அத்துடன் இந்தப் புதிய யுத்தம் '50 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் நீடிக்கலாமென்றும்' எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

புஷ்ஷின் ஆலோசகர்களில் ஒருவரான ரிச்சர்ட் பேர்ல் 'எந்தப் படிமுறைகளுமற்றதாக அவை இருக்குமென்று சொல்லியுள்ளார். :இது ஒரு முழுமையான யுத்தம். நாம் பல்வகைப்பட்ட எண்ணிறைந்த எதிரிகளோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். உலகம் பற்றிய எங்கள் நோக்கை அதன் போக்கிலேயே விட்டுவிடவேண்டும். நாம் வெறுமனே சிறு அளவில் புத்திசாதுர்யமான இராஜதந்திரங்களை பாவிக்கவில்லை , மாறாக ஒரு முழுமையான அளவில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்தால்தான் எங்களைப் பற்றிய புகழ்ப்பாக்களை எங்கள் சிறுவர்கள் இப்போதிருந்தே பாடவாரம்பிப்பார்கள்.'

இவர்களின் இந்த வார்த்தைகளெல்லாம் ஜோர்ஜ் ஓவெல்லின் தீர்க்க தரிசனம்மிக்க வார்த்தைகளை ஞாபகப்படுத்துகிறது.

அவர் தனது நாவலில் சமூகத்தை ஆக்கிரமிக்கிற மூன்று (1-யுத்தம் என்பது சமாதானம், 2-சுதந்திரம் என்பது அடிமைத்தனம், 3- அறியாமை என்பது உறுதி) கோஷங்கள் பற்றிக் கூறியிருந்தார்.

அதே மாதிரித்தான் இப்போதைய 'பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின் கோஷமும் முரண் அர்த்தத்தையே கொண்டிருக்கிறது. அதாவது :யுத்தமென்பது பயங்கரவாதம்'.

அமெரிக்கத் தாக்குதலின் பெரும்பாலான அடுத்த இலக்கு ஆபிரிக்கக் கண்டத்தின் ஒரு வறுமை நாடான சோமாலியா. அங்கே அல்-காஇதா அமைப்பின் முகாம்கள் உள்ளதாக வோஷிங்டன் கூறிவருகிறது.

இது, அமெரிக்காவின் அரவணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக சோமாலியாவோடு முரண்டு பிடித்துக் கொண்டிருக்கிற பக்கத்துப் பாட்டாளியான எதியோப்பியா பரப்பிவிட்ட ஒரு கதை! இதுதவிர, அங்கு பாரிய எண்ணெய் வளங்கள் இருப்பது இன்னொரு விடயம்!

இது போக, அமெரிக்கா சோமாலியாவோடு பழைய பாக்கியொன்றையும் தீர்க்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

1993ல், ஜோர்ஜ் புஷ் பெரியவரின் இறுதி நாட்களில், அமைதியை ஏற்படுத்தி 'சகஜநிலையைக் கொண்டுவருவதற்காக' என்ற பெயரில் அமெரிக்கா சோமாலியாவை ஆக்கிரமித்திருந்த வேளை 18 அமெரிக்கப் படையினர் அங்கு கொல்லப்பட்டிருந்தனர் என்பது இங்கு நினைவுபடுத்தத்தக்கது.

இப்போது வெளியாகியுள்ள Black Hawk Down என்ற ஹொலிவூட் திரைப்படம் வேறுமாதிரியாக, உண்மைக்குப் புறம்பானவைகளைச் சொல்லிக் கொண்டிருப்பது புதினமான ஒன்றல்ல! அமெரிக்கா 7000 -10000 வரையான சோமாலியர்களைக் கொன்று குவித்தார்கள் என்ற உண்மையை இந்தப் படம் கண்டு கொள்ளவில்லை.

ஈராக், ஆப்கானிஸ்தான், கம்போடியா, வியட்நாம் போன்ற நாடுகளில் அமெரிக்கக் குண்டுத் தாக்குதல்களால் கொல்லப்பட்ட மக்களைப் போன்று தான் இந்த சோமாலிய மக்களும் அவர்கள் கண்ணுக்கு மனிதர்களாகத் தெரியவில்லை. இவர்களின் சாவுகளெல்லாம் மேற்கில் எந்த அரசியலோ, ஊடகப் பெறுமதியோ அற்ற ஒன்றாகத்தான் இருந்து வருகிறது.

நமது சின்ன புஷ்ஷின் வீரர்கள் நவீன ஆயுதங்களோடு மீண்டும் அங்கு 'பயங்கரவாதிகளைத்' தேடிச் செல்லவுள்ளார்கள், மீண்டும், அங்கு கொல்லப்படும் அப்பாவிகள் எந்தப் பெறுமதியற்றவர்களாகவும் ஆகப் போகிறார்கள்..பிறகு நாங்கள் அதுபற்றிய Black Hawk Down-II என்ற இன்னொரு ஹொலிவூட் படத்தை எதிர்பார்த்திருக்கலாம்! ❍

# விரு(ம்பி)ப்பூட்டும் விலங்குகள்

- அர்த்தநாரி

பெண்ணிய சிந்தனைகள் முனைப்புப் பெற்று, "ஆண் பலமிக்கவன், தனித்தியங்குபவன், துணிவுள்ளவன், புதுப்புது முயற்சிகளில் ஈடுபடுபவன், பாலியல் சுதந்திரம் உள்ளவன்; அதேசமயம் பெண்ணோ வீட்டில் இருப்பவள், வெட்கம் உள்ளவள், பலவீனம் நிறைந்தவள், உணர்ச்சி வசப்படுபவள், தங்கி வாழ்பவள்' என்ற ஆணாதிக்க சமூக அமைப்பின் 'வழி புனையப்பட்ட ஆண் பெண் அடையாளங்கள் தமது தனித்துவத்தை மெல்ல மெல்ல இழந்து பெண்ணின் பல்பரிமாண ஆற்றல்கள் பல திசைகளிலும் வேகமாக வெளித் தெரியும் ஒரு காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம்.

உயிர்களின் உருவாக்கத்திற்கும் உறவுகளின் பிணைப்புக்கும் ஆதாரமாய் விளங்கும் பெண்கள் சமூகத்தின் இன்றைய பெரும் பிரயத்தனங்களில் ஒன்று ஆணாதிக்க சமூக அமைப்பு தன் மீது வலிந்து பிணைத்திருக்கும் அனைத்து விலங்குகளிலிருந்தும் விடுவித்துக் கொள்ளப் போராடுதல்.

பெண் தனக்குத்தானே விரும்பி அணிபவை, பெண்ணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அணிவித்து விடுபவை என ஆணாதிக்க சமூக அமைப்பால் பெண்ணைச் சுற்றியிருக்கும் விலங்குகள் அனைத்திலிருந்தும் விடுபட வேண்டிய அவசியம் பெண்ணுக்கு உண்டு. இவ்விலங்குகளில் பல அறிவின் துணைகொண்டு சுலபமாக அகற்றப்படக் கூடியவை. அறிவின் துணைகொண்டு மிகச் சுலபமாக அகற்றக்கூடிய ஒரு விலங்கு தொடர்பான ஒரு பொதுப்பார்வையை தர்க்கரீதியாக ஆராயும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

**சாமத்தியச் சடங்கு :**

வளரிளம் பருவத்தில் இருக்கும் ஒரு சிறுமியின் ஆளுமையை மிக மோசமாகச் சிதறடிக்கும் ஆற்றல் மிக்க சடங்கு இது. பருவமடைதல், வயதுக்கு வருதல், பெரிசாதல், பக்குவப்படுதல், சாமத்தியப்படுதல் எனப் பேச்சு வழக்கிலும் பூப்புனித நீராட்டு விழா என எழுத்து வடிவிலும் அழைக்கப்படும் இச்சடங்கு, குழந்தைப் பருவத்திலிருந்து குமரிப் பருவத்திற்கு மாறும் ஒரு இடைக்கட்டத்தில் பெண் குழுந்தையின் உடற் தொழிற்பாட்டில் ஏற்படும் இயல்பான ஒரு மாற்றத்தை ஊரறியச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு சடங்காகும். "பெண் கரு உற்பத்திக்கு தயாராகிவிட்டாள்" என்பதை ஊரறிய தம்பட்டம் அடிப்பதே இச்சடங்கு கொண்டாடப்படுவதன் அடிப்படை நோக்கமாகும்.

**பழையன கழிதலும் புதியன புகுதலும்:**

துஷ்ட ஆவிகள் தீண்டாதிருக்கும் பொருட்டு குப்பை, விளக்குமாறு போன்றவற்றில் இருத்தி நீராட்டுதல், வேப்பிலை சுற்றுதல், கழிப்புக்கழித்தல் என்பனவும், இவள் என் மகனுக்குரியவள் என்ற உரிமையைத் தக்கவைக்கும் பொருட்டு தாய்மாமனுக்கு சடங்கில் முதல் முக்கியத்துவம் கொடுப்பதும், 'தீட்டு" சீலையை சலவைத் தொழிலாளியிடம் ஒப்படைப்பதன் மூலம் பெண் பருவமடைந்த செய்தியை ஊருக்கு உறுதிப்படுத்தும் பொருட்டு ஊர் முழுவதும் தொடர்பு பேணும் சலவைத் தொழிலாளிக்கு முக்கிய இடம் கொடுத்தல் என்பனவும் காலம் காலமாக இச்சடங்கின் முக்கிய அம்சங்களாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன.

பருவமடைந்த நாளிலிருந்து வீடு தவிர வேறு இடங்களுக்குப் போவதைத் தடுத்தல், பள்ளி வாழ்வைத் தடை செய்தல், கூடப்பிறந்த ஆண் சகோதரத்துடன் கூட நெருங்கி நின்று கதைப்பதைத் தடுத்தல் போன்று இருநூற்றாண்டுப் பழைமைகள் இன்றைய காலங்களில் அங்கொன்று இங்கொன்றும் என்று சுட்டிக்காட்டிப் பேசுமளவிற்கு அரிதான நிகழ்வுகளாகி விட்டன.

'அனைவரிற்கும் கல்வி" என்ற சுலோகம் அயலவரின், வகுப்புத் தோழரின், தொழில் செய்யும் இடங்களில் உள்ள சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களை அறிந்து கொள்ள உதவியது போல், பண்பாட்டுப் படையெடுப்புகளும், பத்திரிகை போன்ற பொதுசனத் தொடர்பு சாதனங்களும் உலக வாழ் நிலையை அறிந்து கொள்ளவும் அதைப் பின்பற்றவும் தூண்டியமையானது வேப்பிலை சுற்றுதல், பருவமடைந்த தினத்திலிருந்து ஒரு மாதமோ அதற்குக் கூடிய நாளோ வீட்டு மூலைக்குள் முடக்கிவைத்தல், இரும்புத் துண்டும் கையுமாய் திரிதல் போன்ற மூடப்பழக்கங்களை இல்லாமல் செய்விட்டது மட்டுமன்றி, பருவமடைதல் கடவுள் செயல் என்ற நம்பிக்கையையும் போக்கடித்து விட்டது.

ஒன்றரைத் தசாப்தங்களுக்கு முன்பு தமிழ் மண்ணில் நுழைந்த வீடியோ தொழில்நுட்பம் ஈழத்து அறிவுசார் வளர்ச்சிகளை உலகெங்கும் பரப்ப முயன்றதை விடவும் காரணகாரியத் தொடர்பற்ற, மனம் போன போக்கின்படி செய்யப்படுகின்ற, மூட நம்பிக்கைகளை விடவும் மோசமான புதிய புதிய சடங்குகள் புதிதாக மனித மூளையில் உதிக்கக் காரணமாக மாறியிருக்கிறது. சமூக விழிப்புணர்வு, அறிவூட்டல், பண்பாட்டுக்கலப்பு எது வந்தும் கூட மாற்றமடையாது பேய் பூதங்களில் நம்பிக்கை வைத்து உணர்வு பூர்வமாக மேற்கொள்ளப்படும் எத்தனையோ சடங்குகளை, ஆட்டங்காண வைத்து வெறும் சம்பிரதாயங்களாக மாற்றிய வல்லமை இந்த வீடியோ தொழில்நுட்பத்திற்கு உண்டு. இதன் வருகையுடன் சடங்குகளில் பழையன கழிதலும் புதியன புகுதலும் பரவலாக இடம் பெறத் தொடங்கியது.

**புதுப்புது நுட்பங்கள்:**

ஆளுயரத்திற்கும் அரையடி மேலாவது வேலியடைத்து, நெருங்கிய உறவுகளுடன் மட்டுமே பால் அறுகுவைத்து நீராட்டும் பண்பாடு ஊர் முழுவதையும் கூட்டி ஊர்ப் பொதுக்கிணற்றுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்று நீராட்டும் நிகழ்வாக மாறியிருக்கிறது.

தொட்டிக்குள் நீர் நிரப்பிப் பூக்கள் போட்டுப் பிள்ளை நீராடுவது போல் படம் பிடிக்கும் நிகழ்வு கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக பின்பற்றப்படும் புதிய தொழில்நுட்பம். தொட்டி வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த வன்னி மண்ணில் இடப் பெயர்வால் ஏற்பட்ட வாழ்நிலைச் சூழலுக்கு ஏற்ற புதியதை உருவாக்க வேண்டிய அவசியத்தை தோற்றுவிக்க, இப்போது நிலத்தில் கிடங்குவெட்டி மண் கரையாமல் அதன் மேல் தரப்பாள் (வுநவெ) போட்டு அதற்குள் நீர் நிறைத்துப் பூக்கள் நிரப்பி நீராட்டு விழா நடத்துவது புதியதோர் பாணியாக மாறியிருக்கிறது.

பிள்ளையை நன்கு அலங்கரித்து மணவறை கட்டி வீட்டுச் சடங்குகளை முடித்த பின்னர் கோயில் கும்பிடுவதற்கு பிரதான பாதையால் ஊர்வலமாக மேளதாளங்களுடன் அழைத்துச் செல்லுதல் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றத் தொடங்கியிருக்கின்றன.

**ஒன்றையொன்றும் வெல்லும் கேலித்தனங்கள்:**

* "உன்னை விரும்புகிறேன்" என்று கடிதம் போட்டாலோ, நேரில் கேட்டாலோ உள்ளத் தெளிவுடன் பதில் சொல்வதை விட்டுவிட்டு கத்திபொல்லுடன் கிளம்பி விடும் இரத்த உறவுகள், "என் பிள்ளை கருத்தரிக்கும் தகுதி பெற்றுவிட்டாள்" என்று மேளதாளங்களுடன் ஊர் கூட்டிப் பறை சாற்ற எப்படிச் சம்மதிக்கின்றனர்?

* வாகனங்களில் பயணிக்கும் போதோ, பொது இடங்களிலோ கை கால் பட்டு விட்டால், முறைத்துப் பார்த்துக் கோபப்படும் நாம் வெட்க உணர்வு எதுவுமின்றி பலர் முன்னிலையில் குளியல் காட்சிக்குத் தயாராக எப்படிச் சம்மதிக்கின்றோம்?

* மாதக்கணக்கில் வீட்டு மூலைக்குள் முடக்கி, காலை மாலை என்று முட்டை, நல்லெண்ணெய், உழுத்தங்களி, சரக்கரைப்பு என்ற ஊட்டமுள்ள உணவுகளின் அளவுக்கதிகமான திணிப்புக்கு எதிராக முரண்டு பிடித்து முற்றாக ஒழித்த எமக்கு, கழிப்புக் கழிக்கும் வரை இரும்புத் துண்டும், வேப்பிலையுமாய்த் திரிவதை இல்லா தொழித்து இரண்டு கிழமைக்கு முன்னதாகவே பாடசாலை, ரியூசன் என்று பறந்தோடும் வல்லமை பெற்ற எமக்கு "நான் கருத்தரிக்கத் தயார்" என ஊர்கூட்டிப் பறைசாறும் இந்த அசிங்க நிகழ்வை மட்டும் ஏன் இல்லாமல் செய்ய முடியவில்லை?

* வேப்பிலை சுற்றுவதையும் இரும்புத் துண்டும் கையுமாய் திரிவதையும் மூடத்தனம் என்று உணர்ந்து கைவிடும் அளவுக்குச் சமூகவிழிப்புணர்வு பெற்ற, படித்த பெற்றோர், அதை விடவும் மோசமாக "பருவமடைதல் என்பதும் ஒரு பெண்ணின் உடற்தொழிற் பாட்டில் ஏற்படும் இயல்பான மாற்றம்" என்பதைத் தெளிவாக விளங்கிக் கொண்ட பின்பும் கூட இத்தகைய காரியங்களில் கவனம் செலுத்துவது எப்படி?

> "உன்னை விரும்புகிறேன்" என்று கடிதம் போட்டாலோ, நேரில் கேட்டாலோ உள்ளத் தெளிவுடன் பதில் சொல்வதை விட்டுவிட்டு கத்திபொல்லுடன் கிளம்பி விடும் இரத்த உறவுகள், "என் பிள்ளை கருத்தரிக்கும் தகுதி பெற்றுவிட்டாள்" என்று மேளதாளங்களுடன் ஊர் கூட்டிப் பறை சாற்ற எப்படிச் சம்மதிக்கின்றனர்/ வாகனங்களில் பயணிக்கும் போதோ, பொது இடங்களிலோ கை கால் பட்டு விட்டால், முறைத்துப் பார்த்துக் கோபப்படும் நாம் வெட்க உணர்வு எதுவுமின்றி பலர் முன்னிலையில் குளியல் காட்சிக்குத் தயாராக எப்படிச் சம்மதிக்கின்றோம்/



**தலைமுறை இடைவெளி :**

மனித வாழ்க்கைக் காலத்தில் அன்றிலிருந்து இன்று வரை தலைமுறைகளுக்கிடையிலான இடைவெளி நீண்டதாகவும் சிக்கல் வாய்ந்ததாகவுமே இருந்திருக்கின்றது. எனினும் அறிவியல் தொழில்நுட்ப வழி உருவான தொடர்பு சாதனப் பயன்பாடும், பண்பாட்டுக் கலப்புகளும் இந்த முரண்பாட்டை ஒரு சில தசாப்தங்களாக மிகவும் சிக்கலாக்கியிருக்கிறது. மனித நடத்தைக் கோலங்களோ, வாழ்க்கைப் பாணியோ, சமூகப் பழக்க வழக்கங்களோ துரித மாற்றத்திற்கு உட்படும் அளவுக்கு தனிநபர் அனுபவங்களை - குறிப்பாகப் பெற்றோரின் வாழ்வியல் அனுபவங்களை- நடைமுறை வாழ்வுக்கான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு உலகளாவிய ரீதியில் மிகவும் குறைவாகவே உள்ளது. நம்மைப் போன்ற கீழைத்தேய சமூகங்களில் தனிநபர் ஒருவரின் சமூகப்பங்களிப்பு தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பதனால் வாழ்க்கைமுறை எவ்வித சிக்கலுமின்றி கடத்தப்படுவதால் தலைமுறை இடைவெளி குறைவு என்றும், நவீன சமூகங்களில் தனிநபர் ஒருவருக்குப் பல தெரிவுகள் இருப்பதால் தலைமுறை இடைவெளி அதிகம் என்றும் மானுடவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**இரண்டு கெட்டான் பருவம்**

நவீன கைத்தொழில் சமூகம் ஒன்றின் உருவாக்கத்துடன் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் இவர்களின் பொறுப்புக்களைச் சற்று பின்தள்ளிப்போட, சிறியவராகவும் இல்லாமல் பெரியவராகவும் மாறாமல் இருக்கும் 12-18க்கு இடைப்பட்ட இரண்டும் கெட்டான் பருவமானது வளரிளம்பருவம் (ADOLESENCE) என 1904இல் G.STANLEY HALL என்பவரால் அடையாளப்படுத்தப்பட்டு இன்று தனிக்கவனம் எடுக்கப்பட வேண்டிய ஒரு பிள்ளைப் பராயமாகக் கருதப்படுகிறது.

மனித வாழ்வின் ஏனைய பருவங்களை விடவும் அதிக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு பருவமாக, வாழ்க்கைப் போக்கையோ திசைதிருப்பக்கூடிய அபாயங்கள் நிறைந்த ஒரு பருவமாக வளரிளம்பருவம் கருதப்படுகிறது. தான் யார் என்ற குழந்தையின் சிந்தனையும், குழந்தை யார் என்ற பெற்றோரின் சிந்தனையும், தன்னை அளப்பதற்கு குழந்தை தெரிவு செய்யும் இலட்சிய நபரும் இணைந்த ஒரு கலவையே வளரிளம்பருவ சிறுவனோ, சிறுமியோ ஆகும். மிகவும் குறுகிய ஒரு காலப் பகுதிக்குள் தன் உடலமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் (மார்பக வளர்ச்சி, ஆண்களின் உயர அளவின் வேகம், முடி வளர்தல்) தன் உடல் தொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றம் (மாதவிடாய் வட்டம் தொடங்குதலும், ஆணுக்கு விந்து வெளியேறுதலும்) தன் உளப்போக்கில் ஏற்படும் மாற்றம் என்பவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டி தேவை இப்பருவத்திற்கு உண்டு.

இப்பருவத்தில் பெண்ணின் ஆளுமையையே சிதறடிக்கும் இந்தச் சாமத்தியச் சடங்கு ஆக்கபூர்வமான சமூகப் பிரசைகளை உருவாக்கிக் கொடுப்பதற்கு பதில் ஆளுமை சிதைந்த, அடிமைத்தன வாழ்வுக்கே பெண்ணினத்தை மீண்டும் வழிநடத்திச் செல்லும்.

**எங்கே நிற்கின்றோம்...?**

பிள்ளை பெறும் பிரதான கருவியான இப்பொருள் கருவளம் அடைந்து விட்டது என்பதை ஊரறியச் செய்ய வேண்டிய தேவையும், இப்பொருளை எவ்வித தீங்கும் வராமல் பாதுகாக்கும் வகையில் சடங்குகள் செய்வதும் அறியாமை மிகுந்த எமது மூத்த தலைமுறைக்கு அவசியமானதாக இருந்திருக்கக்கூடும். அதேபோன்று வெளியுலகம் தெரியாது, அறிவூட்டல் வாய்ப்புக்கள் அற்று சமையலறைக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணுக்கு பருவமடைதலும் அதன் வழி திருமணத்திற்குத் தயாராதலும் மகிழ்வூட்டக் கூடியதொன்றாகவும் இருந்திருக்கக்கூடும்.

ஆனால் இன்று அப்படியல்ல. அறியாமை இருளில் மூழ்கிக்கொண்டே எம்மை வழி நடத்திச் சென்ற எம் முன்னோரின் தடங்களைப் பின்பற்றிச் சென்ற கால கட்டத்திலிருந்து மெல்ல மெல்ல மாறி அறிவின் வாசல் அனைவரிற்கும் திறந்து விடப்பட்டிருக்கும் காலத்தில் நாம் நுழைந்து நீண்ட காலமாகி விட்டது. தாம் நேரே பார்த்து அறியாத பொருட்களில் அதீத நம்பிக்கை வைத்து அதையே கண்மூடித்தனமாகப் பின்பற்றும் மூடத்தன வாழ்க்கையில் இருந்து தர்க்கரீதியாக காரண காரியத் தொடர்பை கண்டறிந்து அதன் வழி நடக்கத் தொடங்கிய வாழ்நிலைக்கு நாம் நுழைந்து நூற்றாண்டுகள் இரண்டைக் கடந்த பின்பும் புதுப்புது மூடத்தனத்துக்கு ஆளாவதை பார்க்கும் போது இன்று வளர்ந்து விட்ட அறிவியல், மூடப் பழக்கவழங்கங்களை களைவதற்குப் பதிலாக மூடப் பழக்கத்தை மேலும் நவீன வடிவில் வெளிக்கொணர்வதற்கு உதவியிருக்கிறதல்லவா? அல்லது பயன்படுத்தப்பட்டிருக்கிறதல்லவா?

புதுப்புது மூடத்தனங்களை உருவரக்கும் இத்தகைய ஆபத்தான நிலை முன்னோக்கிய பாதையில் ஏற்கனவே நுழைந்து விட்ட, நுழைந்து கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்தை மீண்டும் அடிமைத்தன சமூக அமைப்புக்குள் குப்புறத்தள்ளி விழுத்தும் இத்தகைய ஆபத்திலிருந்து சமூகத்தைக் காப்பாற்றும் ஒரு சமூகப் பொறுப்புணர்வை அறிவூட்டல் வாய்ப்பும், பொருளாதார வாய்ப்பும் ஒருங்கிணைந்த பெண்கள் சமூகமாவது சுமக்க இனியாவது முன் வருமா?

நன்றி : சுதந்திர பறவைகள்

# அப்பேரட்ட

மிகச்சுலபமாக வெற்றுக் கண்களால் காண முடியாத மாயப் பிறவியாக அவன் இருக்கவில்லை. உங்கள் இயந்திரத்தனமான அவசர வேலை ஆர்பாட்டங்களுக்கு குறுக்காக வராது தன் வயிற்றுப் பாட்டுக்கான இரும்பு வியாபாரம் தவிர்ந்த நேரங்களில் மரத்தடிச் சந்தியில் இருக்கும், கிருஷ்ணன் கோவில் சிவப்பு, வெள்ளை நிறத்திலான நீட்டு நீட்டு கீலம் கீலமான காவி அடித்த மதில் சுவரில் தன் வயிற்றை வைத்து அண்ணாந்து வானம் பார்த்து நிற்பான்.

ஆகவே அவனை பார்ப்பதற்கு நீங்கள் எதையும் கூர்ந்து அவதானித்து காலத்தால் பதிவு செய்து வைக்க வேண்டும் என எண்ணும் படைப்பாளியாகவோ அல்லது தம் காலத்தில் தம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் பற்றி சிந்திக்கின்ற மனித நேயம் உள்ளவராகவோ இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனெனில் அவன் பொறுக்கி வரும் இரும்புகளின் எடையில் அவனை ஏமாற்றி அதே நேரம் அன்றையப்பாட்டிற்கு அவனுக்கு வழி வகுக்கின்ற நாடார் கடை முதலாளிக்கும் கோயில் மதில் சுவரில் வயிற்றை வைத்து அண்ணாந்து வானம் பார்த்து நிற்கின்ற சந்தர்ப்பம் ஒன்றில் அவன் அறியாது பின்னால் பதுங்கி வந்து மெல்லிய தடி ஒன்றினால் குண்டியில் ஓங்கி அடித்து அவன் அடியின் வலி பொறுக்க முடியாது துடித்து பதைத்து ஓடுவதை குரூரமான நமட்டுச் சிரிப்புடன் ரசிக்கும் தாடி வளர்த்து, கிழடு தட்டிப் போன கிருஷ்ணன் கோவில் பரிபாலன சபைத் தலைவருக்கும் அவன் இரவுத் தூக்கத்தை அந்த 'டூ கோட்' பஸ்கோட்டில் பகிர்ந்து கொண்டு அதற்காக அவன் சம்பாத்தியத்தில் இருந்து, பீடிக்கோ அல்லது கஞ்சாவுக்கோ காசு பிடுங்கிக் கொள்ளும் காலைச் சுற்றி அழுக்குத் துணியை போர்த்தி பிச்சை எடுக்கும் கிழவனுக்கும் அவனைத் தெரிந்திருந்தது.

நீங்கள் உங்களை ஒரு நாகரீகமான பிறவியாக கருதி நேரடியாக சந்திப்பதையோ அல்லது பார்ப்பதையோ விரும்பாவிடில் மரத்தடிச் சந்தியில் இருந்து ரயில்வே ஸ்டேசனை நோக்கிப் போகும் வீதியில் இருக்கும் பிரமாண்டமான நிழல் வாகை மரமொன்றிற்குக் கீழ் நின்று அவனைக் காணலாம்.

இப்போது மஞ்சள் நிற 'நியூ ஈஸ்டன்' பஸ் கொம்பனிக்குச் சொந்தமான இறக்கக்கண்டி போட்டுடன் புகையும் புழுதியும் கிளப்பிப் போகும் பஸ்சையும் ஒரு குழந்தை அழுவது போல் கோர்ன் அடித்துப் போகும் ஹயஸ் வேனையும் போக விட்டு (நீங்கள் ஆணாக இருக்கும் பட்சத்தில்) பின்னால் 'லேடீஸ்' சைக்கிளில் வரும் மென் நிற சுடிதார் அணிந்த பெண் மீதான காதல் அல்லது புணர்தல் கற்பனையையும் கலைத்து அவள் உங்களை தாண்டிச் சென்ற பின் (நீங்கள் ஒரு பெண்ணாக இருக்கும் பட்சத்தில்) தோளில் சுமந்து கூவி விற்றுப் போகும் குசினி 'றாக்கை' வாங்குவது பற்றி அல்லது அடுத்த பெண்களின் நடத்தையில் குற்றம் கண்டு பிடிக்கின்ற தீவிர அக்கறை என்பவற்றை கலைத்து விட்டு பின் கிருஷ்ணன் கோவில் முகப்பை நோக்கினால், முகப்பில் கடலை விற்கும் முக்காடு போட்ட பெண்ணிற்கு பின்னே மதிலில் தன் வயிற்றை வைத்து அண்ணாந்து வான் பார்த்து நிற்கும் அவனை உங்களால் காண முடியும். ஊத்தை நிறத்தில் கால் சட்டை போட்டு வெற்றுடம்புடன் தன் கரிய நிற வயிற்றில் வெளித்தள்ளி இருக்கும் பொக்கிள் மதில் சுவருடன் நசிய அண்ணாந்து வான் பார்த்து நிற்பான்.

கடைக்காரன் ஏமாற்றிக் கொடுத்த பழைய உணவொன்றின் செமிபாட்டுக்காகவோ அல்லது சுய இன்பத்துக்காகவோ அவன் அவ்வாறு கோவில் மதில் சுவரில் தன் வயிற்றை வைத்து நசித்தபடி கோரமான முகத்தில் கண்கள் இரத்தச் சிவப்பாய் ஒளிர நின்றிருந்தான். மற்றவர் முகங்களைப் பார்த்து தான் பீதி அடையக் கூடாது என்னும் நோக்கிலோ அல்லது மற்றவர்கள் தன் முகத்தைப் பார்த்து அலறி அடித்து ஓடக் கூடாது என்னும் நோக்கிலோ அவன் வான் பார்த்து நிற்கவும் கூடும். இந்தத் தவ நிலை கிருஷ்ணன் கோவில் பரிபாலனசபை தலைவர் வந்து குலைக்கும் வரை நீடிக்கும். நீங்கள் அவன் முகத்தைப் பார்ப்பதை தவிர்ப்பது நல்லது என்றே படுகிறது. முகம் கறுத்து சிவப்பு நிற கண்கள் அச்சுறுத்தும் என்பதை விட அவன் முகத்தின் ஒரு பக்க பாதி கன்னம் முழுவதும்

**வி.கௌரிபாலன்**

அரை வட்டம் அடித்தது போல் இரண்டு அருகருகான சீரான இடைவெளி விட்டு சிறிய பதினொரு இரட்டைத் துளைகள் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக தசைகளை கவ்விப் பிடித்திருப்பது கோரமாகத் தெரியும்.

அவ்வாறு கவ்விப்பிடித்திருக்கும் சதைகள் சிவப்பும், பழுப்பு நிறமுமாய் எப்போதும் குருதியும் சிதலும் வடிந்த வண்ணமும், அதில் இலையானோ அல்லது கொசுக்களோ இரைச்சலுடன் மொய்த்தபடி இருக்கும். பகல் வானில் நட்சத்திரங்கள் ஏதும் இல்லாததாலும் அவன் கண்கள் வானத்தில் அழகியல் எதையும் தேடி இன்புறுபவனாகவும் தெரியவில்லை. சிவந்து ஒளிரும் கண்களைப் போலவே வானிலும் வளைந்து நெளிந்து ஓடும் சிவப்பு நிற சாயம் கலந்த பிசு பிசுப்பற்ற சிறு ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.



கட்டியாகவே அல்லது இறுக்கமான பிசு பிசுப்புடனோ இல்லாது வெற்று ஆறு ஒன்றில் கலந்த சிவப்புச் சாயம் ஊறியது போல அந்த ஆறு ஓடிய போதும் அதில் இரத்த வெடில் அடிப்பதை உணர்ந்தான்.

அந்த ஆற்றின் சிவப்பு நிறத்தையும் விட கடுமையான சிவப்பு நிறமும், வெறுப்பு நிறமும் கலந்த சிதைந்த தசைத் துண்டுகளும் இடைக்கிடை இந்தச் சிவப்பு ஆற்றில் மஞ்சள் கூழ்களாக மூளைத் திசுக்களும் அமிழ்ந்தும் மிதந்தும் வந்தன. வெறிபிடித்து கரிய நிற நாய்கள் மின்னும் சிவப்பு நிற கண்களால் ஆற்றை கூர்ந்து வெறித்தபடி வாய்களை அகல திறந்து வைத்துக் கொண்டிருந்தன. சில வேளைகளில் ஆற்றில் குதித்து மூழ்கி தசைத் துண்டையோ அல்லது மூளைத்திசுக்களையோ கவ்வி எடுத்துச் சப்பின, நாய்களின் கடை வாய்களில் சதைத் துகள்களோ அல்லது மூளைத்திசுக்களோ ஒட்டிக் கிடந்தன. இவ்வாறு தான் அவன் வானில் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றைப் பார்க்கிறான்.

அடிவானம் சிவந்து தென்னை வட்டும் ஓலைகளும், வெம்பின் உச்சிப் பகுதியும் சிவந்து கிடந்த அந்திக் கருக்கலில் தான் "வெல்கம் விகாரை" கேம்பில் இருந்து வீசப்பட்ட எறிகணை அவர்கள் தங்கி இருந்த 'மில்' அகதி முகாமில் வீழ்ந்து வெடித்துச் சிதறியது. அதன் பின் அவன் இருபது நாட்களுக்கு மேல் மருத்துவமனையில் இருந்து வெளியேறிய போது முகத்தில் பாதிக் கன்னம் முழுவதுமாக அரை வட்ட வடிவில் பதினொரு தையல் போட்டு அனுப்பி வைத்தார்கள்.

பின் அவன் 'மில்' முகாமுக்குத் திரும்பிய போது சுவரிலும், சீமென்ட் தரையிலும் சிவப்பு நிற இரத்தம் காய்ந்து கறுத்து விட்டிருந்தது. பல இடங்களில் சதைத் துகள்கள் ஒட்டி அழுகி சாறு வடிந்து துர் நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. உடைந்த ஓட்டுத் துண்டுகளுக்கு கீழ் புழுக்கள் ஊர்ந்தன. அதன் பின் அவன் தன் தாய் தந்தையையும் உறவுகளையும் தேடுவதை நிறுத்தி விட்டிருந்தான். பின் வந்த இரவுகளில் தூக்கத்துக்காக அந்த 'டூகுட்' பஸ்கோல்டை நாடினான்.

ஆனால் ஏற்கனவே அந்த 'டூகுட்' பஸ்கோல்டை கால்களை ஊத்தை துணியால் மூடி பிச்சை எடுக்கும் கிழவன் தன் தொழிலுக்கும் உறக்கத்துக்கும் பயன்படுத்துவதை கண்டான். பீடியோ, கஞ்சாவோ கிழவனுக்கு கிடைக்காத இரவுகளில் அவனை அந்த பஸ்கோல்ட்டுக்குள் உறங்க கிழவன் அனுமதிப்பதில்லை. கிழவன் ஆழ்ந்த போதையில் மட்டுமே தன்னுடன் தங்க அவனுக்கு அனுமதி அளித்த போதும், போதை தெளிந்த விடியல்களில் தன் காலால் உதைத்து அவனை வெளியேற்றி விடுவான்.

எனவே பெரும்பாலான இரவுகளில் அவன் அந்த பஸ்கோல்ட்டுக்கும் ரயில்வே ஸ்டேசன் பொறியியலாளர் பங்களா சுற்று மதிலுக்கும் இடையிலான சந்திலேயே தூங்கினான். பகலில் பஸ்கோல்டில் நிற்பவர்கள் பெய்த மூத்திர வெடுக்கு வெக்கையையும், பொலித்தீன் பைகளின் சரசரப்பையும், வீதுருத் துண்டுகளின் உறுத்தலையும், விடியல்களில் வீசும் அதீதமான குளிரையும் பொருட்படுத்தாது உறங்கப் பழகி இருந்தான்.

ஆனால் இப்போது சில தினங்களாக அந்த 'டூகுட்' பஸ் கோல்டுக்குள் கிழவன் இல்லாதிருந்த போதும் அவன் அந்த பஸ்கோல்டுக்குள் மட்டுமில்லாது அதன் பின்புறத்திலும் கூட உறங்குவதை தவிர்த்து நிழல் வாகை மரங்களுக்குக் கீழ் பயன்படுத்தாமல் கிடக்கும் ஒடுக்கமான கொங்கிறீட் 'மெயின் கோலை' தனது இரவுத் தூக்கத்துக்காகப் பயன்படுத்தி வருகிறான். சில தினங்களுக்கு முன் கிருஷ்ணன் கோவில் பரிபாலன சபைத் தலைவர் விட்டெறிந்த செங்கல் முழங்கையில் பட்டு உராய்ந்து இரத்தம் துளிர்க்க மற்றைய செங்கல்களின் குறியில் இருந்து தப்பி ஓடிவந்து கொண்டிருந்த போது ஒரே நிறத்தில் புதிய தொப்பிகளும், அதே நிறத்தில் டீ-சேட்டும் போட்ட சில அண்ணன்மார்கள் கிழவனுடன் கடுமையாக வாதாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அவர்கள் போட்டிருந்த டீ-சேட்டினதும், தொப்பியினதும் நிறத்தைக் கொண்ட பேப்பர்களில் பெரியவர் ஒருவரின் படம் போட்டிருப்பதையும் அதை அவர்கள் பஸ்கோல்டில் ஒட்ட முனைவதையும், கிழவன் தடுத்து கூச்சல் போடுவதையும் கைகளையும், கால்களையும் உதறி கூப்பாடு போடுவதும் குறுக்கும் நெடுக்குமாக நடப்பதுமாக இருப்பதையும் கண்டான். அப்போது தான் பஸ் கோல்ட் முழுவதும் அங்கு நின்றவர்கள் போட்டிருந்த நிறத்தைக் கொண்ட பேப்பர்களில் வேறு ஒரு பெரியவர் வேட்டி சட்டை போட்டு கும்பிடுவது போலும், கோட் சூட் போட்டு கை அசைப்பது போலும் ஒட்டப் பட்டிருப்பதைக் கண்டான்.

"சொன்னாக் கேள் எங்களுக்கும் அவங்களுக்கும் பகை ஒண்டும் இல்ல, அதில ஒட்டி இருக்கிறவருக்கும் எங்களுக்கும் ஒரே நிறந்தான், ஒரே சின்னந்தான், இலக்கம் மட்டுந்தான் வேற நாங்க அவற்ற படத்துக்கு மேல ஒட்ட இல்ல கீழ ஒட்டிட்டுப் போறம், விலத்தி நில்லு.."

"நாணயம் எண்டா நாணயந்தான். அந்த ஐயாமாரிட்ட இதில வேற ஆரும் ஒட்ட விட மாட்டன் எண்டு சொல்லிட்டன். இதில ஒட்ட ஏலாது எண்டா ஒட்ட ஏலாது தான், நடையைக் கட்டலாம்"

"பிச்ச எடுக்கிற கிழட்டு நாயே! உனக்கு"

பின் ஒருவன் கிழவனின் கழுத்தைப் பிடித்து தள்ளினான். தள்ளியவனை கூட வந்த சிலர் தாங்கிச் சமாதானப்படுத்தினர். பஸ்கோல்டுக்கு முன்பான தரையில் பலவித கால் தடங்களையும் சப்பாத்துத் தடங்களையும் புழுதி கிளப்பி காய்ந்த மண் ஒதுங்கி ஈரமண் கிளறுப்படுவதையும் பார்த்து நின்றான். பின் அவர்கள் நகர்ந்து தெருவில் நின்ற வேனை நோக்கி நகர்ந்தார்கள்.

அப்பொழுது தான் அந்த வேனைக் கண்டான். அதுவும்

அவர்கள் போட்டிருந்த நிறத்திலேயே இருந்தது. வேனைச் சூழவும் அவர்கள் கையில் வைத்திருந்த பேப்பரில் இருந்த பெரியவர் சிரித்த முகத்துடன் கைகளை தலைக்கு மேல் உயர்த்தி கும்பிடு போட்டபடி இருந்தார். கறுத்த கண்ணாடிக்குப் பின் கோரமான முகங்கள் வேனுக்குள் ஏறி அமர்வதையும் வேன் அசைவுடன் ஸ்டாட் ஆவதையும் கண்டான். நின்ற இடத்திலேயே பின் சக்கரங்கள் வேகமாக புழுதி கிளப்பி தரையுடன் உரசி சு... வேன் முன்னே எகிறிக் குதித்து வேகமெடுத்து மாதாகோவில் முடக்கில் கவிழ்ந்து விடுவது போல் திரும்பி பின் மறைந்து போனது. பஸ் கோல்டில் ஒட்டப்பட்டிருந்த பெரியவரின் முகமும், நிறமும் மங்கி இருளில் மறைந்து கொண்டு போவதை, அவன் பார்த்துக் கொண்டிருந்தான். இரவு கஞ்சாப் புகையும், பீடி நாத்தமும் வழமைக்கு மீறி அதிகமாக இருப்பதை உணர்ந்தான்.

சில புதிய வடிவிலானதும் நிறத்திலுமான நோட்டுகள் கிழவனிடம் இருப்பதையும் அவன் கண்டான். பஸ் கோல்ட் முழுவதும் இருந்த பெரியவரும், அவரின் நிறமும் இருளில் முற்றாக மறைந்து போயிருந்தது.

கிழவனின் புதிய வியாபாரம் அவனுக்கு புரிய முடியாது போனாலும் வழமையை விட இன்று அதிகமாக உழைத்து விட்டதை அவன் உணர்ந்து கொண்டான். கிழவன் விபரமான ஆள் தான்.

"அட பரதேசி....! சும்மா கிடக்குது எண்டதுக்காக..... கிடக்கிறதெல்லாம் இரும்பில்லடா, அதிலயும் தெரியோணும் உருக்கும் இருக்கும். உருக்கெண்டா அதுக்கு தனி விலைடா, தரம் பிரிச்சுக் குடுக்கத் தெரியோனுண்டா பரதேசி!"

அன்று பின் இரவின் உறக்கத்தில் நாய்கள் நிறம் மங்கிப் போன சிகப்பு ஆற்றில் மிதந்து வந்து, ஆற்று நீரின் சிவப்பு நிறம் ஒட்டாது வெண்மையாக கிடந்த எலும்புத்துண்டைக் கவ்வி சப்புவதையும், எலும்புத் துண்டு சப்பச் சப்ப நழுவி..., நழுவி .., ரப்பர்த் தன்மையுடன் திரும்ப பழைய உருக்கொள்வதையும் கனவில் கண்டான். அத்தகைய ஒரு கணத்தில் தான் வாகனம் ஒன்று அடங்கிய இரைச்சலுடன் பஸ் கோல்ட்டுக்கு முன்னே வந்து நிற்பதை உணர்ந்தான். பஸ் கோல்ட்டின் முன்புறம் காலடி ஓசைகளையும் அடங்கிய குரலிலான இரைச்சலையும் செவியுற்றான்.

உடலின் மீதான அசதியும் மூத்திர வெக்கையும், எலும்பைச் சப்பும் நாயின் கவனமும் அவன் தூங்கிய இடத்தில் இருந்து எழும்புவதை அனுமதிக்காததால் கிடந்த இடத்திலேயே கிடந்தான். சற்று நேரத்தில் இரைச்சல் அதிகமானது. பஸ்கோல்ட்டின்



பஸ்கோல்ட்டுக்கு வெளியே இரத்தம் படிந்த மெல்லிய நீண்ட தட்டையான இரும்புக் கேடர் கிடப்பதைக் கண்டான். இரும்புக் கேடர் மீது படிந்து கிடந்த இரத்தக் கயரை மண்ணுக்குள் தேய்த்துப் போக்கினான். பின் பொறுமையாக கிழவன் சொன்னது போல் சோடா போத்தல் மூடியால் அந்த இரும்பை தேய்த்து கறளைப் போக்கினான். அது உருக்காக இருப்பது கண்டு மகிழ்ந்து தன்னுடைய அன்றைய விடியலில் கிடைத்த பிரமிப்பான உழைப்பை தோளில் சுமந்து இரும்புக் கடையை நோக்கிப் போனான்.

சீமெண்ட் படிகளிலும் கட்டிடத்திலும் மோதும் இரும்புக் கேடர்களின் 'நங்' எனும் ஒலி துல்லிமாக அவன் மண்டைக்குள் கேட்டது. கிழவனின் கஞ்சா அடித்த அலட்டல் உறுமலாக மாறி, உச்சம் பெற்று அதட்டி, பின் அலறலாக மாறி, ஊளையிட்டு பின் கெஞ்சலும் கேவலுமாக மாறி அணுங்கி ஓய்ந்து போனது.

பின் வாகனத்தின் இரைச்சல் கூடி ஓய்ந்து போனது. நாய்கள் மீண்டும் ரப்பர் எலும்புகளை சப்ப முனைய அவன் தூங்கிப் போனான்.

விடிகாலையின் பனிக்குளிர் உடம்பில் சாம்பல் படிவாய் அசதியை உண்டு பண்ணிக் கிடக்க, நாய்களையும் எலும்புத் துண்டுகளையும் உதறி அவன் விழித்தான்.

வழமையான கஞ்சா, பீடிப்புகை நாத்தத்தையும் மீறி புதுவித நெடி வீசுவதையும் அது 'மில்' முகாமில் 'செல்' விழுந்த போது ஏற்பட்ட அதே நெடி என்பதையும் உணர்ந்தான். இரத்த ஆறும், இரத்த வெடில் அடிக்கும் நாய்களும் அச்சுறுத்த பஸ் கோல்டை எட்டிப் பார்த்தான். உள்ளே கிழிந்த துணிக் குவியலாய்க் கிடந்தான் கிழவன். கிழவனின் இடுப்பில் இருந்து விலத்திக் கிடந்தது சாரம். இடுப்பில் இருந்த கயிற்றுக்கு மேல் தோல் கிழிந்து இரத்தம் சிவப்பாய்க் கிடந்தது. கிழவன் கால் மடித்து தலை சுவரில் முட்டி மடிந்து கிடக்க குப்புறக் கிடந்தான்.

பஸ்கோல்ட்டுக்கு வெளியே இரத்தம் படிந்த மெல்லிய நீண்ட தட்டையான இரும்புக் கேடர் கிடப்பதைக் கண்டான். இரும்புக் கேடர் மீது படிந்து கிடந்த இரத்தக் கயரை மண்ணுக்குள் தேய்த்துப் போக்கினான். பின் பொறுமையாக கிழவன் சொன்னது போல் சோடா போத்தல் மூடியால் அந்த இரும்பை தேய்த்து கறளைப் போக்கினான். அது உருக்காக இருப்பது கண்டு மகிழ்ந்து தன்னுடைய அன்றைய விடியலில் கிடைத்த பிரமிப்பான உழைப்பை தோளில் சுமந்து இரும்புக் கடையை நோக்கிப் போனான்.

பஸ் கோல்ட் இரத்த நெடி வீசுவதுடன் வெறுமையாகவும் கிடந்ததாலுமே சில தினங்களாக அந்த ஒடுக்கமான "மெயின் கோலை" தன் உறக்கத்துக்கு தெரிவு செய்தான். இன்னும் சில மணிநேரத்துக்குப் பின் கிருஷ்ணன் கோவில் பரிபாலன சபைத் தலைவர் வந்து துரத்தும் வரை அவன் அந்த வெள்ளை சிவப்பு நிற கீலம் ... கீலமான காவி அடித்த கிருஷ்ணன் கோவில் மதில் சுவரில் வயித்தை வைத்து பழைய உணவின் செமி பாட்டுக்காகவோ அல்லது சுய இன்பத்துக்காகவோ வானில் ஓடும் இரத்த ஆற்றை வெறித்தபடி நின்றிருப்பான்.

## நீண்ட பொழுதில்

காத்திருக்கிறோம்
முட்கம்பிகள் அகற்றும்
நாட்களுக்காய்

கொதிநெருப்புக்குள்
குடும்பம் நடத்தும்
எங்கள் இனத்தின்
ஈரவிடியலுக்காய்
ஒரு! நீண்டபொழுதில்...
வறண்டு போன
கனவுகளோடும்,
சாயம்போன
ஆடைகளோடும்
காத்திருக்கிறோம்.

முரண்களையே உரசிஉரசி
சீர்செய்யப்படாத
எங்கள் சமன்பாடுகளை
திருத்தப் போவது யார்?

கோம்பை காற்றும்
எங்கள்
ஏழைச்சிறார்கள் மீது
இன்னும் ஏன்
வெளிச்சம் பாய்ச்சவில்லை

வண்டூர வாய்நெகிழும்
வாசமலரரும்புகள்
சலங்கை கட்டிச்
சரசமிடும் சங்கீதம்
இனி, கேட்குமா?

நீண்டவரிசையில்
கலப்பட நிவாரணங் களுக்காய்
இனியும்
காத்திருப்போமா!


பட்டைகோலும் நீரில்
பவித்திரம் இருப்பது போல்
நாம்!
சிறகுவிரிக்கும்
இளவேனில் எப்போது!


விழித்திருக்கிறோம்
நீண்டவரிசையில்...
மனிதம்! மலர்வதற்காய்
நிச்சயம்
இன்றோ, நாளையோ
தேதி குறிக்கப்படும்
என்ற நம்பிக்கையில்
நீண்ட பொழுதில்...

கு. றஜீபன்
யாழ்ப்பாணம்

## ஊர்முகத்தேடல்

உலர்ந்த உப்பட்டி தாங்கி
பெரு வழி நடக்க
இளைத்ததல்ல
சொல்லிக்கொள் இன்னொரு தடவையாக
உறை ஊற்றிக் காத்திருக்க
உதிர்ந்து விழும் வார்த்தைகள் பழுத்து
எதிரில்
இதமானகுளிரும் வெய்யிலும்போல
உண்மையிருக்கின்றது
சித்திரமாய்த் தொங்கும்
நிர்ச்சலனம்
செக்கு இழுக்கும் மாடு
வண்டி இழுக்காது.





சாலையில் இறங்கி வேகமாக ஓடியது
குதிரையைப்போல
ஏறத்துணிந்தவர்களை
ஆவேசமாகத் தள்ளியது
ஒரு பொழுது இதமானகுளிரில்
வயலுக்குள் விழுந்து கிடந்தது
நெரிசலில் மரங்களுக்குள் முறிந்து
காணாமலே இருந்தது
இன்று காலை முற்றத்தில்
பதுங்கி நிற்கின்றது வெய்யில்
என்னுடைய ஒரு
நண்பனைப் போலவே

- செழியன் கவிதைகள் -

## உன்னில் உறைந்து போனேன்...

ஊசிக்குளிர்
வந்தென்னை
உரசித் தாக்க
உறை நிலைப் படலமாய்
நீ எந்தன்
நெஞ்சில்..

வாழ்வு
வறுமையின்
கரு முகிலாய்
உன் திருவுருவம்
மனத்திரையில்
தோன்றும் வேளை
வெண்ணிலவாய் மாறும்

இடுப்புடைய
இடர்வந்து
நொகுமெந்தன்
மெய்யில்
என் நிழல் பார்க்க
எனக்கேது நேரம்

இன்னும்
இறவாத
உன் வாசனை
எனக்குள்.......

நீயும் நானும்
வெயில் சாய
வீதியில் நடந்தோம்.

கவிதையில்
பகிடி பண்ண
காற்றோடு உன் சிரிப்புதிர
எச்சி முறிகள்
என் முகத்திற்கு
சொந்தமாகும்..

இன்புற இடம் தேடி
பண்ணைப் பக்கம்
போகாமலே
பக்கத்து வீடே
நமக்கு பாலூட்டும்
நிலவாகும்

குளிர் காற்றும்
கொழுத்தும் வெயிலும்
கவி சொல்லும்
கனத்த மழையும்
நம் மகிழ்விற்காய்
வசப்படுத்தினோம்



வெள்ளம்
வர முன்
வள்ளம்
கரை சேரும்
வீடு வந்ததும்
உன் தெருவுக்கு
ஓடி வருவேன்

காற்றில்
கழிப்புதற
சாதாளையோடு
சுங்கான் மீன் கிடந்து
சுள் என்றுகுத்த
உன் புன்னகையை
ஒரு கணம் கண்டால்
விண்ணென்ற நோவெல்லாம்
விரல்களிருந்து
விடுதலையாகும்

அன்றும்
பின்னிரவும்
பேசாமல்
புலர்ந்துபோனது
உன் வரவிற்காக....
என் உயிர்த்தீ
உருக்குலைந்து
காத்துக்கிடந்தது

தொடும் தூரம்
நின்ற நீ
இன்று
நெடும் தூரம்
சென்று விட்டாய்

நீ நினைத்தாலே
உன் வேலிச்சிறகு
விரிந்து கொடுக்க
காதல் உட்புகுந்து
உள் சதைவரை பாயும்

நானோ
ஒரு மழையின்
வருகைக்காக
வெண் பனித் தூறலில்
காத்துக்கிடக்கிறேன்

ஆயினும்
உன் உதடு தந்த
ஈரத்தை
எப்படி உலர வைக்கமுடியும்.

- நாவாந்துறை டானியல் ஜீவா -

மறுபக்கம்

- ஆழ்வார்க்குட்டி

## கன்னத்தில் முத்தமிட்டால் - புரஹந்த களுவர - மே மகே சந்த

# தமிழர் பிரச்சினையும் திரைப்படங்களும்

இலங்கை இனப்பிரச்சினை, இலங்கை தமிழர் பிரச்சினை, ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம், வடக்கு கிழக்கு யுத்தம் எனப் பலதரப்பட்ட சொற்றொடர்கள் இலங்கையின் இன்றைய அரசியல் படுமுடிச்சுகளை விபரிக்கப் பயன்படுகின்றன.

இவை யாவும் ஒரே விடயத்தைக் குறிப்பனவாயினும், ஒரே அர்த்தத்தை தருவன அல்ல. வெவ்வேறு தரப்புக்களினால் பிரயோகிக்கப்படும் இச்சொற்றொடர்கள் அவர்களது அரசியல் நோக்கிற்கும், நலன்களுக்கும் ஏற்ப தர்க்க ரீதியான வெவ்வேறு பொருள்கோடல்களை வேண்டி நிற்பன.

காலத்துக்கு காலம் ஒரே சொற்றொடரின் அர்த்தங்கள் மாறுபாடடைந்து வருதலையும் நாம் காணலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் தயாரிக்கப்படும் திரைப்படங்களிலும் "வடக்கு கிழக்கு யுத்தமும், இலங்கைத் தமிழர் பிரச்சினையும்" மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன. அவ்ப்பேறாக "ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம்" பற்றிய திரைப்படங்கள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. எனினும் போராளிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் குறிப்பிடத் தகுந்த குறுந்திரைப்படங்கள் வெளிவந்திருப்பினும் "வெளியே" வாழும் எமக்கு அவற்றைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

இலங்கையின் சிங்களத் திரைப்படங்களை சீரிய திரைப்படங்கள் எனவும், மலினமான திரைப்படங்கள் எனவும் தெளிவான பிரிகோடு ஒன்றினால் நாம் வகுத்துக் கொள்ளலாம். இப்பிரிகோடு செய்நேர்த்தி கருத்தியல் என்பவற்றால் ஆனது. சீரிய திரைப்படங்கள் என்னும் வகுப்பினுள் சில படங்கள் "வடக்கு கிழக்கு யுத்தத்தைப்" பற்றிப் பேசுகின்றன.

1970களின் நடுப்பகுதியில் வெளியான "சருங்கலே" (காற்றாடி), 1985ஆம் ஆண்டளவில் வெளியான "கொட்டி வல்கய" (புலியின் வால்) 1990களின் ஆரம்ப ஆண்டுகளில் வெளியான "நொமியன மினிசுன்" (சொல்லாமல் போகும் மனிதர்கள்) ஆகிய திரைப்படங்கள் சிங்களத்தின் பிரபல நெறியாளரும், திறமை மிக்க நடிகருமான காமினி பொன்சேகாவினால் உருவாக்கப்பட்டன.

இனங்களுக்கிடையேயான உறவும் புரிந்துணர்வும் மிகவும் மோசமாக சீர கெட்டுப் போயிருக்கும் இன்றைய காலகட்டத்தைப் போலல்லாது, சற்று மேம்பட்ட நிலையிலிருந்த 1970களில் வெளியான "சருங்கலே" அக்கால கட்டத்தில் இரு பிரதான இனங்களுக்குமிடையே நிலவிய நல்லனவும் தீயனவுமான சில விடயங்களைப் பற்றி எடுத்துரைத்த நல்லதொரு படம். "சருங்கலே" இற்கு முன்னும் பின்னும் அவ்வாறான திரைப்படங்கள் வெளியாகவில்லை.

ஆனால், பின்னர் வெளிவந்த கொட்டி வல்கய, நொமியன மினுசுன் ஆகிய படங்கள் இனப் போரினால் சிங்கள மேட்டுக்குடியினர் மீது ஏற்பட்ட சுமைகளையும், இலங்கை இராணுவத்தினுள் நிலவிய முரண்பாடுகள் பற்றியுமே அதிகம் பேசின. தமிழ் மக்களது பிரச்சினைகளை அவை சரியாக இனங் காணவோ, புரிந்து கொள்ளவோ, வெளிப்படுத்தவோ முயலவில்லை. அது அவற்றின் நோக்கமுமல்ல. 1983ஆடிக் கலவரம் சிங்கள, தமிழ் இனங்களது உணர்வுகளை மிகவும் மாற்றி விட்டதன் பெறுபேறுகளில் இதுவும் ஒன்று.

ஆனால் இவற்றுக்குப் பின்னர் வெளியான "வடக்கு கிழக்கு யுத்தம்" பற்றிப் பேசிய சில படங்கள் வேறொரு தளத்திலேயே தமது கருத்தியலை வெளிப்படுத்தின. யுத்தம் புரியும் இன்றைய சிங்கள இளந் தலைமுறை தமிழர் தொடர்பாக கொண்டிருக்கும் எண்ணங்களை அவை தயக்கமின்றி வெளிப்படுத்தின. இக்கருத்துக்கள் 1990களின் பின்னர் பெருவாரியாக வெளிவந்த தொலைக்காட்சி நாடகங்களின் மூலம் (கட்புல நுகர்ச்சி ஊடகம் என்ற அளவில் தொலைக்காட்சி நாடகங்களையும் சலனப்படங்கள் எனும் வகுப்பினுள் "வசதி" கருதி நாம் அடக்குவோமாயின்) பெருந்தொகையான சிங்கள பார்வையாளர்களைச் சென்றடைந்தன. இவை தமிழ்ப் பெண்ணைக் காதலித்து அவளது இன அடையாளத்தை பெருந் தன்மையுடன் சகித்துக் கொண்டு, சுகமான, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளும் சிங்கள இளைஞனைப் பற்றி "கதை" புனைந்தன. வடக்கு கிழக்கு பிரச்சினை தீர இவ்வாறான நடைமுறை ஒரு சிக்கலில்லாத, இரத்தம் சிந்தாத வழிமுறை என அவை பிரச்சாரப்படுத்தின. அதே சமயம் சிங்கள யுவதியைக் காதலிக்கும் தமிழ் இளைஞனது காதல் தோல்வியில் முடிவடைவதாகவும் அவை தப்பாமல் எடுத்துக் கூறின. இன மேலாதிக்கம், ஆணாதிக்கம் என்பவற்றின் பகைப்புலனில் இக்கருத்தியல் கூற வருவது என்ன என்பது எம்மால் புரிந்துகொள்ளக்கூடியதே. அத்துடன் இக்கருத்தியல் யுத்த முனையில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதற்கு கிருஷாந்திகளும், கோணேஸ்வரிகளும், சாரதாம்பாள்களும், ரஜனிகளும், கமாலிட்டாக்களும் எமக்கு நிதர்சனமான சாட்சியங்களாக உள்ளனர்.

2001ம் ஆண்டில் வெளியான "மே மகே சந்த" (இதோ எனது சந்திரன்) எனும் படமும், "புரஹந்த களுவர" (முழுநிலவில் ஒரு களங்கம்) எனும் படமும் வெவ்வேறான இரு தளங்களில் தமது கருத்தியலைக் கொண்டிருந்தன. பொதுப்படையாக யுத்த எதிர்ப்புப் படங்கள் என இவை அழைக்கப்பட்ட போதிலும், இவ்விரண்டு படங்களையும் ஒரே தட்டில் வைப்பது எவ்விதத்திலும் பொருத்தமற்றது.







"புரஹந்த களுவர" யுத்த முனையில் இறந்து போன ஒரு சிங்களச் சிப்பாயின் மரணம் அவனது குடும்பத்தினரால் உள்வாங்கப்படும் முறைமை பற்றிய சித்திரிப்புக்களினூடு இக்கோர யுத்தத்தை கேள்விக்குள்ளாக்குகின்ற சிறந்ததொரு படம். இப்படம் தமிழர்களது விடுதலைப் போராட்டம் பற்றி அலச முன்வரவில்லை. அவ்வம்சம் இப்படம் வெளிப்படுத்த விளைந்த கருத்தியலுக்கு முக்கியமற்றதொன்று. அரச, மற்றும் இராணுவ இயந்திரங்களை சிங்கள மக்களுக்கு அம்பலப்படுத்துவதே படத்தின் முக்கிய இலக்கு. அற்புதமான சினிமாத்துவ அம்சங்களோடு தனது கருத்தியலை திறம்படக் கையாண்ட வெற்றிகரமான ஒரு படைப்பு "புரஹந்த களுவர"

"மே மகே சந்த" தமிழர்கள் மீதான இராணுவ மேலாதிக்கம் சாத்தியப்படாத ஒன்று என்பதை நிதர்சனமாக உணர்ந்து கொண்ட பின், இன மேலாதிக்க உணர்வு மட்டும் எஞ்சி நிற்கும் ஒருவரது கருத்தியலை எடுத்துக் கூற முனையும் ஒரு படம். தமிழர்களை இழிவு படுத்துவதன் மூலம் சிதைவுற்ற தனது தன்முனைப்பை (ego) பூசி மெழுகும், சுய இரக்கம் கொண்ட ஒருவராகவே நெறியாளர் நம்மால் இனங்காணப்படுகிறார்.

முழுக் கதையுமே தர்க்கத்துக்கு ஒவ்வாத, அபத்த நிகழ்வுகளின் மீது கட்டப்படுகின்றது. யுத்த முனையின் பதுங்கு குழியொன்றினுள் சரமாரியான கனரக ஆயுதங்களின் முழக்கங்களின் நடுவே, தப்பி வந்து விழும் தமிழ் யுவதி ஒருத்தி இராணுவத்தினன் ஒருவனுக்கு தனது நிர்வாணத்தை உயர்த்திக் காண்பிப்பது தான் திரைப்படத்தின் முதலாவது சீக்குவென்ஸ். இராணுவத்தினனால் வல்லுறவுக்குள்ளான பின்னர், அவன் இராணுவத்திலிருந்து தப்பிச் செல்லும் போது அவனையே நிழலாக பின்தொடர்ந்து (என்னே, தமிழ்ப் பெண்ணின் கற்பு....... ஆஹா....... ஆஹா!) அவனது ஊருக்கே செல்வது இரண்டாவது சீக்குவென்ஸ். பின்னால் வரும் சில சீக்குவென்ஸ்களிலும் இராணுவத்தினனின் அண்ணனாலும், காதலில் தோல்வியுறும் அவ்வூர் இளைஞனாலும் வல்லுறவுக்குள்ளாவதும், இறுதியாக உள்ளூர் புத்த சந்நியாசியின் தவத்தைக் கலைத்து கண்காணாத இடத்துக்கு அவருடன் ஓடிப் போவதும் தான் முக்கியமான கதைத் திருப்பங்கள். இவற்றிடையே யுத்தத்தினால் சீரழிந்து கொண்டிருக்கும் குடும்பங்களைக் கொண்ட சிங்களக் கிராமத்தின் நிகழ்வுகளை மட்டும் நெறியாளரால் உண்மைத் தன்மையுடன் சித்திரிக்க முடிகிறது. தமிழ்ப் படங்களை சகிக்கும் நமக்கு இவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டிய தலைவிதி!

மறுபுறத்தில் தென்னிந்திய தமிழ் சினிமா "இலங்கைத் தமிழர் பிரச்சினையை" தனக்கே உரிய "கூழாம் பாணி" முறையில் பாவித்தது. இப்பிரச்சினை மீது முதன் முதலில் முதலிட்டு பெரும் இலாபமும் புகழும் அடைந்தவர் இயக்குநர் மணிரத்தினம். "நாயகன்" திரைப்படம், மக்கள் திரள் ஒன்றின் ஆதரவைப் பெற்று தனது போராட்ட வழிமுறையாக வன்முறையைக் கைக்கொள்ளும் ஒருவரது கதையே. என்னதான் பம்பாய் தமிழ் தாதா ஒருவரது கதையே இது எனக் கூறப்படினும் இத்திரைப்படத்தின் கதையிலும் எடுத்துக் கூறும் முறைமையிலும் ஈழத் தமிழர்களது விடுதலைப் போராட்டம் முக்கிய செல்வாக்குச் செலுத்துவதை நாம் காணலாம். அதன் பின்னர் ஒரு செம்மறியாட்டைப் பின்பற்றி குழியில் வீழும் ஏனைய செம்மறியாடுகளைப் போன்று பலரும் இவ்வாறான தமிழ்ப் படங்கள் எடுத்தனர்.

இப்போது மணிரத்தினம் "அசலான" இலங்கை இனப்பிரச்சினையில் தனது கரிசனையை வெளிப்படுத்தும் நோக்கில் "கன்னத்தில் முத்தமிட்டால்" என்றொரு படத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். இக்கதையும் தர்க்கத்துக்குப் பொருந்தாத சம்பவங்களையே மூலாதாரமாகக் கொண்டுள்ளது. மாங்குளத்தில் உள்ள புதுமணமகன் ஒருவன் தனது புதுமணப்பெண்ணுடன் சல்லாபமாக இருக்கும் ஒரு பொழுதில் இராணுவ வாகனங்களின் தொடரணி ஒன்றைக் கண்டதும் அவளை விட்டு விட்டு "போய்விடுகிறான்." அவளோ இராமேஸ்வரத்துக்கு அகதியாகப் போகிறாள். அங்கே ஒரு பெண் குழந்தையைப் பெற்று, அனாதையாக விட்டுவிட்டு மாங்குளத்துக்கு திரும்பி வருகிறாள். அங்கே போராளிகளுடன் இணைகிறாள். குழந்தையை, மனைவி பெயரில் கதை எழுதும் ஒரு எழுத்தாளன் (அட நம்ம சுஜாதா சார் போல

தொடர்ச்சி VIIம்பக்கம்...

நிகழ்வுகள்

- வாணி

# தமிழ் தேசியத்தின் முன்னால் உள்ள கேள்விகள்

தமிழ் தேசியப் போராட்டமானது தீர்வு நோக்கிய பேச்சுவார்த்தைச் சூழலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழர் எழுச்சிப் பேரணி என்ற பெயரில் ஒவ்வொரு பிரதேசத்திலும் எழுச்சி ஊர்வலங்களும் கூட்டங்களும் தமிழர்களின் சுயநிர்ணயத்தினை அங்கீகரிக்கக் கோரியும், தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்றும் கோஷமெழுப்பிய வண்ணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சமூக விஞ்ஞான கல்வி வட்டத்தின் ஏற்பாட்டில் 'தமிழ் தேசியம் நேற்று, இன்று நாளை' என்ற தலைப்பில் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் தேசியமும் மாக்சியமும் என்ற தலைப்பில் பேராசிரியர் சிவசேகரமும், தமிழ் தேசியத்தின் வரலாறும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் சி.கா.செந்தில்வேலும், தமிழ் தேசியமும் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் என்ற தலைப்பில் சோ.தேவராஜாவும், தமிழ் தேசியமும் பெரு வல்லரசு ஆதிக்கமும் என்ற தலைப்பில் இ.தம்மையாவும் உரையாற்றினர்.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டால் எல்லாப் பிரச்சினைகளுமே தீர்ந்து விடும் என்ற நோக்கில் எல்லோரும் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது

தமிழ் தேசியம் தொடர்பாக மிக முக்கியமான வினாக்களை முன்வைத்துச் சென்றிருக்கின்றது இந்தக் கூட்டம்.

தமிழ் தேசியம் சகலரையும் ஒன்றிணைத்ததாக இல்லை என்ற குற்றச்சாட்டு முதலில் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் தேசியத்தினை முன்னெடுத்துச் செல்வோர் விடும் தவறுகள் தொடர்பாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் பேசப்பட்டவற்றின் சாராம்சம் இது.

* தேசியம் சகலரையும் ஒன்றிணைக்கவில்லை. குறிப்பாக பெண்ணியம், வர்க்கம், சாதியப் போராட்டங்களை உள்ளடக்கியதாக தேசியப் போராட்டம் எழுச்சி பெறவில்லை.

தேசிய விடுதலையுடன் இவையும் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும் கூட நடைமுறை ரீதியாக எந்த வகையில் இணைக்கப்பட்டுள்ளது என்பதற்கு சரியான பதில் இல்லை.

* முஸ்லிம் மக்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட தவறை தமிழ் தேசியத்தின் தவறாகக் கொள்பவர்கள் நடைமுறை ரீதியாக இந்த மக்களின் சுயநிர்ணயத்தினை அங்கீகரிப்பதான செயற்பாடு எதுவுமில்லை.

* தமிழ் தேசியத்தின் தலைமை சக்திகள் மற்றையர்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கத் தயாராக உள்ளனரா?

* தமிழ் தேசியம் இன்று எதன் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது முக்கியமான கேள்வி.

தமிழர் பண்பாட்டில் கட்டமைக்கப்பட்டுள்ளது எனில் தமிழர் பண்பாடு என்பது எது?

தமிழ் மொழி மீது கட்டமைக்கப்பட்டுள்ளது எனில் இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் அந்தந்த நாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறு மொழிகளை தமிழர் பின்பற்றுகின்றனர். அப்போது இவர்கள் யார்?

அதேபோல் தமிழர்களாக இருந்து பின்பு பௌத்தர்களாக மாறி சிங்கள மொழியைப் பின்பற்றுபவர்களை தமிழ் தேசியத்திற்குள் ஏன் உள்ளடக்கவில்லை?

* இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் தான் விடுதலைப் புலிகள் இந்தியாவின் ஆதிக்கத்திற்கு எதிராக போராடினார்கள். ஆனால் இன்று அதே புலிகள் இந்திய அரசுடன் சமரசம் செய்து செய்து கொள்ள விரும்புகிறார்கள்.

இந்நிலைப்பாடானது இந்திய அரசின் ஆதிக்கத்தினை அனுமதிப்பதாக அமையாதா?

* இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தரைப்பாதை அமைப்பது தொடர்பாக இன்று பேசப்படுகின்றது. இது தொடர்பாக தமிழ் தேசியவாதிகளின் கருத்து என்ன? பொருளாதார ரீதியாகவும் இந்திய மேலாதிக்கத்தினை இலகுவாக நிறுவ முயற்சிக்கும் இச்செயற்பாட்டிற்கு நடைமுறை ரீதியான பதில் என்ன?

* அமெரிக்காவினை உலகின் பயங்கரவாதி என்று உண்மையான போராட்ட சக்திகள் அடையாளம் கண்டிருக்கும் வேளை தமிழ் தேசியத்தின் தலைமை சக்திகள் அமெரிக்காவின் ஆப்கான் மீதான தாக்குதல் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை என்பது கூட தமிழ் தேசிய சக்திகளின் அமெரிக்கா பற்றிய நிலைப்பாடு தொடர்பான சந்தேகத்தினை எழுப்புவதாகவே உள்ளது.

இன்றும் கூட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையினைக் கைவிட வேண்டும் என்றும் இலங்கை ஒன்றை ஆட்சியைக் கைவிட வேண்டும் என்றும் தெரிவிக்கிறார்கள். இவர்களின் கருத்துக்களுக்கு பதில் அளிக்காமல் இந்த ஏகாதிபத்தியவாதிகளை எங்களால் ஏய்க்க முடியும் என்று தமிழ் தேசியத்தின் தலைமை சக்திகள் நினைப்பார்களாயின் கூட அவை பம்மாத்தே.

மாறாக இந்த ஏகாதிபத்தியவாதிகள் தமிழ் தேசியத்தினை அங்கீகரிப்பார்கள் அல்லது அங்கீகரிக்க வைக்க வேண்டும் என்பது கூட ஏகாதிபத்தியவாதிகள் தொடர்பான சரியான புரிதல் இன்மையும், அவற்றுக்கு எதிரான கொள்கை நிலைப்பாடு இன்மையுமே.

* தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரி சிங்கள மக்களை கோரும் நாம் சிங்கள மக்களுடன் இணைந்த ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கு தயாரா?

உண்மையில் இந்த விமர்சனத்தின் நோக்கம் தமிழ்த் தேசியத்தினை முன்னெடுப்பவர்களை ஓரம்கட்டுவதல்ல. மாறாக அவர்களை சரியான பாதையில் வழிநடத்த உதவுவதே என்று கூட்டத்தில் பேசியவர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## நூல் மதிப்பீடு

- பேராயர் எஸ்.ஜெபநேசன்

# யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு

ஈழத்தமிழர்களின் பெரும் செல்வமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டிச் சிதைக்கப்பட்டு இருபது ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் இந்த அறிவுக்களஞ்சியம் காடையர்களினால் நெருப்பிடப்பட்டு நீறாகிப் போய்விட்டது. அந்த நெஞ்சைப் பிளக்கும் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார் பேறறிஞரும் ஆராய்ச்சியாளனுமாகிய வண. டேவிட் அடிகள். அந்த நூலக எரியூட்டலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு இலக்கியவாதி 'சுஜாதா' 1981-ம் ஆண்டு டிசம்பர் மாத ஆனந்த விகடன் இதழில் 'ஒரு இலட்சம் புத்தகங்கள்' என்கிற தலைப்பில் பாரதி நூற்றாண்டு சிறப்புச் சிறுகதை ஒன்றை எழுதியிருந்தார். அதே நிகழ்வில் பெரிதும் கவலையுற்ற வெளிநாட்டு ஆங்கிலேய அறிஞர் ஒருவர் யாழ்ப்பாண பொது மக்கள் நூலகம் எரிந்து கருகி நீறாகிக் கிடந்த சாம்பர் மேட்டிலே நின்ற வண்ணம் ஆங்கிலக்கவிதை ஒன்றை எழுதினார். இந்தக் கவிதையை பேராசிரியர் கைலாசபதியிடமிருந்து பெற்றுத் தமிழாக்கம் செய்து "கிருதயுகம்" என்ற ஈழத்து சிற்றிதழிலே கைலாசபதியின் மறைவுக்குப் பின்னர் கவிஞர் சோ.ப. பிரசுரித்திருந்தார்.

இத்தகைய அறிவுலகச் சிறப்புக்கள் வாய்ந்த யாழ்ப்பாணப் பொது மக்கள் நூலகம் எரியூட்டலின் 20வது ஆண்டு நிறைவின்போது அதன் வரலாற்றுத் தொகுப்பை எழுதிப் பிரசுரித்திருக்கின்றார் என்.செல்வராஜா. இந்த நூலை எரியூட்டலின் 20வது வருடப் பூர்த்தியை நினைவு கூரும் வண்ணமாக வெளியிட்டு இருக்கின்றார். இது அவருடைய பிரசுராலயமாகிய அயோத்தி நூலக சேவைகள் என்ற நிறுவனத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது.

அர்ப்பணிப்பும், வினையாற்றலும் உடைய உண்மையான நூலகர் ஒருவராலேயே இம்மாதிரி வரலாற்றுத் தொகுப்பு நூல் சாத்தியப்படும்.

மதிப்புக்குரிய என். செல்வராஜா யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த நூலகமாகிய "ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின்" நூலகராகச் சேவை செய்தவர். நூற்பெறுமதி உணர்ந்தவர். நூற்பயன்பாடு அறிந்தவர். அதுமட்டுமன்றி பழம்பெரும் நூலகரும் அறிஞருமாகிய டாக்டர் வே.இ.பாக்கியநாதன் அவர்களின் நூலக நெறிப்படுத்தலின் ஊடாக பயிற்சியும் பக்குவமும் பெற்றவர். அத்தகைய நூலகவியல் அறிஞர் ஒருவர் தொகுத்து அளித்திருக்கும் வரலாற்றுத் தொகுப்பு ஆவணப் புதையலாக இந்த நூல் விளங்குகின்றது.

127 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றியும் அதன் அழிவு பற்றியும் பொதுநூலகத்தின் சேவையின் சிறப்பும் பெருமையும் பற்றியும் கட்டுரைகள் காணப்படுகின்றன. இந்தக் கட்டுரைகளை நூலகர் செல்வராஜா பல்வேறு சஞ்சிகைகளில் இருந்தும் பத்திரிகைகளில் இருந்தும் அன்புடனே தேடித் தொகுத்துள்ளார்.

இத்தொகுப்பில் 45 கட்டுரைகள் காணப்படுகின்றன. அவற்றிலே 14 ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. எச்.ஏ.ஐ.குணத்திலக்கா, நடேசன் சத்தியேந்திரா, பேராசிரியர் நேசையா, வீ.எஸ்.துரைராஜா என்பவர்களின் ஆங்கிலக்கட்டுரைகள் இந்நூலுக்கு அணி செய்கின்றன. நூலுக்கு ஆசியுரையை மாநகர ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் வழங்கியுள்ளார்.

1894-ம் ஆண்டு சிலோன் ஒப்சேவர் பத்திரிகையில் யாழ். பொதுநூலகம் பற்றிய குறிப்பை முதலிலே வைத்திருக்கின்றார் ஆசிரியர். யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பிரிட்டிஷ் அதிகாரிகளும், யாழ்ப்பாணத்து அறிஞர்களும் சேர்ந்து இந்த நூலகத்தை அமைக்க முற்பட்டதனை சிலோன் ஒப்சேர்வர் குறிப்பிடுகின்றது. இக்குறிப்பிலே அரசாங்கத்திடமிருந்து மேலும் 50 ரூபா மானியமாகப் பெறப்பட வேண்டும் என்ற பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்ற செய்தி காணப்படுகின்றது. 1954-ம் ஆண்டு புதிய நூலகத்திற்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்ட செய்தியை தினகரன் வெளியிட்டுள்ளது. இதற்குப்பின்னர் எரியூட்டலும் அதனைப்பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.



> "அன்று இரவு 10 மணி போல நூலகத்திற்குள் நுழைந்த கொடியவர்கள் காவலாளியைத் துரத்தியடித்து விட்டு நூலகப் பெருங்கதவைக் கொத்தித் திறந்து உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 97ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி எரித்தழித்தனர். நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன."

இந்த நூலகம் பற்பல கிடைத்தற்கரிய பழம்பெரும் நூல்கள் மற்றும் தமிழ் ஓலைச் சுவடிகள் நாளிதழ்கள், வார மாத இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது.

அவரவருக்குரிய நூல்களை, நூலக வரையறையை மீறாமல் தேர்ந்தெடுத்து வழங்குவதிலே யாழ். பொதுமக்கள், நூலகத்தினர் காட்டியுள்ள ஈடுபாட்டுணர்வு போற்றுதற்குரியது. இது போன்ற பல செய்திகளையும் தகவல்களையும் அக்கால நூலகச் செயற்பாடுகளையும் எரியுண்ட நூலகத்தின் புனர்நிர்மாணச் செயற்பாடுகளையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் நுணுக்கமாகவும் விபரிக்கின்றது இத்தொகுப்பு நூல்.

இந்நூலகத்தின் அதிதீவிர வாசகனும் படிப்பாளியுமாகிய எஸ். எம்.கமால்தீன் என்பவர் "நான் கண்ட யாழ்ப்பாணப் பொது நூலகம்" என்ற தலைப்பிலே எழுதியுள்ள கட்டுரையில்..

"எனது கண்களையே நம்ப முடியவில்லை. அந்த விசாலமான மண்டபத்தின் தரை முழுவதுமே சாந்தும் சாம்பலுமேயன்றி வேறெதுவுமே காணப்படவில்லை. ஓர் இடுகாட்டின் மத்தியில் நிற்பது போன்ற உணர்ச்சியே எனக்குள் மேலிட்டது. எமக்கு ஏன் இந்தக் கொடுமையைச் செய்தார்கள்? கலங்கிய கண்களோடு என் முன்நின்ற யாழ். பொது நூலகர் ரூபவதி நடராஜா விடுத்த உருக்கமான கேள்வி இது. நாட்டின் அனைத்துத் திசைகளில் இருந்தும் ஏன் உலக நாடுகள் எங்கணுமிருந்தும் ஆயிரமாயிரம் நல்லிதயங்களிலிருந்து எழும் கேள்வியும் இதுவே. யாழ்ப்பாணப் பொது மக்கள் நூலகத்தின் இரவல் வழங்கும் பகுதியின் நடுவே வெறுமையின் கோரத்தில் சிந்தையைச் செலுத்தியவனாக நிற்கின்றேன் நான். முன்னர் எத்தனையோ தடவைகள் எனது சிந்தைக்கு விருந்தளித்த அந்த அறிவுக்களஞ்சியம் சிதைந்து சூனியமாகி விட்டிருந்தது. இதயமே அற்றோர் கடந்த ஜூன் மாதம் முதல்நாள் அதிகாலையில் மூட்டிய தீயினால்"

என மிகுந்த கவலையுடன் கொதிப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரை 19.7.1981 திகதியிட்ட வீரகேசரி வார வெளியீட்டிலே பிரசுரமாயிற்று.

நீலவண்ணன் எழுதி வரதர் வெளியீடாக 1981 ஜூனில் பிரசுரமான "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது" என்ற சிறுநூல் யாழ் நூலகப்படுகொலை பற்றிக் குறிப்பிடுவதாவது:

"அன்று இரவு 10 மணி போல நூலகத்திற்குள் நுழைந்த கொடியவர்கள் காவலாளியைத் துரத்தியடித்து விட்டு நூலகப் பெருங்கதவைக் கொத்தித் திறந்து உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 97ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி எரித்தழித்தனர். நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுக்குள்ளே எரியாத நூல்கள் ஏதேனும் எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உதவியாளர்கள் சு.யோ.இமானுவேலும் அ.டொன் பொஸ்கோவும் ச.கந்தையாவும் சாம்பல் குவியல்களைக் கிளறிக் கொண்டிருந்த நிலையைக் காண முடிந்தது. நூலகம் கருகிக் காரை பெயர்ந்து கிடந்தது ... கயவர்கள் நூலகத்தையே புதைத்து விட்டார்கள்."

அனேகமாக 1981 மே மாதம் 31-ம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் வெளியான 1981-ம் ஆண்டு நாளிதழ்கள், வார இதழ்கள் யாவுமே (உலகம் முழுவதும்) யாழ்ப்பாண பொது நூலகத்தின் 'படுகொலை'யைப் பற்றி விலாவாரியாக எழுதியிருந்தன. அவற்றைப் பற்றிய செய்திப்பதிவுகளும் அனுதாப அறிக்கைகளும் நூலகப்புனர்நிர்மாணத்திற்கான நன்கொடைகள், அன்பளிப்புகள் பற்றிய தகவல்களும் 1984-ம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி வெளியிடப்பெற்ற புனர்நிர்மாணஞ் செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பொதுநூலகத் திறப்பு விழா மலரில் பிரசுரமான மிக முக்கியமான ஓரிரு கட்டுரைகளும், பழம்பெரும் நூலகர்கள் பற்பல துறைகளைச் சார்ந்தோர் எழுதிய கட்டுரைகளும் எரிமலை, நம்நாடு, புதுமைப்பெண், புதினம் போன்ற பிறநாட்டுத் தமிழ் ஏடுகளில் பிரசுரமான கட்டுரைகளும் தமிழ் நேஷன், தமிழ் நெற், போன்ற இணையத்தளங்களின் செய்தி மற்றும் தகவல்களும் அடங்கிய ஆவணக்கருவூலப் பெட்டகமாக வெளிவந்திருக்கும் இந்த வரலாற்றுத் தொகுப்பு நூல் நூலகர் என். செல்வராஜாவின் பெயரைக் காலமெல்லாம் எடுத்துரைத்துக் கொண்டேயிருக்கும். ஏனெனில் புலம்பெயர்ந்து மேலைநாடுகளுக்குப் போன ஈழத்தமிழர்களிலேயே பெரும்பான்மையினர் தமிழருக்கேயுரிய புறத்தையும் அகத்தையும் தொலைத்துவிட்டு சுயமுகம் இழந்து இரவல் முகம் வாங்கிவரும் இன்றைய சூழலிலே என். செல்வராஜா போன்றவர்களின் இத்தகைய செயற்பாடுகள் மனப்பூர்வமான போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்குமுரியவையே. மகத்தான வரலாற்றுத் தொகுப்பு நூலுக்கான இந்தத் திறனாய்வுக் கட்டுரையை பேரறிஞர் அண்ணா அமெரிக்க யேல் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மண்டபத்தின் வாயில் முகப்பிலே கண்டு சொன்ன மகுட வாசகத்துடன் நிறைவு செய்கிறேன்.

"வரலாற்றிடமிருந்து யாரும் பாடம் படிப்பதே இல்லை."

நூலின் பிரதிகள் தபாலில் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

Mr. N.Selvarajah, 48 Hallwicks Road, Luton , Bedfordshire, LU2 9BH,United Kingdom . (Price including postage Sterling Pounds 10.00 Euro 15.00)

## கன்னத்தில் ...

VI பக்கத் தொடர்ச்சி

இல்லை) தத்தெடுத்து வளர்க்கிறான். அவன் ரொம்ப சுயமரியாதை, தன்னம்பிக்கை, முற்போக்கு இத்யாதி இத்யாதி உள்ளவனாக்கும்! பஸ்ஸில் சீட் கொடுப்பதற்காக தொந்தரவு தரும் ரசிகனை "அடச் சீ ஒக்காருய்யா" என அதட்டுவானாம்! (அட நம்ம தோழர் ஜெயகாந்தன் மாதிரி இல்லை)

சீரும் சிறப்புமாக வளரும் அக்குழந்தையின் ஒன்பதாவது பிறந்தநாளின் போது, ஒரு பரிசு போல, "நீ நம்ம குழந்தை இல்லை" என்று எழுத்தாளர் தம்பதிகள் சொல்லி விடுவார்களாம். (என்ன உலகமய்யா இது. பெற்றவள் தான் அருமை தெரியாமல் விட்டுவிட்டுப் போனாள் என்றால், சுஜாதா மாதிரி ஜெயகாந்தன் மாதிரி உலகைப் புரட்ட வந்த எழுத்தாளர்களுக்குமா குழந்தையின் அருமை புரியவில்லை!)

அப்புறம் சுட்டித்தனமான அந்த குழந்தை பிடிக்கும் பிடிவாதம் காரணமாக சென்னையிலிருந்து மாங்குளம் நோக்கி எழுத்தாளரும் மனைவியும் வருகிறார்களாம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பாராட்டு விழா நடக்கின்ற போது அருகில் தற்கொலைத் தாக்குதல் நடக்கிறதாம். குழந்தை தப்பியது தம்பிரான் புண்ணியம்.

பிறகு சிங்கள டாக்டர் நண்பரான விக்கிரமசிங்கவுடன் மாங்குளம் நோக்கிய பயணம் நிறைய ஆமிக்காரர்கள். இடப்பெயர்வு. அப்போது சண்டை. சண்டையினிடையே போராளியான நிஜ அம்மாவை குழந்தை காண்கிறது. அம்மாவோ தன் குழந்தை இல்லை என்கிறாள். எழுத்தாளரும் டாக்டரும் யுத்த முனையில் உலாப் போன நேரம் போராளிகளால் பிடித்திழுத்துச் செல்லப்படல். எழுத்தாளர் நம் நாட்டுக் கவிஞர் ஒருவரது கவிதையை ஒப்புவித்து தப்பிக் கொள்ளல். அப்புறம் மேலும் சண்டை. குழந்தை இந்த ஊர் வேண்டாம் என்கிறது. பிறகு அம்மா வருகிறாள். அழுகிறாள். கன்னத்தில் முத்தமிட்டு விட்டு கடமைக்காகச் செல்கிறாள். குழந்தை அம்மாவை குறுக்குக் கேள்வி கேட்டு விட்டு சென்னைக்குத் திரும்புகிறது.

கிழியக் கிழிய நாலு கேள்வி கேட்பதற்கென்றே சுஜாதா மணிரத்தினம் அன்கோவினால் உருவாக்கப்பட்ட கதை.

சும்மா பார்க்கலாம். யேசுதாஸின் நல்ல பாட்டு இருக்கிறது. கேட்கலாம்.

மின்னேரியாக் குளம் போன்ற இடங்கள் அழகாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. ரசிக்கலாம்.

மாங்குளம், சுப்பிரமணியம் பார்க் போன்ற பெயர்களை உச்சரிக்கக் கேட்டு புல்லரிக்கலாம்.

கொழும்பைக் காட்டும் போது விசிலடிக்கலாம்!

ஆனால் இவையெல்லாம் எதுவரை? ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மையான படைப்புக்கள் வெளிவரும் வரை!

எத்தனை காலம் ஆகுமோ?

## தமிழ் சினிமா...

VIII பக்கத் தொடர்ச்சி

களையே ஆபாசமாக நடிக்கவும் வைத்திருக்கிறார்கள். தன்னை ஒரு உன்னத கவிஞன் என்று கூறி மார்தட்டிக் கொள்ளும் வைரமுத்து போன்றவர்கள் தங்களை உன்னதமானவர்களாகக் காட்டிக் கொள்ளப் பெண்களின் பாலுறுப்புக்களைத் தான் பகடைக்காயாக்க வேண்டுமோ?

கேட்டால் இன்றைய இளைஞர்கள் இவற்றைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். அதனால் தான் நாங்கள் இவ்வாறு எழுதுகிறோம் என்று கிஞ்சித்தும் வெட்கமில்லாமல் கூறும் இவர்கள் ஆண்களின் மனதில் ஓர் உன்னத இடத்தைப் பிடித்து விடுகின்றனர். இதனால் பெண்களுக்கு வரும் பிரச்சினைகளை அவர்கள் நினைத்துப் பார்ப்பதேயில்லை. தங்களுடைய இருப்பை வெளிக்காட்ட இதைவிட என்ன செய்ய முடியும் இவர்களால். எல்லோருக்கும் தங்களுடைய இருப்புத்தான் இப்போது முக்கியமாகப்படுகிறது.

# தமிழ் சினிமா பாடல்கள் சுட்டும் திசை!

## ஒரு சிறு குறிப்பு


- நிலா

ஆணாதிக்க சிந்தனை முறை வளர்ச்சி பெற்றிருக்கும் இன்றைய நிலையில் பெண்கள் எங்குமே ஒடுக்கப்படுபவர்களாகவே காணப்படுகிறார்கள். இதற்குத் தூபம் போடுபவையாக ஊடகங்களும் தமது பங்களிப்பை அளிக்கின்றன. இன்றைய சூழலில் பாலியல் வல்லுறவு என்பது நாளாந்த நிகழ்வாகி விட்டது. அதற்கான காரணங்களும் இல்லாமல் இல்லை. நாட்டிலுள்ள சட்ட ஒழுங்குகளில் உள்ள பலவீனம் இதற்கான வாய்ப்பாகப் போய்விடுகிறது. பாலியல் வல்லுறவு புரிபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு சட்டத்திலுள்ள பலவீனமும், சமூகத்திலுள்ள சிந்தனைமுறையும் பிரதான காரணங்களாகிவிடுகின்றன.

படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கான நீதி கூட பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிடைப்பதில்லை. அல்லது பெருமளவில் மிகத் தாமதித்தே கிடைக்கின்றன.

இவற்றையெல்லாம் நாம் ஒருபோதும் நினைத்துப் பார்ப்பதில்லை. எல்லாம் பத்திரிகையில் கொட்டை கொட்டை எழுத்துக்களில் வரும் பொழுது பார்த்து ஆ..அந்தோ பரிதாபம் என்ற உச்சுக் கொட்டுவதிலேயே எங்களுடைய பெரும்பாலோருடைய பணி முடிந்து விடுகிறது. பின் அவரவர் வேலை அவரவர்க்கு. இத்தகைய பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கும் பாலியல் சேஷ்டைகளுக்கும் காரணமாயிருப்பவற்றுள் திரைப்படங்களும் திரைப்படப் பாடல்களுமே தமது அதி முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன. திரைப்படங்களை இயக்குபவர்களும் பாடலாசிரியர்களும் பாலியல் சேஷ்டைகளுக்கான தங்கள் பங்களிப்பை நன்றாகவே செய்து முடிக்கின்றனர். இவர்களும் ஆண்கள் தான். இவர்கள் தங்கள் பணத் தேவைகளுக்காக தங்களுடையதும் மக்களுடையதும் உணர்வுகளையே விபச்சாரமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

திரைப்படங்களில் பெண்கள் ஆண்களால் துன்புறுத்தப்படுகிறார்கள். பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள். சினிமாவில் ஒரு ஆண் ஒரு பெண்ணை அவளுடைய விருப்பமில்லாமலேயே அவளுடைய தொடையைக் கிள்ளலாம், குடுமியைப் பிடித்திழுக்கலாம், அதற்கும் மேலாக அவளைக் கட்டிப் பிடித்து முத்தம் கூடக் கொடுக்கலாம் என்ற காட்சிகளை வலிந்து திணிக்கிறார்கள். இவை பார்வையாளர் ரசிக்கும் வகையில் கட்டமைக்கப்படுகின்றன. இதன் விளைவாக எங்கள் சுய சிந்தனையில்லாத இளைஞர்கள் தாங்களும் அப்படியே செய்ய ஆசைப்படுகிறார்கள். இதன் விளைவாக பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், வீதியோரங்களில், பேரூந்துகளில் பெண்கள் சொல்லவொணாப் பாலியல் சேஷ்டைகளுக்கு ஆளாகிறார்கள்.



இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்த சில சம்பவங்களைக் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன்.

1. ஒரு பெண் பேரூந்து நிலையத்தில் பேரூந்திற்காக காத்து நிற்கிறாள். அப்போது அங்கு வந்த மூவர் கொண்ட பாடசாலை செல்லும் பையன்கள், அவர்கள் ஒன்பதாம் வகுப்புத்தான் படித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒருத்தன் அந்தப் பெண்ணின் பின்புறத்தில் தனது கொப்பியால் இடிக்க, இன்னொருவன் தனது தோள்மூட்டால் அந்தப் பெண்ணின் தோள்மூட்டில் இடிக்க, மற்றவன் அவளது பின் பக்கத்தில் பலமாகக் கிள்ளிவிட்டுத் தெரியாத மாதிரி தங்களுக்குள் குதூகலமாகக் கதைச்சுச் சிரித்தபடி போய்விட்டார்கள். அந்தப் பெண் அவமானத்தால் தனது கையாலாகாத்தனத்தை நொந்து அழுதபடி கைக்குட்டையால் முகத்தை மறைத்தவாறு வந்த ஒரு பேரூந்தில் ஏறிச் சென்றுவிட்டாள். இதில் சொல்ல வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் இவன்கள் இன்னும் பைத்தியக்காரத்தனமாக பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களையும் பற்றி உளறிக் கொட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க் கலாசாரத்தில் பிறந்த தமிழ்ப் பையன்கள் என்பதுவே.

2. இது வீதியில் நடந்த விடயம். ஒரு பெண் வீதியில் போய்க் கொண்டிருக்கும் போது வீதியில் சைக்கிளில் சென்ற எவனோ ஒருவன் அந்தப் பெண்ணின் மார்பைப் பிடித்து இழுத்து விட்டு சந்தோஷமாகச் சைக்கிளில் பறந்து விடுகிறான். அந்தப் பெண் அவமானத்தால் கூனிக் குறுகிப் போய் விடுகிறாள்.

3. இதுவும் வீதியில் தான். இந்தப் பெண் ஒரு சிறுமி. பன்னிரண்டு வயதுதான் இருக்கும். ரியூசனுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது ஒரு கிழவன் கூப்பிட்டிருக்கிறான். இவளும் வயது போனவர் ஏதோ உதவிக்காகக் கூப்பிடுகிறார் என நினைத்துப் பக்கத்தில் போயிருக்கிறாள். அவன் இந்தச் சிறுமியின் பாலியல் உறுப்புக்களில் சேஷ்டை விட்டிருக்கிறான். அதன் பின் விபரீதத்தை உணர்ந்த அந்தச் சிறுமி ஓடி வந்திருக்கிறாள். அதன் பின் அவளால் சாப்பிட முடியவில்லை, உறங்க முடியவில்லை. ஏதோ பித்துப் பிடித்தவள் போல் அமர்ந்து இருந்திருக்கிறாள். இதைக் கண்ட தாய் என்ன விடயம் என்று வினவியிருக்கிறார். தாயிடம் இந்தச் சிறுமி முழு விடயத்தையும் கூறியிருக்கிறார். அவன் கூப்பிட்டால் நீயேன் போனாய். நான்தான் உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா? "நீங்கள் பொடியங்களோடை பழகுவதில் தானே அம்மா கவனமாக இருக்கச் சொன்னீர்கள். இவன் கிழவன் அம்மா. பாவம் ஏதோ உதவிக்காகக் கூப்பிடுகிறான் எண்டு கிட்டப் போனேன்" அழத் தொடங்கி விட்டாள். அந்த அப்பாவிச் சிறுமி.

இவ்வாறு எத்தனை எத்தனையோ சம்பவங்கள் சொந்தத் தந்தையால், அண்ணனால், மைத்துனனால், எஜமானனால் என்று உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரந்து காணப்படுகின்றது. எந்தவிதமான சமூகப் பொறுப்புகளும் தன்னுணர்வும் இல்லாதவர்களாக தமிழ் சமூகம் மாறி வருகிறது. ஆண்களின் வக்கிரங்களைக் கொட்டுவதற்காகவே பெண் படைக்கப்பட்டிருக்கிறாள் என்கிற எண்ணத்தை சினிமாக்கள் இலகுவாகவே பார்வையாளனில் பதிய வைத்து விடுகின்றன. காலங்காலமாக இந்த எண்ணங்களைப் பட்டை தீட்டிப் பட்டை தீட்டித்தானே இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான சம்பவங்களுக்கு திரைப்படங்கள் மட்டுமல்ல திரைப்படப் பாடல்களும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. பெண்களின் உறுப்புக்களை வைத்துப் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விதமாக சினிமாப் பாடல்கள் எழுதப்படுகின்றன. இதற்கு வைரமுத்து, வாலி உட்பட இதர கவிஞர்கள் என்று சொல்லிக் கொள்ளப்படும் கவிஞர்களின் பங்களிப்பினை நாம் எடுத்துக் கொள்ளலாம். இவர்களின் சிந்தனைகளில் தட்டுப்படுபவையெல்லாம் பெண்களின் பாலுறுப்புக்களான மார்பும், யோனியும் மட்டும் தான். இந்த சொற்களுக்கான உதாரணமாக சில பாடல்களைத் தரலாமென்று நினைக்கிறேன் .

1. "காலேஜுக்கு புஸ்ஸீமலை தூக்கிப் பாரு செக்ஸீ மலை" . இது வைரமுத்துவினால் சொக்லேட் படத்துக்காக எழுதப்பட்டிருக்கிறது.

2. "கட்டிப்புடி கட்டிப்புடிடா கண்ணாளா கண்டபடி கட்டிப்புடிடா". இந்தப் பாடல் முக்கலும் முனகலுமாக கேட்கவே முடியாதபடி மிகவும் ஆபாசமாக எழுதப்பட்டிருக்கிறது வைரமுத்துவினால் குஷி படத்துக்காக.

இவை மட்டுமல்ல இன்றைய சினிமாப் பாடல்களெல்லாம் இவ்வாறு ஆபாசம் நிறைந்தவையாகத்தான் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக பெண்களைக் கேவலப்படுத்தும் முகமாக ஆணாதிக்க சிந்தனையில் இப்பாடல்கள் எழுதப்பட்டிருக்கிறது. இப்பாடல்களுக்கு ஏற்றவாறு பெண்-

தொடர்ச்சி VIIபக்கம்...

மனவெளி கலையாற்றுக் குழு வழங்கும்

ஒன்பதாவது

அரங்காடல்

இயூஜீன் அயனெஸ்கோவின்
• நாற்காலிகள்
நெறியாள்கை: P. விக்னேஸ்வரன்

மஹாகவியின்
• புதியதொரு வீடு
நெறியாள்கை: செல்வன்
நெறியாள்கை மேற்பார்வை: K.S. பாலச்சந்திரன்

| MARCH | MARCH | MARCH |
|---|---|---|
| 16 | 16 | 17 |
| SAT | SAT | SUN |
| 1:00pm | 6:30pm | 4:00pm |



Markham Theatre for Performing Arts
171 Town Centre Blvd., Markham (Warden & Highway 7)

Tickets available at (905) 305-SHOW
தொடர்புகளுக்கு: (416) 269-0078, (416) 429-8854
www.manaveli.org

• அரங்க நிர்வாகத்தினரின் இறுக்கமான விதிமுறை: நாடகமொன்று நிகழ்ந்து கொண்டிருக்கும்போது எவரும் அரங்கினுள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
• பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய குழந்தைகள் பராமரிப்பகம்

ஒன்பதாவது அரங்காடலுக்கு ஆதரவு தருவோர்

ROYAL LEPAGE Tam Sivathasan, B. Sc. Eng. (416) 284-4751, (416) 804-3443
GNANAM STUDIOS 2381 Eglinton Ave. E 416-750-8118
A MAX AUTOMOTIVE 185 Midwest Rd., 416-285-8425
இசையரங்கம் வழங்கும் ஜூன் 9ம் திகதி இசைக்கு ஏது எல்லை -4
உலக தமிழோசை • காலாண்டு சஞ்சிகை • 416-282-8059
MANUEL JESUDASAN Barrister, Solicitor & Notary Public 416-444-8070
RJ Multi Litho 4090 RIDGEWAY DR., Unit 18 905-569-7883

media sponsors

tvi TAMIL VISION INC. · CTBC · TCBC கீதவாணி · CTR · உதயன் · ஈழநாடு · நிகரி · TV CEYLON

எறிகின்ற கடலென்று மனிதர்கள் அஞ்சார்: எது வந்ததெனின் என்ன அதை வென்று செல்வார்

## தொடரும் விவாதம்

- குவேனி

# தன்னியல்பான போராட்ட எழுச்சிகளும் விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தும்!

மக்கள் வேறு புலிகள் வேறு எனும் நிலைமை ஈழத்தமிழர் தாயகத்தில் தீவிரமாக மாற்றமடைந்து வருகிறது. தமிழ் மக்கள் அனைவரும் தற்போது தமது தேச உரிமைக்காக திரள்கின்றனர். தமது தேசிய சுயநிர்ணயத்திற்கான உரிமைப் போராட்டங்களை பாரிய அளவில் தாயகமெங்கும் நடாத்துகின்றனர். மக்கள் தமது சொந்தக் குரலில் தேச உரிமைக்காகப் போராடுவது தான் பலமிக்கதாகும். மக்களின் குரலை உலகில் எந்த ஆதிக்க சக்தியாலும் அத்தனை இலகுவில் 'பயங்கரவாத'முத்திரை குத்திவிட முடியாது.

ஈழத்தமிழரின் விடுதலைக்காக விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் போராட்டத்தை பயங்கரவாதமாக கொச்சைபடுத்தி நசுக்கிட அந்நிய ஆதிக்க சக்திகள் எப்படியெல்லாமோ சூழ்ச்சிகள் செய்கின்றன. அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா என பலமான வல்லரசுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு தடை செய்தனர். செப்ரெம்பர் 11இன் பின்னர் உருவாகியுள்ள உலக அரசியல் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு 'பயங்கரவாத எதிர்ப்பு யுத்தம்' ஒன்றைத் தொடக்கி நாடுநாடாக போராட்ட அமைப்புகளை அழித்தொழிக்க புறப்பட்டுள்ளனர். இந்தச் சூழலைப் பயன்படுத்தி சிங்கள பாசிச சக்திகள் புலிகளையும் இந்தப் பயங்கரவாத அழித்தொழிப்பில் இலக்காக்க வேண்டும் என்கின்றனர். அந்நிய ஆதிக்க சக்திகளும் இதே அபாய சமிக்ஞையை விடுதலைப் புலிகளுக்கும் ஈழத்தமிழருக்கும் காட்டியபடி நமது மக்களைப் பயமுறுத்துகின்றனர்.

ஏகாதிபத்திய, இந்திய நலன்களை பாதுகாத்து வரும் சிறிலங்கா அரசிற்கு சொந்தமான படைகள் மீதும், சோவினிச அரசியல்வாதிகள் மீதும், சோவினிச நிர்வாக இயந்திரத்தின் மீதும் இராணுவத் தாக்குதல் நடாத்துவது பயங்கரவாதச் செயல் என அவர்கள் கூறுகின்றனர். இப்படிக் குற்றஞ்சாட்டுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் போராட்ட முன்னெடுப்புகளை தடுத்து நிறுத்த முயல்கின்றனர். இந்த வஞ்சகத்தனமான சர்வதேச அரசியல் சூழலை முறியடித்து நமது விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை இந்த சர்வதேச ஆதிக்க சக்திகள் கூட மறுதலித்திட முடியாதவாறு உலகின் முன்னிலையில் நிறுவிடும் பொறுப்பு இன்று மக்கள் சக்திக்கு உரியதாகியுள்ளது. அவ்வகையில் மக்களின் இந்த எழுச்சி என்பது விடுதலைப் போராட்ட அரசியலின் ஒரு பகுதியாகவும், அதை முன்னெடுத்துச் செல்லும் ஒரு மார்க்கமாகவும் உள்ளது.

இவ்வாறான மாபெரும் அரசியல் பண்புடைய தேசிய எழுச்சியானது நிறுவனப்படுத்தப்படாது விடப்படுவது ஒட்டுமொத்த விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றத்திற்கும் பாதகமானதாகும். அவ்வகையில் இந்தத் தேசிய எழுச்சியை அதன் அரசியல் பண்பிற்கும் இன்றைய குறிப்பான வரலாற்று நிலைமைகளுக்கும் பொருந்தி வரக்கூடிய வகையில் நிறுவனப்படுத்துவது அவசியமாகும்.

தற்போது நமது விவாதமெல்லாம் எத்தகைய வடிவத்தில் தமிழ் தேசிய எழுச்சியை நிறுவனமயப்படுத்துவது என்பது தான்.


பரந்துபட்ட தமிழ் மக்களின் அரசியல் உணர்வைப் புரிந்து கொண்டு அதை வழிநடாத்தி நெறிப்படுத்திச் செல்லும் வகையிலான எளிமையான அமைப்பு வடிவத்தைக் கொண்டு இத்தலைமை உருவாக்கப்பட வேண்டும். இன்று தீவிரமாக எழுச்சிப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் பல்வேறு மக்கள் போராட்ட அமைப்புகளின் தலைமைகளையும், தேச நலன் விரும்பும் ஆக்கபூர்வமான செயற்பாட்டாளர்களாய் இருக்கக் கூடிய தனிநபர்களையும் தேசபக்த அறிவுத்துறையினரையும், தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் இணைத்து இந்த மக்கள் அரசியல் தலைமை உருவாக்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகத்தில் செயற்படும் அனைத்து தேசபக்த மக்கள் அமைப்புகளினதும் விரிவான பிரதிநிதித்துவத்தில், தேசிய நலனில் அக்கறையுடைய தமிழ் ஊடக வியலாளர்களினதும் அறிவுத் துறையினரதும் பங்குபற்றலில் தமிழ் தேசிய மாநாடு நடாத்தப்பட வேண்டும். அம்மாநாட்டில் மக்கள் அரசியல் தலைமை தெரிவு செய்யப்பட வேண்டும். அதன் கொள்கை, தாபன விதிகள், செயல் திட்டம் யாவும் தமிழ் மக்களுக்கு பகிரங்கத் தன்மையுடன் இருக்க வேண்டும். இவை சார்ந்து மக்கள் மத்தியில் விவாதங்கள் நடைபெறச் செய்வதுடன் மக்கள் கருத்துகளைப் பெற்று அவற்றை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்துவதில் மக்கள் அரசியல் தலைமை ஜனநாயக பூர்வமானதாக இருக்க வேண்டும்.


நிகரி 2வது இதழில் டி.சிவராம் தமிழ் தேசிய மாநாடொன்றை தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு முன்கையெடுத்து நடாத்த வேண்டும் என மிகத்தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தது கவனிக்கத்தக்கது. ஆனால் தமிழ் கட்சிகளின் கூட்டு தேசிய நலன் சார்ந்து இதுவரையில் ஆக்க பூர்வமான முயற்சிகளில் இறங்கா திருப்பது அது பற்றிய சந்தேகங் களையே மேலும் அதிகரிக்கச் செய் கிறது. இந்நிலையில் கூட்டமைப்பாக இல்லாவிடினும் கூட்டமைப்பிலுள்ள தேசிய நலனில் அக்கறையுடைய தனிநபர் அரசியல்வாதிகளும், தொண்டர்களும் தமிழ் தேசிய மாநாடொன்றை நடாத்தி அதில் மக்கள் அரசியல் தலைமையை உருவாக்குவதை தமது உடனடித் தேசியக் கடமையாகக் கொள்ள வேண்டும். தமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் மூலம் தமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கும் அரசியல் அதிகாரங்களைத் தேச நலனுக்காக உச்சபட்சம் பிரயோகிக்க வேண்டும்.


இவ்விடத்தில், நிகரி 5வது இதழில் சி. சகாதேவன் என்பவர் 'உரிமைப் போராட்டமும் புலமைத்துவமும்' எனும் தலைப்பில் எழுதியிருந்த விடயத்தை நினைவு கூர வேண்டியுள்ளது. செயலும் புலமைத்துவமும் இணைய வேண்டும் என்பதையும் அது இணையாததன் விளைவுகளையும் அவர் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தார். உருவாக்கப்படும் மக்கள் அரசியல் தலைமை சி.சகாதேவனின் கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவம் வழங்குவது தேசிய எழுச்சியை மேலும் காத்திரமுடையதாக்கும். இவ்வாறு உருவாகும் மக்கள் அரசியல் தலைமையின் பிரதான கடப்பாடுகள்:

- மக்களது தேசிய எழுச்சியை தொடர்ச்சியாகவும் திட்டமிட்டும் வழிநடாத்திச் செல்வது. மக்களின் தேசிய உணர்வெழுச்சியை விடுதலைக்கான அரசியலாக நெறிப்படுத்துவது, மக்கள் தொடர்ந்து விடுதலை உணர்வில் திளைத்திருக்க தொடர்ச்சியான அரசியல் விழிப்புணர்வு ஊட்டுவது.
- தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான கொந்தளிப்பில் பொதிந்துள்ள அரசியலை சாராம்சப்படுத்தி மக்களின் குரலில் சர்வதேச மயப்படுத்துவது.
- தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்து மக்களின் பிரதிநிதியாக சிறிலங்கா அரச தரப்புடனும், சர்வதேச பிரதிநிதிகளுடனும், சர்வதேச நிறுவனங்களுடனும் உரையாடுவது. (இன்று இக் காரியத்தை தமிழ் கட்சிகளின் கூட்டு செய்கிறது. இந்த நம்பிக்கையற்ற சந்தர்ப்பவாத கூட்டு மக்கள் அரசியல் தலைமையால் பிரதியீடு செய்யப்பட வேண்டும்)
- ஈழத்தமிழரின் அரசியல் தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகள் தேச நலன்பாற்பட்டு ஒவ்வொரு கட்டத்திலும் முன்னெடுக்கும் அரசியல் நிலைப்பாட்டை பலப்படுத்துவதும், அதை மக்கள் அரசியலாக்குவதும் வேண்டும்.









- தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பைச் சார்ந்த தரகர்கள் தேச அரசியல் நலன்களை விற்றுவிடாதவாறு கண் காணிப்பாய் இருப்பது, தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற பிரதிநிதிகளை வழிநடாத்துவது, இயக்குவது.
- எரிந்துகொண்டிருக்கும் தமிழ் - முஸ்லீம் உறவில் நல்லுறவை ஏற்படுத்துவது, பரஸ்பரம் ஒவ்வொரு தரப்பும் மற்ற தரப்பின் அரசியல், சமூக உரிமைகளை மதித்து நடக்கும் வகையில் முன்மாதிரியாக செயற்படுவது, தமிழ் வெகுஜன உணர்வில் காணப்படும் முஸ்லீம்களுக்கு எதிரான இனவாதப் பண்புகளை விமர்சித்து தமிழ் வெகுஜன அரசியல் உணர்வை முற்போக்கானதாக்குவது.

மேற்படி விடயங்களை மக்கள் அரசியல் தலைமையால் மேற்கொள்ளப்பட வேண்டிய முதன்மை செயற்பாடுகளாகக் காண்கிறேன்.

இதைவிடவும் சில கடப்பாடுகள் இத்தலைமைக்கு உண்டு,

தமிழர் தாயகத்துள் யுத்தத்தின் பிரதிபலிப்புகளாக மக்கள் இன்று எதிர்கொண்டுவரும் முக்கியமான பிரச்சினைகளையிட்டு மக்களை விழிப்புணர்வூட்டுவதும், தமது உரிமைக்காக மக்களை போராடச் செய்வதும். (உதாரணத்திற்கு: அதிகரித்து வரும் கள்ளச்சாராய உற்பத்தியும் விற்பனையும், கறுப்பு சந்தையும் பாதாள வர்த்தகமும், துரோகக் கும்பல்களும் சந்தர்ப்பவாத கும்பல்களும் மக்களிடம் வரி அறவிடுவதும் பொலிஸ்காரத்தனமாக நடந்து கொள்வதும், பெண்கள் மீது உள்ளூர் அளவில் அதிகரித்துவரும் பாலியல் வன்முறைகள், டியூட்டரிகள் எனும் பெயரில் நடைபெறும் மோசடிகள். . . போன்ற சமூக பிரச்சினைகள் அப்படியே புகைந்து கொண்டுள்ளன).

இப்படியாக ஒரு மக்கள் கவுன்சிலாகவும் செயற்படும் உரிமையை இத்தலைமை ஒருங்கே பெறுகிறது.

மேலும் இச்சந்தர்ப்பத்தில் நிகரி 4வது இதழில் அரவிந்தன் என்பவர் எழுதியிருந்த 'தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய சக்தி ஆகுமா?' எனும் விவாதக் கட்டுரையில், தமிழ் தேசிய எழுச்சிக்கு நிறுவன வடிவம் வழங்குவது தொடர்பாக அவர் முன்வைத்த கருத்துகள் பல கேள்விகளையும் எழுப்புகின்றன.

பிரக்ஞையான போராட்ட வடிவங்கள், தன்னெழுச்சியான போராட்ட வடிவங்கள் சார்ந்து ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகவே விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. பிரக்ஞையான போராட்ட வடிவம் எனப்படுவது குறிப்பிட்ட தத்துவார்த்த பின்புலத்தில் கோட்பாடுகள் உருவாக்கப்படுவது, கோட்பாட்டு சட்டகத்தை பிரயோகித்து வகுக்கப்படும் அரசியல் திட்டம், அரசியல் திட்டத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட அரசியல் மூலோபாயம் தந்திரோ பாயம், அமைப்பு விதிகள் மற்றும் தாபன அகக்கொள்கை, நீண்டகால குறுங்கால வேலைத்திட்டம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் ஜனநாயக மத்தியத்துவ அடிப் படையில் கீழிருந்து மேல்நோக்கி அதிகாரத்தை மையப்படுத்தும் அமைப்பு (இது பெரும்பாலும் கட்சி நிறுவனம் எனப்படும்) போராட்டத்தை வழிநடாத்தி செல்வதாகும்.

தன்னெழுச்சியான போராட்டங்கள் எனப்படுவது தமது நாளாந்த வாழ்வில் தாம் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளின் சுமைதாங்காது அவற்றை எதிர்த்து மக்கள் சுயமாக கிளர்ந்தெழுவதாகும். இப்போராட்டங்கள் பிரக்ஞையானவை அல்ல அவை இயல்பூக்கம் (instinct) சார்ந்தவை என்பது மரபுவழி அரசியல் சமூகவியலாளர்களின் கணிப்பீடு. பிரக்ஞையான போராட்டங்களே உயர்வானவை, இயல்பூக்கமான தன்னெழுச்சி போராட்டங்கள் இலக்குநோக்கி பயணிக்காது என்பது இடதுசாரி வட்டங்களில் இன்றுவரை நிலவி வருகிறது.

இவ்விருவகைப் போராட்டங்களுமே விடுதலைக்கு அவசியம், இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல் ஒன்றை ஒன்று பலப்படுத்துகின்றன என்பது இத்தாலிய கம்யூனிஸ்ட் அந்தோனியோ கிராம்சியின் நிலைப்பாடாகும்.

பகுதி கோரிக்கைகளுக்கான போராட்டங்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் முடிவடைந்து விடும், இறுதி இலக்குவரை அதாவது தேசவிடுதலைவரை அவர்களின் போராட்டங்கள் தொடராது என்பது அரவிந்தனின் தர்க்கத்தின் பின்புலமாகும். அதனால் அவர் நீண்டகால இலக்குடன் கூடிய பிரக்ஞையான போராட்ட வடிவம் ஒன்றை உருவாக்க வேண்டும் எனும் கருத்தை முன்வைக்கிறார். அரவிந்தனின் தர்க்கத்துடன் எனக்கு உடன்பாடே. இங்கு எனது வாதமெல்லாம் (பகுதி கோரிக்கைகளுக்கான போராட்ட சக்திகளையும் தேச சுயநிர்ணயத்திற்கான மக்களின் சுயமான எழுச்சிகளையும்) தன்னெழுச்சி போராட்ட சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து மேலும் செயற்திறன் மிக்கதாக்குவது எவ்வாறு என்பதுதான்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பகுதி தேவைகளுக்கான மக்கள் போராட்டங்கள் விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்தி வந்திருப்பது கண்கூடு. ஆரம்பகாலத்தில் யாழ் அன்னையர் முன்னணி தமது பிள்ளைகள் சகோதரர்களின் கைதுகளுக்கும் சித்திரவதைகளுக்கும் எதிராக மேற்கொண்ட போராட்டங்-

தொடர்ச்சி 12ம் பக்கம்...

## மீண்டும் மேடைக்கு...

9ம் பக்கத் தொடர்ச்சி

நினைப்பதும் பயங்கரமான முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாததேயாகும். எமக்கு இன்று தேவையாக இருப்பது இந்த இரண்டு தீவிரவாதப் போக்குகளுமல்ல. மடு தேவாலய அருட்தந்தை கூறியவாறு பொதுமக்களை மையமாகக் கொண்ட போர் நிறுத்தமொன்றிற்காகவும், சமாதானச் செயற்பாடுகளுக்காகவும் முன் நிற்பதே.

உண்மையிலேயே சமாதானத்தை எதிர்பார்த்து நிற்கும் மக்கள் இன்று பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் எதிர்பார்த்து நிற்பது அதுபோன்றதொரு செயற்பாட்டையே. காரணம் சமாதானச் செயற்பாட்டை எதிர்ப்பதனால் அக்கட்சிக்கும் நாட்டுக்கும் எந்தவிதமான நன்மைகளும் கிடைப்பதற்கில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அத்தனகலைத் தொகுதி கட்சி அங்கத்தவர்களுக்கு ஆற்றிய உரையையும் விட வித்தியாசமான உரையொன்றை ஆசிய உல்லாசப் பிரயாணத்துறை பிரதிநிதிகள் மத்தியில் ஆற்றியுள்ளார். அங்கு அவர் அரசாங்கத்தின் சமாதானச் செயற்பாடுகள் வெற்றிபெறுமென தான் நம்புவதாகக் கூறியுள்ளார். இன்று எமது நாட்டுக்குத் தேவையாக இருப்பது நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்தவர்களுக்கும் ஒரே கருத்தை முன்வைக்கக் கூடிய அரசியல் கலாசார முறையொன்றே. அனுருத்த ரத்வத்தை கைது செய்யப்படுவாரென தமிழ் நெற் இணையத்தளத்தில் கூறப்பட்டதால் அது புலிகளுடன் கூட்டாக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சியொன்றென குறிப்பிட்ட மைத்திரிபால சிறிசேனாவின் கூற்றும் அது போன்ற இரட்டை வேஷக் கருத்தேயாகும். அனுருத்த ரத்வத்தையைக் கைது செய்தல் விடுதலைப் புலிகளின் தேவைக்கே எனக் குறிப்பிடுவது இனவாதத்தைக் கிளப்புவதேயாகும். அனுருத்த ரத்வத்தை கைதுசெய்யப்படுவாரென இரண்டு வாரங்களுக்கு முன் ராவய பத்திரிகை குறிப்பிட்டது. மேற்கூறப்பட்ட தமிழ் நெட் இணையத்தளம் அந்தச் செய்தியையே மேற்கோள் காட்டியிருந்தது. அனுருத்த ரத்வத்தை கைது செய்யப்பட்டதை ஏதாவதொரு இனவாதத் தூண்டுதலுக்காக வேண்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பயன்படுத்த மாட்டாதென நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நிகரி
NIHARI
83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.co.uk

Registred as a Newspaper

# மக்கள், மக்கள் மட்டுமே...

இராணுவத் தளபதிக்கு கடித மூலம் வழங்கும் ஒரு அறிவித்தல் மூலமாக ரணில் - பிரபா ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய என்னால் முடியும் என்று ஜனாதிபதி ஜா -எல இல் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதற்குப் பதிலளித்து அறிக்கைவிட்ட அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஜனாதிபதிக்கு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும் அதிகாரம் கிடையாது என்று தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் இந்த அறிக்கை வந்த மறு நாள் ஜனாதிபதி அப்படிக் கூறவில்லை என்ற மறுப்பறிக்கையை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டிருந்தது. ஜனாதிபதியின் செயலாளரும் இந்த மறுப்பை உறுதி செய்வது போல அப்படி அவர் பேசவில்லை என்று தெரிவித்திருந்தார். பத்திரிகைகள் எல்லாம் - குறிப்பாக தமிழ் பத்திரிகைகள் - முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. ஆனால் இவை தாம் வெளியிட்ட செய்தி உண்மை தான் என்றோ அல்லது தாம் தவறிழைத்ததாகவோ வருத்தம் தெரிவிக்கவில்லை. வழமையான முதுகெலும்பு அற்ற தனத்துடன் இந்தச் செய்தி மறுப்டை அப்படியே பிரசுரித்திருக்கின்றன அவை.

ஊடகத்துறையினர் தகவல்களை வெளியிடும் போது அவற்றை செம்மையானவையாக. தவறற்றவையா என்று ஒரு முறைக்கு இருமுறை சரிபார்த்து வெளியிட வேண்டும். அதுவும் இது போன்ற தகவல்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தகவலை பிழை என மறுப்பவர்க்கு மறுப்பை வெளியிடும் உரிமையை மறுக்கக் கூடாது என்பது சரிதான். ஆனால் தாம் வெளியிட்ட செய்தி உண்மைதான் என்று உறுதியாகக் கூறுவதில் என்ன தயக்கம்? இந்தத் தயக்கம் தான் இன்று அரசியல்வாதிகளுக்கு வாயில் வந்தபடி பேசவும் பேசிவிட்டு மறுக்கவும் வாய்ப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது. ஊடகத்துறை சமூகத்தின் காவல் நாயாகத் தொழிற்பட வேண்டும் என்பதை ஊடகத் துறையினர் கவனத்தில் எடுக்காவிட்டால் இந்த நிலை தொடர்ந்து நீடிக்கவே செய்யும். அவர்கள் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் ' என்ற மாதிரி நடப்பது எப்போதும் தொடரவே செய்யும்.

ஊடகத்துறை விழிப்பாக இருந்திருந்தால் ஜனாதிபதியின் மறுப்புரை 'நான் அப்படிச் சொல்லவில்லை.' என்று அமைவதற்குப் பதில், 'நான் அப்படிச் சொன்னது தவறு' என்று வெளிவந்திருக்கும். அப்படி ஊடகத்துறை விழிப்பாக இல்லாததால். அவர் அனைத்து ஊடகத்துறையினரையும் முட்டாள் பட்டம் கட்டிவிட்டிருக்கிறர்.

இதே ஜனாதிபதி, இன்றைய ஊடகத்துறையின் இந்த மௌனத்தை 'விழிப்பற்ற' முதுகெலும்பற்ற நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு விரைவிலேயே 'ஊடகத்துறையினர் பொறுப்பற்று நடந்து கொள்கிறார்கள் என்று அறிவிக்க அதிக நாள் எடுக்காது. அந்த அறிவிப்பு ஊடகத் துறையை சட்டபூர்வமாக கட்டிப் போட வாய்ப்பளிக்கவும் செய்யும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஜனாதிபதிக்கு அப்படிச் செய்ய - ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய - அதிகாரம் இல்லை என்று பீரிஸ் சொன்னது ஒரு முடிந்த முடிவான கருத்தல்ல. இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் ஜனாதிபதிக்குள்ளான அதிகாரங்கள் தொடர்பான சரத்துக்கள் இத்தகைய ஒரு சந்தர்ப்பம் தொடர்பாக தெளிவாக எநத விதியையும் கொண்டிருக்கவில்லை. எனவே பீரிஸ் அவர்களின் மறுப்பு விவாதத்துக்கும் நீதிமன்ற முடிவுக்கும் உரியது. ஆனால் ஜனாதிபதியால் மீண்டும் யுத்தத்துக்கான உத்தரவைப் பிறப்பிக்கவும் அவசரகால சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரவும் முடியும்.

எனவே ஜனாதிபதியிடம் அத்தகைய ஒரு நோக்கம் இருக்குமாக இருந்தால், அதை நடைமுறைப்படுத்த முடியாது என்று அடித்துக் கூறிவிட முடியாது. காரணங்கள் எதையும் உடனடியாக அறிவிக்காமல், தனது தன்றுணிவின்படி செயற்படும் அதிகாரம் இம்மாதிரி விடயங்களில் அவருக்கு இருக்கிறது. தவிரவும் உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு விரோதமாக தீர்ப்பை எழுதும் என்று நம்பக் கூடிய ஒரு சூழலில் நாம் இல்லை என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

வெளிப்படையாக தெரிவிக்கப்படாத சட்ட விதிகளை வியாக்கியானம் செய்ய நீதிமன்றத்திற்குப் போனால், உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பே இறுதியானதாகி விடும். தவிரவும் அந்தத் தீர்வு பிறகு ஒரு வழக்கிலுள்ள, சட்டமாகவும் மாறிவிடும்.

எனவே ஊடகத்துறையினர் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா பெரும்பாலான பகிரங்க மேடைகளில் நாட்டின் அரசுத் தலைவர், ஜனாதிபதி என்ற பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதில் கூட கட்டற்ற அதிகாரங்களை கையில் வைத்திருக்கும் ஒருவர் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்புணர்வை அவர் கடைப்பிடிப்பதில்லை. மாறாக ஒரு சராசரி அரசியல்வாதியைப் போலவே அவர் நடந்து கொள்வார். புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பின்னும் அவரிடம் 'எனது அரசாங்கம்' தான் அது என்ற எண்ணம் உருவாகவில்லை. இன்னமும் முன்னைய அரசாங்கமே தன்னுடையது என்ற அபிப்பிராயமே அவரிடம் நிலவுகிறது.

ஒருவர் ஜனாதிபதியாகவும் ஒரு கட்சியின் தலைவராகவும் இருக்கிற நிலை நீடிக்கையில் இந்த மாதிரியான இரட்டைத்தன்மை அல்லது இரட்டை முகம் ஏற்படுவது இயல்பானதாகும். இலங்கை இந்திய ஒப்பந்ததில் கைச்சாத்திட்ட முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர்.தான் ஜனாதிபதியாக அதைச் செய்தாலும், மதத் தலைவர் என்ற முறையில் அதை ஏற்கவில்லை என்று அறிவித்திருந்தார். அவர் இரண்டு விதமான பாத்திரங்களில் நடித்த போதும், பெரும்பாலும் ஐ.தே.கவின் நலன்களே ஜனாதியதிப் பதவியில் செல்வாக்குச் செலுத்தியது என்ற போதும் குறைந்தபட்சம் இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகளைப் புரிந்து வைத்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அந்தப் புரிதல் இல்லை. அவர் இரண்டும் ஒன்றென கருதிச் செயற்பட்டு வருகிறார்.

எனவே தான் ஊடகத் துறையினர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் கட்டற்றுப் போவதை கட்டுப்படுத்தும் விதத்தில் அவர்கள் கடமையை ஆற்ற வேண்டும். அதுவும் சமாதான வாய்ப்புக்கள் மிகவும் நெருங்கி வந்துள்ள ஒரு சூழலில் இது மிகவும் முக்கியமானது.

அரசியல்வாதிகளை திருப்திப் படுத்துவதல்ல, மக்களுக்கு உண்மையை உறுதியாகத் தெரிவிப்பதே அவர்களது கடமையும் பணியும் என்பதை மறந்துவிடக் கூடாது. இதை ஊடகத்துறையினர் விளங்கிக் கொண்டால் இந்த நாட்டில் பல வெற்றிகரமான மாற்றங்கள் ஏற்படுவதற்கு அவர்களால் பயனுள்ள பங்காற்ற முடியும்.

ஏனென்றால், மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றை நடாத்திச் செல்லும் உந்து சக்திகள் என்பது ஒரு அசைக்க முடியாத உண்மை!

# பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்காக வவுனியா நகர் எழுச்சிக் கோலம்!

காலத்திற்கேற்ற போராட்ட வடிவமாற்றத்திற்கேற்ப யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு முதலாவது வருடத்தை தொட்டு வீறுநடை போடுகிறது. இதன் தொடராக மன்னாரில் தமிழ் எங்கள் உயிர், மட்டுநகரில் பொங்கு தமிழ் என தொடர்ந்து தற்போது வன்னியின் தலைநகர் வவுனியாவில் பொங்கு தமிழ் மையம் கொண்டுள்ளது.

இதனால் வவுனியா நகரமே எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. நகரரெங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க "தூங்கிய தமிழினமே துடித்தெழு", "அடிமைத்தனம் நீங்கி அகிலம் போற்றிட பொங்கி-எழு" எனும் வாசகங்கள பொறிக்கப்பட்ட பதாதைகளும் நகரின் பலபாகங்களிலும் காணப்படுகிறது. வவுனியாவில் கிராமங்கள், வாகனங்கள் என திரும்பும் பக்கமெல்லாம் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கிறது. அரச அலுவலகங்களும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக இறுதி நாளான வெள்ளிக்கிழமை வைத்திய நிலையங்கள், உணவகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஸ்தாபனங்களையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுள்ளனர். பொங்கு-தமிழ் தமிழரின் மகத்தான பங்கு இறுதிநாளான வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை திறந்தவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

# அவை உணர்த்தும் செய்திதான் என்ன?

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாக முன்னரே அதன் நகல்வரைவு எவ்வாறோ கசிய, அதைத் தாங்கிய வண்ணம் குறித்த சில தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். எதிர்ப்பு காட்டியதில் முக்கியமான தரப்பாக மக்கள் விடுதலை முன்னணி திகழ்ந்தது. இவர்கள் நாடுபூராகவும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியும், சுவரொட்டிகளை ஒட்டியும் அறிக்கை மேல் அறிக்கை விட்டும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். நாளுக்கொரு வடிவத்தில் சுவரொட்டிகளை ஒட்டியமை குறிப்பிடத்தக்கது. இடையில் ஓய்ந்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்புகள், ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின் மீண்டும் கடுமையாக எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. இதன் பலாபலன்களை இனிவரும் காலங்களே நிர்ணயிக்க வேண்டும்.

இவர்களின் சுவரொட்டிகளை பார்த்தால் நாடும் மக்களும் முட்டாள் நிலைக்குள்ளாகி திக்குத்தெரியாத திசையில் செல்லும் வேளையில் தாமே தேவபுருஷமீட்பராகி வந்துள்ளதாக எண்ண வைக்கிறது. மூவினத்திலும் கரிசனை உடையவர்களாக காட்டிக் கொள்கிற போதும் மறைவில் பச்சை இனவாதமே கக்குகின்றார்கள். உண்மையில் சிறுபான்மையினருக்கும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் எதிரான, செயற்பாட்டில் சிஹல உறுமயவையும் விஞ்சுமாற்போல் செயல்படுகிறார்கள். மறுபுறத்தில் சமாதானத்திற்கு ஆதரவான ஐம்பது அமைப்புகளின் இணைவும், தேசிய சமாதானப் பேரவையின் "சமாதானத்திற்கான யுத்தத்தை எதிர்த்து" இன்றைய சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவளிப்போம் போன்ற சுவரொட்டிகளும் தென்படவே செய்கிறது. இவை உணர்த்தும் செய்தி தான் என்ன?

# நோபல் பரிசு சமாதானத்திற்கா? பயங்கரவாதத்திற்கா?

சமாதானத்திற்கான நோபல் பரிசிற்காக ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷினதும், ரொனி பிளெயரினதும் பெயர்களை நோர்வே முற்போக்கு முன்னணியின் (Right - wing Party of Progress) நாடாளுமன்ற உறுப்பினர் ஹரல்ட் ரொம் நெஸ்விக் பரிந்துரை செய்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் பெயர் "பயங்கரவாதத்திற்கெதிரான தீர்க்கமான செயலு"க்காகவே சமாதான நோபல் பரிசிற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவரது நடவடிக்கை எதிர்காலத்தில் சமாதானத்திற்கே ஒரு பெரும் அச்சுறுத்தலாக அமையப் போகிறது என்பது வேறு விடயம். அத்தோடு ரொனி பிளெயருக்கு இரண்டாம் உலக யுத்தத்தின் பின் எந்த பிரிட்டிஷ் தலைவர்களும் உத்தரவிடாத அளவிற்கு இராணுவ உத்தரவுகளைப் பிறப்பித்தற்கோ என்னவோ அவரின் பெயரும் புஷ்ஷின் பெயருடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஆப்கான் யுத்தத்தில் புஷ்ஷிற்கு அவர் அளித்த பங்கு அளப்பரியதல்லவா?

செப்.11 அமெரிக்கா மீதான தாக்குதலை அடுத்து ஆப்கான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. ஆப்கானில் ஒரு சிறு பகுதியையும் விட்டு விடாமல் குண்டுகளால் துளைத்தெடுத்த அமெரிக்கா தனது போர் வெறியில் ஏராளமான ஆப்கான் மக்களைக் கொன்று குவித்தது.

ஆயினும் அமெரிக்கா தன் மீது விழுநத அடியின் வலி பொறுக்க முடியாது இந்தப் போர் பயங்கரவாதத்திற்கு எதிரான முடிவுறாத போர் என்று அறிவித்தது. புஷ் அமெரிக்காவின் வரவு செலவுத் தொகையில் யுத்தத்திற்கான தொகையை அதிகமாக உயர்த்தி உள்ளார் அத்தோடு கொலம்பிய உள்நாட்டு போரிலும், பலஸ்தீனத்திற்கெதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிற்கும் உதவுவதற்காக இராணுவ உதவியை அதிகரித்துள்ளார்.

இந்நிலையில் புஷ் இன் முடிவுறாத யுத்தம் ஈரான், ஈராக், வடகொரியா போன்றவற்றிற்கு எதிரான மிரட்டல்களாக வெளிப்பட்டுவருகிறது.

புஷ் ஆப்கான் மீது போர தொடுப்பதற்கு முன் ஐக்கிய நாடுகள் சபையிடம் அனுமதி பெற மறுத்துள்ளது போல. பிளெயரும் பிரிட்டிஷ் துருப்புகள் நிலைகொண்டுள்ள சியெரா லியோனினை ஐக்கிய நாடுகள் சமாதானம் பேணும் படையணியிடம் ஒப்படைக்க மறுத்துள்ளார்.

உலகளாவிய போர்ப் பிரச்சாரம் என்னும் நீடித்துப் பரவக்கூடிய இவர்களின் 'பயங்கரவாதத்திற்கு எதிரான' போர் ஆகியனவற்றால் இவர்கள் உலக சமாதானத்துக்கு ஆற்றிய பங்கு என்ன என்பது யாவருமறிந்ததே. இவர்களுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசை வழங்கினால் அது உண்மையில் 'சமாதானத்தின் முகத்திற்கு' கிடைக்கும் ஒரு அடியாகவே இருக்கும்.

வேண்டுமானால் 'பயங்கரவாதத்திற்கான நோபல் பரிசிற்காக' இவர்களது பெயர்களை (கூடவே ஒசாமா பின்லாடனையும் சேர்க்கலாம்) சிபாரிசு செய்யலாம்.

# தன்னியல்பான போராட்ட ....

11ம் பக்கத் தொடர்ச்சி

கள் அரசை அம்பலப்படுத்தின. அது போராட்டத்திற்கு சாதகமாயமைந்தது. இது ஒரு மிகச்சிறு உதாரணம்தான். இன்று பல்வேறு பகுதி கோரிக்கைகளுக்கான உரிமைப் போராட்டங்கள் உட்பட சுயநிர்ணயத்திற்காக மக்களது தன்னெழுச்சியான போராட்டங்களும் நடைபெறுகின்றன: இவை, விடுதலைப் போராட்டத்தை புலப்படுத்தி வருவது மறுக்கப்பட முடியாததாகும்.

இந்த வெகுஜன எழுச்சியை மேலும் நெறிப்படுத்தவும், வெகுஜன கோரிக்கைகளை (உம்: பாஸ்முறையை முற்றாக ஒழிப்பது, நடமாடும் சோதனை சாவடிகளை ஒழிப்பது, அரசியல் கைதிகள் விடுதலை, கடற்றொழிலாளர் உரிமை) கூட இறுதிவரை போராடி முழுமையாக வென்றுகொள்ளவும், வெகுஜன எழுச்சிக்கு அரசியல் வடிவம் கொடுக்கவும் ஒரு நிறுவனம், அரசியல் தலைமை தேவைப்படுகிறது. இந்த மக்கள் அரசியல் தலைமையானது அரவிந்தன் கூறும் அரசியல் வடிவத்திலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டதாகும்.

பகுதிப் போராட்டங்கள் (கடற்றொழிலாளர், மாணவர், ஆசிரியர், அரசியல் கைதிகள். . போராட்டங்கள்) மற்றும் பொதுப் போராட்டம் (தமிழீழ விடுதலைப் போராட்டம்) பற்றி நமது சிந்தனையில் பதிந்திருக்கும் கருத்துகளை மீள் பரிசீலிப்பதும் அவசியமாகும். இச்சந்தர்ப்பத்தில் நிகரி 5வது இதழில் கங்கா என்பவர் வாசகர் பகுதியில் எழுதியிருந்த கருத்துகளையும் கவனிப்பது நல்லது.

பகுதிப் போராட்டம் செய்யும் சமூகப் பிரிவினரது நலன்கள் தேச விடுதலையுடன் பிணைந்திருப்பதால் அவர்கள் தேச விடுதலையின் இறுதி வெற்றிவரை பயணித்துத்தான் ஆக வேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் சோவினிச அடக்குமுறையை நேரடியாக எதிர்கொள்ளும் தமிழீழ மக்களாக இருக்கிறார்கள்.

தேசம் அல்லது தேசியஇனம் என்பது பல்வேறு சமூகப் பிரிவுகளின் தொகுப்பாகவும் இருக்கிறது. ஒவ்வொரு சமூகப் பிரிவினதும் சமூக வாழ்வின் ஆணிவேரை அறுத்தெறிவதன் மூலம் அச்சமூகப் பிரிவினரை செயலற்ற நிலைக்குத் தள்ளுவது, அதனூடாக தேசத்தை செயலற்ற நிலைக்குத் தள்ளுவது தேச அடக்குமுறையின் ஒரு வடிவமாகும்.

அவ்வகையில் தேச அடக்குமுறையின் குறிப்பான பண்புகளும் பகுதிப் போராட்டம் மற்றும் பொதுப் போராட்டம் ஆகியவற்றிற்கிடையிலான உறவைத் தீர்மானிக்கின்றனவையாய் இருக்கின்றன. காலமும் சமூகத் தேவைகளும் போராட்ட வடிவங்களையும் தாபன வடிவங்களையும் புதிது புதிதாய் கேட்கின்றன. எனவே மாற்றங்களுக்கேற்ப புதிய தாபனவடிவங்களை புதிய போராட்ட வடிவங்களை முன்னெடுப்பது விடுதலை நோக்கி பயணிக்கும் சமூகத்திற்கு அவசியமாயிருக்கிறது.

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவய அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது